விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபது

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஆனி 31 வியாழக்கிழமை (15.07.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 208

ரா ம் கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

RAMCO

## எரிபொருள்களின் விலை யாழ்ப்பாணத்தில் குறைப்பு

(கொழும்பு)

யாழ்.மாவட்டத்தில் பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் போன்றவற்றின் விலைகள் லீற்றர் ஒன்றுக்கு 3 ரூபாயால் குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் பெற்றோல் ஒரு லீற்றர் 115 ரூபாயாகவும் டீசல் ரூபாய் 73.50 ஆகவும் மண்ணெண்ணெய் 51 ரூபாயாகவும் விற்பனை செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## பொலிஸ், இராணுவப் பாதுகாப்புடன் டாக்டர் பிரியந்த வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

விசாரணையின் போது தாக்கப்பட்டதாகத் தெரிவித்து டாக்டர் பிரியந்த செனவிரட்ன நேற்றிரவு யாழ்.போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குடும்பநல உத்தியோகத்தர் ச.தர்சிகாவின் மர்ம மரணம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட டாக்டர் பிரியந்த செனவிரட்ன நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இந் நிலையில் விசாரணையின் போது தான் தாக்கப்பட்டதாகத் தெரிவித்து நேற்றிரவு 7.30 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுப் பின்னர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளார்.

அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த ஒருவர் அங்கிருந்து மாற்றப்பட்டு வைத்தியர் பிரியந்தவை அங்கு அனுமதித்ததாகக் கூறப்பட்டது.

இதேவேளை (20 ஆம் பக்கம் பார்க்க)

# நாட்டின் மீது அன்பு கொள்ளும் அனைவரும் இலங்கையர்களே

## கிளிநொச்சியில் ஜனாதிபதி உரை

(கிளிநொச்சி)

இனவாதம், பிரிவினைவாதம், அகங்காரவாதம் என்பன இனி வேண்டாம். சிறுபான்மையினர் என யாரும் இல்லை. நாட்டின் மீது அன்பு கொள்ளும் அனைவரும் இலங்கையர்களே என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். நேற்றுக் கிளிநொச்சியில் பொது மக்களைச் சந்தித்துப் பேசிய போதே அவர் இதனைக் கூறினார். (19 ஆம் பக்கம் பார்க்க)

## தர்சிகாவின் மர்ம மரண விசாரணை வைத்தியருக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

குடும்பநல உத்தியோகத்தரான ச.தர்சிகாவின் மர்ம மரணம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட வைத்தியர் பிரியந்த செனவிரட்னவை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதிபதி ஆர்.வசந்தசேனன் உத்தரவிட்டார்.

குடும்பநல உத்தியோகத்தர் ச.தர்சிகாவின் மரணம் தொடர்பான வழக்கு நேற்று ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஆர். வசந்தசேனன் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது.

இவ் வழக்கின் சந்தேக நபரான வைத்தியர் பிரியந்த செனவிரட்ன ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

நேற்று மேற் (20 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லை அரச அதிபராக வேதநாயகம் பதவியேற்பு

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு அரசாங்க அதிபரான நாகலிங்கம் வேதநாயகம் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

ஜனாதிபதி கிளிநொச்சிக்கு விஜயம் செய்திருந்த நிலையிலேயே இந்தப் பதவியேற்பு இடம்பெற்றுள்ளது.

இவர் ஏற்கனவே கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபராகக் கடமையாற்றி வந்தார். இந்த நிலையில் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்புடன் தொடர்பு கொண்டிருந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டார்.

எனினும் பலமாதங்களின் பின்னர் குற்றமற்றவர் என அறிவித்து அவர் விடுதலை செய்யப்பட்டார்.

இந்த நிலையில் (20 ஆம் பக்கம் பார்க்க)



கிளிநொச்சிக்கு நேற்று விஜயம் செய்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பொதுமக்கள் மத்தியில் உரையாற்றுவதைப் படங்களில் காணலாம்.

## தூதரகத்தை மூடுமாறு ஆர்ப்பாட்டம் சென்னையில் வைகோ, நெடுமாறன் கைது

(சென்னை)

இந்தியாவின் சென்னை நகரிலுள்ள இலங்கைத் தூதரகத்தை மூடுமாறு வலியுறுத்தி நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பழ. நெடுமாறன், வைகோ உட்பட பலர் தமிழகப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதாக அந் நாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இலங்கைத் தமிழர்களில் பலர் தொடர்ந்தும் முகாம்களிலேயே தடுத்து வைக்கப்பட்டுள்ளமை, ஐக்கிய நாடுகள் சபைக்கு எதிரான இலங்கை அரசின் போக்கு மற்றும் தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந் நிலையிலேயே இலங்கை அரசுக்குத் தமிழக மக்களின் கண்டனத்தைத் தெரிவிக்கும் வகையில் சென்னையிலுள்ள இலங்கைத் துணைத் (20 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. செயலரின் மீள் நியமனத்தை தடுப்பதற்கு இலங்கை அரசு முயற்சி?


(கொழும்பு)



ஐ.நா. செயலாளர் நாயகம் மீண்டும் பதவிக்கு வருகின்றமையைத் தடுக்கும் நடவடிக்கையில் இலங்கை அரசு மும்முரமாக ஈடுபட்டுள்ளதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனின் இப் பதவிக் காலம் அடுத்த வருடத்துடன் நிறைவடைகின்றது. ஆனால் அவர் மீண்டும் செயலாளர் நாயகமாக மீள் நியமனம் பெற ஐ.நா. சட்டத்தில் இடமுண்டு.

ஐ.நாவின் பாதுகாப்புச் சபையால் முன்மொழியப்பட்டு பொதுச் சபையால் அவர் மீள் நியமனம் செய்யப்படலாம். பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் நாடுகள் 15. அவற்றுள் நிரந்தர அங்கத்துவ நாடுகள் 5. இந்த 5 நாடுகளில் ஒன்று கூட மீண்டும் பான் கீ மூன் செயலாளர் நாயகமாக வரக் கூடாது என்று வீட்டோ (20 ஆம் பக்கம் பார்க்க)





அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அழைத்துவரப்படுவதையும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி வெற்றிலை கொடுத்து ஜனாதிபதியை வரவேற்பதையும், அமைச்சர்களையும் மேலுள்ள படங்களிலும் பொதுமக்களுக்கான கூட்டத்தில் கலந்துகொண்ட அமைச்சர்கள் மற்றும் அரச உயர் அதிகாரிகளையும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பெண் ஒருவருக்கு தையல் இயந்திரம் கையளிப்பதையும் மற்றைய படங்களிலும் காணலாம்.

# ஐ.நா. சபையின் நிபுணர்கள் குழு அதிகாரமளிக்கப்பட்டதல்ல!

## பாலித கொஹன்ன விளக்கம்

(கொழும்பு)

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனினால் நியமிக்கப்பட்ட இலங்கை தொடர்பான நிபுணர் குழுவானது ஐ.நாவின் தீர்மானிக்கும் அதிகாரமுடைய எந்தவொரு அமைப்பினாலும் அதிகாரமளிக்கப்பட்ட ஒன்றல்ல என ஐ.நாவுக்கான இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி கலாநிதி பாலித கொஹன்ன கூறியுள்ளார்.

மின்னஞ்சல் மூலமாக டெய்லி மிரர் இணையத்தளத்தின் கேள்வியொன்றுக்கு பதிலளித்தபோது கலாநிதி பாலித கொஹன்ன இவ்வாறு கூறியுள்ளார்.

கடந்தவருடம் மேற்கொள்ளப்பட்ட இது போன்ற நடவடிக்கையொன்று ஐ.நா. மனித உரிமைகள் சபையினால் நிராகரிக்கப்பட்டதையும் கலாநிதி பாலித கொஹன்ன சுட்டிக் காட்டியுள்ளார்.

கடந்த வருடம் மே மாதம் 23ஆம் திகதி இலங்கை அரசாங்கமும் ஐ.நாவும் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையின் நோக்கங்களுக்கு அமைவாகவே தனக்கு ஆலோசனை வழங்குவதற்காக மூன்று பேர் கொண்ட இந்த நிபுணர் குழு நியமிக்கப்பட்டுள்ளதாக பான் கீ கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# முன்னோடிப்பரீட்சை முடிபுகளை இணையத்தளத்தில் பார்வையிட முடியும்

(கொழும்பு)

தமிழ் மாணவர்களின் நன்மை கருதி இலங்கையில் முதல் முறையாக மொறட்டுவ பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவர்களால் கடந்த மாத இறுதியில் நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட கணித, உயிரியல் பிரிவு மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சை முடிபுகள் நேற்று வெளியாகி உள்ளன.

மேற்படி பரீட்சையில் நாடளாவிய ரீதியில் 3 ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்களுக்கு நடத்தப்பட்டது. பரீட்சை முடிபுகளை www.mora08tamils.net என்ற இணையத்தளத்தினூடாக பார்வையிட முடியும்.

நடைபெற்ற பரீட்சை வினாத்தாள்களையும் விடைத்தாள்களையும் இவ் இணைத் தளத்திலிருந்து தரவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

முழு பெறுபேறுகளும் பரீட்சை நடைபெற்ற நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு உள்ளன. ஒருவரின் பெறுபேற்றை அவர் மாத்திரமே பார்வையிட முடியும்.

மேலதிக தகவல்களுக்கு பெறுபேறுகளில் மாற்றம் இருப்பின் உங்களுடைய முழு விபரங்களுடன் mor08tamils@yahoo.com என்ற மின்னஞ்சல் முகவரியூடாக தொடர்பு கொள்ளவும்.

இது ஒரு முன்னோடி பயிற்சி பரீட்சை மாத்திரமே. எனவே தவறுகளை திருத்தி கொண்டு இறுதி பரீட்சைக்கு தயாராகுமாறு அனைத்து மாணவர்களையும் கேட்டுக்கொள்கிறோம் என மொறட்டுவ பல்கலைக்கழக பௌதிகவியல் பீட தமிழ் மாணவர்கள் சங்கம் அறிவித்துள்ளது. (ச)

# பொருளியல் பாடக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான பொருளியல் பாட இலவச கருத்தரங்கு இன்றும் நாளையும் 8.30 இலிருந்து 1.30 மணி வரை யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறுகிறது.

இக் கருத்தரங்கில் கலாநிதி ரவீந்திரன், கலாநிதி கணேஷ மூர்த்தி ஆகியோர் விரிவுரைகளை நிகழ்த்துவர்.

மாணவர்களை கலந்து கொண்டு பயன் பெறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-3)

# வீரவன்ச போன்றோரின் செயலால் தமிழீழப் பிரசாரம் வலுப்பெறும்

## மங்கள சமரவீர எச்சரிக்கை

(கொழும்பு)

ஜே.என்.பியின் தலைவர் விமல் வீரவன்ச போன்றவர்களின் நடவடிக்கைகளினால் ஈழப் பிரசாரம் வலுப்பெறுமென சிறிலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் தலைவர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கை இந்தக் காலப் பகுதியில் கடுமையான சவால்களை எதிர்நோக்கி வருவதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

கிணற்றுத் தவளை போன்ற ராஜதந்திர அணுகுமுறை நாட்டை சர்வதேச ரீதியில் இழிவுபடுத்தக் கூடும். விமல் வீரவன்ச போன்றவர்களினாலேயே நாட்டுக்குப் பாரிய அச்சுறுத்தல் நிலவுகின்றது. உண்மையில் இவர்களே நாட்டின் இறைமைக்குக் குந்தகம் ஏற்படுத்துவோர்.

ஜே.என்.பி. தலைவர் விமல் வீரவன்சவைக் குற்றம் சுமத்த முடியாது. ஏனெனில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இயக்கத்தில் நடிக்கும் ஓர் நடிகனாகவே வீரவன்சவை நோக்க வேண்டும்.

சர்வதேச சமூகத்துடனான விவகாரங்களின் போது இலங்கை அரசாங்கம் பொறுப்புணர்ச்சியுடன் செயற்பட வேண்டும்.

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை ஆகியவற்றுடன் சுமூகமான உறவுகளைப் பேண வேண்டியது அவசியம்.

இல்லையொன்றால் சிம்பாவே அல்லது மியன்மாரின் வழிப்பாதைகளைப் பின்பற்ற நேரிடும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சர்வதேச சமூகத்தில் இலங்கைக்கு நன்மதிப்பு காணப்பட்டதென்பதனை அனைவரும் நினைவில் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

அரசாங்கத்தின் சில நடவடிக்கைகளின் காரணமாக சர்வதேச சமூகத்துடன் சுமூகமான உறவுகளைப்பேண முடியாதநிலைஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

# யாழ். மாவட்டத்தை அபிவிருத்திப்பாதையில் கொண்டு சென்ற பெருமை கணேஷுக்கே உரியது

## யாழ். வணிகர் கழகம் புகழாரம்

(யாழ்ப்பாணம்)

பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் யாழ்.மாவட்டத்தை அபிவிருத்திப்பாதையில் கொண்டுசென்ற யாழ். மாவட்ட முன்னாள் அரச அதிபர் க.கணேஷின் பணி பாராட்டுக்குரியது என யாழ். வணிகர் கழகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் வணிகர் கழகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு,

மன்னார், வவுனியா மாவட்டங்களில் அரச அதிபராக கடமையாற்றி பின் 01.01.2005 தொடக்கம் 13.07.2010 வரை யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றி மிகவும் நெருக்கமான சூழ்நிலையில் பொறுமையுடனும் அர்ப்பணிப்பு உணர்வுடனும் தனது பல வருட நிர்வாக அனுபவத்தின் மூலம் யாழ். மாவட்டத்தை வழி நடத்திய அரசாங்க அதிபர் க.கணேஷ் அவர்கள்.

யாழ். மாவட்டத்தில் அரச அதிபராக இருந்த காலத்தில் ஏற்பட்ட சுனாமி இயற்கை அனர்த்தம், இடம்பெயர்வுகள், தரவழிப்பாதை மூடப்பட்டமை, வன்னியில் இருந்து இடம் பெயர்ந்து நிவாரணக் கிராமங்களில் வாழ்ந்த மக்களை நிவாரணத்துடன் மீள் குடியமர்த்தியமை, உயர்பாதுகாப்பு வலயப் பிரதேசங்களில் குறிப்பிட்ட அளவான மக்களை மீள்குடியமர்த்துதல் போன்ற சேவைகளில் தன்னை அர்பணித்ததோடல்லாமல்.

யாழ்.மாவட்டம் அபிவிருத்திப் பாதையில் பயணிப்பதற்கான பல வேலைத்திட்டங்களை அந்தந்த நேரத்தில் பொறுப்புணர்வுடன் செயற்பட்டு முன்னேற்றப்பாதையில் இட் டுச்சென்று இக்கட்டான சூழ்நிலையிலும் இன்னுயிர் காத்த அவரது சேவை பாராட்டுக்குரியதாகும்.

க.கணேஷ் அவர்கள் தமது பணிகளை கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற கோட்பாடுகளுக்கமைய சேவையாற்றியதுடன் தினமும் காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணிக்கு மேலும் மிகவும் நெருக்கமான கால கட்டங்களில் கூட தனது அலுவலகத்தை சனி, ஞாயிற்றுக்கிழமைகள் பாராது எல்லா நாட்களிலும் திறந்து பணியாற்றியமை பாராட்டுவதற்குரியதாகும்.

யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபராக இருந்த கணேஷ் அவர்கள் கடினமாக உழைத்து யாழ். மாவட்ட சமூக பொருளாதார, கலாசார நிர்வாகத்தை வகிக்கும் மாவட்ட மாக திகழ வைத்தமை, வீதிகளை துரிதகதியில் திருத்தியமைத்தமை, பிரதான வீதிகளை அகலமாக்கல் போன்ற பெரும் பணிகளை சிறப்பாக செய்ய முன்னெடுத்தமை,

யாழ். மாவட்டத்தை லஞ்ச ஊழல் அற்ற நிர்வாக மாவட்டமாக ஆக்கியமை போர் சூழலில் பெரும்பாலான யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இல்லாத வேளையில் மக்களின் நலனுக்காக அரும்பணியாற்றியமை போன்ற சேவைகளையும் யாழ். மாவட்ட மக்களினது துன்பதுயரங்களில் பங்கெடுத்து அவர்களின் நிம்மதியான மகிழ்ச்சியான வாழ்விற்கு அல்லும் பகலும் அயராது உழைத்த எமது பெருந்தகை அரசாங்க அதிபர் கணேஷ் அவர்களின் அளப்பரிய சேவைகளை நினைவு கூர்ந்து எமது நன்றியையும் வாழ்த்துக்களையும் இதய பூர்வமாக தெரிவித்து அவருடைய எதிர்காலம் சீரும் சிறப்புடனும் அமையவும் அவர் மேலும் பல பதவிகளை வகித்தும் இந் நாட்டுக்கும் மக்களிற்கும் தமது அரிய சேவையை தொடர்ந்து வழங்க வேண் டும் என்று எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம் என்றுள்ளது. (ச)

# இன்று ஒரு தகவல்

## இன்பம் எங்கே?

வாழ்க்கையில் மகிழ்ச்சியாக இருக்க என்ன வழி? என்று ஒருத்தன் நான்கு பேரிடம் யோசனை கேட்டான்.

"பணமிருந்தால் மகிழ்ச்சி தானாக வரும். அதனால் பணம் சம்பாதிக்கும் வழியைப்பார். அதன் பின் நீ தேடிக் கொண்டிருக்கும் மகிழ்ச்சி உன்னைத் தேடிக் கொண்டு வந்து சேரும்" என்றார்கள்.

அப்படியானால் மகிழ்ச்சியிருக்குமிடம் பணம் தான் என்று முடிவு செய்தான்.

அதைச் சேர்க்க ஆரம்பித்தான். கொஞ்ச நாட்களில் பெரிய ஆளாகிவிட்டான். செல்வம் நிறைய சேர்ந்து விட்டது.

இப்பொழுது அவனுக்கு மகிழ்ச்சி கிடைக்கவில்லை. மறுபடியும் நண்பர்களிடம் யோசனை கேட்டான்.

"பணம் சேர்த்தால் மட்டும் இன்பம் வந்து விடாது. அதைச் செலவு செய். பணம் மூலமாக இன்பத்தைத் தேடு கிடைக்கும்." என்றார்கள்.

உடனே அந்தப் பணத்தை எடுத்துக் கொண்டு வெளிநாடுகளுக்கெல்லாம் போனான். சுற்றிப் பார்த்தான். அதன் பின் விரும்பியவற்றையெல்லாம் வாங்கிச் சாப்பிட்டான். மது , போதைப் பழக்கங்களிலும் ஈடுபட்டுப் பார்த்தான்.

திருமணம் செய்தான். குடும்பம் நடத்தினான். எப்படி இருந்தாலும் அவன் எதிர்பார்க்கும் மகிழ்ச்சி அவனுக்குக் கிடைக்கவில்லை.

அதனால் மகிழ்ச்சி என்பது எங்கே இருக்கிறது என்று அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை.

கடைசியாக ஒரு பெரியவரிடம் யோசனை கேட்டான்.

அவர் சொன்னார்:

"இல்லறத்திலும் உனக்கு மகிழ்ச்சி கிடைக்கவில்லையானால் உனக்குத் துறவறத்தில் தான் அது கிடைக்கும் என்று நினைக்கிறேன்" என்றார்.

"சரி... அதையும் முயற்சி பண்ணிப் பார்ப்போமே" என்று முடிவு செய்தான்.

துறவறமென்றால் சும்மாவா? எல்லாவற்றையும் துறக்க வேண்டுமே! எல்லாவற்றுக்கும் துணிந்து விட்டான்.

வீட்டிலிருந்த நகை, பணம், வைரம், வைடூரியம் எல்லாவற்றையும் ஒரு மூட்டையாகக் கட்டி எடுத்துக் கொண்டான்.

ஒரு யோகியைத் தேடிப் போனான். அவர் காலடியில் கொண் டு போய் வைத்தான்.

அவர் நிமிர்ந்து பார்த்தார். "என்ன இதெல்லாம்?" என்றார்.

"இதெல்லாம் இனிமேல் எனக்குத் தேவையில்லை" என்றான்.

"சரி... அப்படியானால் உனக்கு என்ன தேவை?" என்றார்.

"எனக்கு மகிழ்ச்சி தேவை, மன அமைதி தேவை" என்றான்.

அந்த யோகி தன் காலடியில் இருந்த மூட்டையைப் பிரித்துப் பார்த்தார். உள்ளே தங்கம் , வைரம், நகை, பணம் என்பன இருந்தன.

அவ்வளவு தான்.

அவசர அவசரமாக அதைச் சுருட்டி எடுத்துக் கொண்டார். தலையில் வைத்துக் கொண்டு ஒரே ஓட்டமாக ஓட ஆரம்பித்தார்.

இவனுக்கு அதிர்ச்சி...

"அடடா... இந்த ஆள் போலி ஆசாமி போல இருக்கே... ஏமாந்து விட்டோமே...." என்று நினைத்தான்.

கவலைப்பட்டான். அந்தத் துக்கம் ஆத்திரமாக மாறியது. உடனே அந்த யோகியைத் துரத்த ஆரம்பித்தான்.

அவர் ஒரே ஓட்டம். சந்து பொந்தெல்லாம் நுழைந்து ஓடினார். அவனும் மூச்சுவிடாமல் துரத்தினான். கடைசியாக அந்த யோகி மூச்சிரைக்க ஒரு இடத்தில் வந்து நின்றார்.

எங்கிருந்து ஓட ஆரம்பித்தாரோ அங்கேயே வந்து நின்றார். துரத்திச் கொண்டு வந்தவனும் ஓடிவந்து நின்றான்.

இப்ப அந்த யோகி சொன்னார்.

"என்ன பயந்து விட்டாயா? இந்தா உன்னுடைய செல்வம். நீயே வைத்துக் கொள்" என்று மூட்டையைத் திருப்பிக் கொடுத்தார். கைவிட்டுப் போன தங்கமும், வைரமும், பணமும் திரும்பிக் கிடைத்து விட்டது என்பதில் அவனுக்கு ஏகப்பட்ட மகிழ்ச்சி. இப்ப மறுபடியும் அந்த யோகி சொல்கிறார்.

"இங்கே நீ வருவதற்கு முன்னால் கூட இந்தத் தங்கமும் வைரமும் உன்னிடம் தான் இருந்தது. ஆனால் அப்பொழுது உனக்கு மகிழ்ச்சி இல்லை. இப்ப உன்னிடம் இருப்பதும் அதே தங்கமும் வைரமும் தான். ஆனால் இப்பொழுது உன் மனதில் மகிழ்ச்சி இருக்கிறது. இதிலிருந்து என்ன தெரிகிறது?

மகிழ்ச்சி என்பது வெளியில் இல்லை. உள்ளே இருக்கிறது. அது நம் மனதில் இருக்கிறது. இதை நன்றாக புரிந்து கொள்ள வேண்டும்.

தங்கத்தையும் வைரத்தையும் மூட்டை கட்டி தலையில் வைத்துக் கொண்டு அலைந்தானே... அவன் மாதிரியே நம்மில் பல பேருக்கும் மகிழ்ச்சி எங்கே இருக்கிறது என்ற உண்மை புரிவதில்லை. அதனால் தான் பல சமயங்களில் நம்முடைய மகிழ்ச்சிக்காக மற்றவர்களைச் சார்ந்து இருக்கிறோம்.

நம்ம ஆள் ஒருத்தன் பணம், நகை எல்லாவற்றையும் ஒரு மூட்டையாக கட்டி எடுத்துக் கொண்டு வந்து ஒருத்தர் காலடியில் வைத்தான்.

"இது எனக்குத் தேவையில்லை" என்றான். "உனக்கு என்ன தான் தேவை?" என்றார் அவர். "எனக்கு மன அமைதி தேவை" என்றான். "உனக்கு மன அமைதி தேவைப்படும் அளவுக்கு இப்பொழுது என்ன ஆகிவிட்டது?" என்றார் அவர். "வேறொன்றுமில்லை. இந்த பணத்தையும் நகையையும் நான் யார் வீட்டில் எடுத்தேனோ அந்த வீட்டுக்காரர்கள் இப்பொழுது என் பின்னால் துரத்திக் கொண்டு வருகிறார்கள். அவ்வளவு தான்" என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# யாழ்.கல்வி வலய பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட சித்திரப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

ஜி.ரி.இசற் சமூக இசைவுக்கான கல்விப் பிரிவினால் "பன்மைத்துவக் கலாசாரம் ஊடாக சமாதானம்" என்னும்கருப்பொருளில்யாழ்.கல்வி வலய பாடசாலை மாணவர்களுக்காக நடத்தப்பட்ட சித்திரப் போட்டியில் யாழ்ப்பாணம் , நல்லூர் , கோப்பாய் கோட்டமட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் யாழ். கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்களின்விபரம்வருமாறு,

**யாழ்ப்பாணக் கோட்டம்**

பிரிவு I

தே.தரண்யா (யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), எம்.எவ். அகிவா (யா/ ஒஸ்மானியாக் கல்லூரி), கு.குவாட்டகேஸ்( யா/சென்ஜேம்ஸ் மகா வித்தி.

பிரிவு II

ரி.அபிநயன் (யா/சென்ஜோன்ஸ் கல்லூரி), அ.கீர்த்தனா(யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), எஸ் மனோஜ் (யா/சென்ஜேம்ஸ் மகா வித்தி.

பிரிவு III

வி.தேவசேனா (யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), சி.சகிலா (யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), ஏ.ஆன்அன்னிசியா (யா/ திருக்குடும்பகன்னியர் மடம்).

பிரிவு IV

அ.நிதுஷா ( யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), ச.திவ்யா (யாழ்/ திருக்குடும்ப கன்னியர் மடம்), ந.முகமட்ஜாசர் (யா/ஒஸ்மானியாக் கல்லூரி).

பிரிவு V

பி.பிருந்தாபன் (யா/ மத்திய கல்லூரி), த. கிருசாளினி (யா/திருக்குடும்ப கன்னியர் மடம்), கோ.நிரோஜன் (யா/வைத்தீஸ்வராக் கல்லூரி).

**நல்லூர் கோட்டம்**

பிரிவு I

க.கீர்த்தனன் (யா/ ஆனைப்பந்தி மெதடிஸ் மிஷன்), தெ.குகப்பிரியா (யா/முத்துத் தம்பி ம.வித்தி, பு. தனுசியா (யா/ கலட்டி மெதடிஸ் மிஷன் தமிழ் கலவன்).

பிரிவுII

லி. டிவாகர் (யா/ முத்துத் தம்பி ம.வித்தி), ச.மதுஷன் (யாழ்/ இந்துக் கல்லூரி), ச.சஜீபா (யா/ நல்லூர் ஸ்தான சி.சி.த.க.பாடசாலை).

பிரிவு III

சி.சங்கீர்த்தனன் (யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி), ஜெ.அபிராஜ் (யா/ இந்துக் கல்லூரி), பா.கீர்த்தனன் (யா/ கனக ரத்தினம் ம.ம.வித்தி.

பிரிவு IV

கெ.றொசாந் (யா/பெரியபுலம் ம.வித்தி, க.கலைச்செல்வன் (யா/ கனகரத்தினம்ம.ம.வித்தி, ஜெ.கோபிநாத்(யா/ செங்குந்தா இந்து).

பிரிவு V

ச.சஞ்சீவன் (யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி), ஜெ.திவ்யா (யா/ இந்து மகளிர் கல்லூரி), அ.நளாயினி(யா/ கோண்டாவில் இராமகிருஸ்ணா).

**கோப்பாய் கோட்டம்**

பிரிவு I

ப.தக்சா (யா/கோப்பாய் நாவலர்), பா. தினேசா (யா/வாதரவத்தை விக்னேஸ்வரா), த.ஜானிக்கா (யா/ உரும்பிராய் சைவத் தமிழ்.

பிரிவு II

கு.கஜானா ( யா/ஆவரங்கால் மகாஜனா), சிலவன்சியா (யா/ அச்சுவேலி மத்தி), சி.இசை நிலா (யா/கோப்பாய் நாவலர்).

பிரிவு III

சி.கனிஸ்ரன் (யா/ஆவரங்கால் மகாஜனா.வித்தி, உ.ராம்கி (யா/அச்சுவேலி மத்தி), பா.மோகன் (யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி).

பிரிவு IV

கு.மோகனகாந் ( யா/ஆவரங்கால் மகாஜனா.வித்தி, தி.பாலதீபன் (யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி), வ.கீர்த்தனன் (யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் வித்தி .

பிரிவு V

ப.நிரோஜன் (யா/அச்சுவேலி மத்தி), வி.விதுஷன் (யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), ஜோ.வாசின்ரன் (யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி). (4-7)

# இராசி பலன்

15.07.2010
(ஆனி 31, வியாழக்கிழமை)
சதுர்த்தி பிற்பகல் 4.33 மணிவரை
மகம் முற்பகல் 11.06 மணிவரை
இராகுகாலம் 1.30-3.00 மணிவரை
சுபநேரம் 7.30-9.00 மணிவரை
அளவெட்டி வெளிவயல் முத்துமாரி கொடி, உடுவில் கிழக்கு கற்பகப் பிள்ளையார் கொடி, சூராவத்தை முத்துமாரி கொடி, அச்சுவேலிப் பிள்ளையார் கொடி , சதுர்த்தி விரதம் அமிர்த சித்தம்.

| | |
|---|---|
| மேடம் | தொழில் சிந்தை, குடும்பக் கவலை, முயற்சி தாமதம், பண விரயம். |
| இடபம் | ஆரோக்கியக் குறைவு, முயற்சி தாமதம், மனச் சஞ்சலம், கல்வியில் ஆர்வம். |
| மிதுனம் | கூட்டு முயற்சி, மனோ தைரியம், விருந்துபசாரம், பொருள் சேர்க்கை. |
| கடகம் | மனோ சங்கடம், போசன சுகக் குறைவு, தாமதம், அதிக செலவு. |
| சிங்கம் | வெகுமானம், சயன சுகம், புதிய முயற்சி, தன்னம்பிக்கை. |
| கன்னி | பிறருக்கு உதவி செய்தல், குடும்பக் கவலை, சுபசெலவு, தொழிலில் ஆர்வம். |
| துலாம் | தனதானிய சேர்க்கை, நண்பர்கள் சந்திப்பு, காரிய நன்மை, சயனசுகம். |
| விருச்சிகம் | பெரியவர் மதிப்பு,எடுத்த காரியம் கைகூடும், நல்ல செய்தி, தனவருவாய். |
| தனுசு | சரீரப் பிரயாசை, தேவையற்ற பயம், பயணம், எதிர்பாராத செலவு. |
| மகரம் | எதிரிகள் தொல்லை, காரிய தடங்கல், பணவிரயம்., போசன சுகம். |
| கும்பம் | காரிய நன்மை, தெய்வசிந்தை, தனவருவாய், நண்பர்கள் சந்திப்பு. |
| மீனம் | முயற்சி கைகூடும், மனமகிழ்ச்சி, போசன சுகம், ஆரோக்கியம். |

வளவன்

# க.பொ.த.(உ/த) சித்திரப் பாட மாணவர்களுக்கான கருத்தரங்கு

யாழ். பல்கலைக்கழக நுண் கலைத்துறை , க.பொ.த (உ/த) இல் சித்திரப்பாடத்தை கற்கும் மாணவர்களுக்கான சித்திரப்பாடச் செயலமர்வு ஒன்றினை எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி முதல் மதியம் 1.00 மணிவரை யாழ். இந்து மகளிர் கல்லூரியின் ஆசிரியர் வள நிலையத்தில் நடாத்தத் திட்டமிட்டுள்ளது.

மேற்படி கருத்தரங்கு *நவீன இலங்கைக் கலைப் போக்குத்* தொடர்பான பகுதியை (க.பொ.த (உ/த) சித்திரப் பாடத்திட்டப்படி முன்னோடிக் கலையாக்க முயற்சிகள் , இலங்கைக் கலைக்கழக ஓவியக் கலைஞர்கள் ,43 குழுவினரின் கலைப் படைப்புக்கள், சமகாலக் கலைப் போக்குகள்) முன்னிறுத்தும் காட்சி விளக்க நிலைக் கருத்தரங்காக அமையும்.

மேற்படி கருத்தரங்கில் யாழ். மாவட்டப் பாடசாலைகளில் க.பொ.த (உ/த) இல் சித்திரம் பயிலும் மாணவர்கள்,ஆசிரியர்கள் கலந்து கொள்ளுமாறு ஏற்பட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6-4)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 100-140 | 120 | 140 |
| தக்காளி | 70 | 70 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 |
| கோவா | 80 | 80 | 70 |
| கரட் | 120 | 140 | 140 |
| பூசணி | 40 | 40 | 40 |
| புடோல் | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 50 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 60-70 | 100 | 100 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 60 |
| பாகற்காய் | 80 | 80 | 100 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 40 |
| கருணைக் கிழங்கு | 60 | 70 | 70 |
| பயற்றங்காய் | 80 | 100 | 70 |
| லீக்ஸ் | 120 | 130 | 130 |
| பீற்றூட் | 60 | 80 | 70 |
| கறிமிளகாய் | 80 | 140 | 100 |
| முருங்கைக்காய் | 120-140 | 150 | 150 |
| போஞ்சி | 80 | 90 | 80 |
| கத்தரிதம்புள்ள | 40 | 50 | 40 |
| கீரை - 1 பிடி | 10-15 | 20 | 20 |
| தேசிக்காய் | 80 | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 25 | 30 | 25 |

## மஹோற்சவம்

(மருதங்கேணி)

பருத்தித்துறை ஆலடிப் பிள்ளையார் கோவில் வருடாந்த மஹோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை தேர் உற்சவமும் மறுநாள் தீர்த்த உற்சவமும் இடம்பெறவுள்ளது.

இவ் உற்சவ காலத்தில் தினமும் மாலை 5மணிக்கு 'மகாபாரதம்' என்னும் விடயம் பற்றி கலாபூஷணம் செல்லத்தம்பி மாணிக்கவாசகர் ஆன்மீக சொற்பொழிவாற்றவுள்ளார். (4-35)

✠✠✠

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 25 நாட்கள் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஷண்முகார்ச்சனையும், ஓகஸ்ட் மாதம் 4 ஆம்திகதி புதன்கிழமை திருக்கார்த்திகை திருவிழாவும் ஷண்முகார்ச்சனையும் 8 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை ஆடி அமாவாசை கண்டகி தீர்த்தமும் இடம்பெறவுள்ளது. (6-4)

✠✠✠

(யாழ்ப்பாணம்)

அளவெட்டிதெற்கு - வெளிவயல் திருவருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்பாள் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் இன்று வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை சப்பறமும், 24ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (4)

✠✠✠

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் ஸ்ரீ சாயிதுர்க்கா தேவி ஆலய மஹோற்சவம் இன்று வியாழக்கிழமை பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 நாட்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இவ்வுற்சவத்தில் எதிர்வரும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சப்பறமும் 24ஆம் திகதி சனிக்கிழமை இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் மாலை கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது. (6-4)

## ஆன்மீக நிகழ்வு

(பருத்தித்துறை)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயச்சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினால் வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வு தொடரில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தொண்டைமானாறு வீரகத்திப் பிள்ளை மகா வித்தி பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வு இடம்பெறவுள்ளது. (4-35)

# உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்ட நான்காம் நாள் நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு யாழ்.மாநகர சபையினால் முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத்திட்டங்ளகில் இன்று வியாழக்கிழமை வீதி வேலைப்பகுதி வேலைத் திட்டத்தின் கீழ் பின்வரும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதில் கந்தபுராண வீதி தாரிடல், சங்கிலியன் வீதி,நல்லூர் 1ம் வீதி குன்று குழி நிரப்பி மறுதாரிடமல், கோவில் வீதி, நல்லூர் 2ஆம் குறுக்குவீதி, வைமன் வீதி, நாவலர் வீதி , சட்டநாதர் கோவில் வீதி, கச்சேரி நல்லூர் வீதி ஆகிய வீதிகளில் பக்க மண்வெட்டி துப்புரவு செய்தல் மற்றும் ஆஸ்பத்திரி வீதி மறுதாரிட்டு பாதசாரிகள் கடவைஇடல், கோவில் வீதி குன்று குழி நிரப்பி தாரிடல் போன்றன மேற்கொள்ளப்படவுள்ளன. (6)

## செயலமர்வு

(அல்வாய்)

வடமராட்சி வலயப் பாடசாலைகளில் தரம் 2இற்கு இரண்டாம் மொழி சிங்களம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை மறுதினம் சனிக்கிழமை யாழ்.வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இச் செயலமர்விற்கு குறித்த பாட ஆசிரியர்கள் அறிவுரைப்பு வழிகாட்டி, பாடப் புத்தகம் என்பவற்றைத் தவறாது கொண்டு வருமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (4-19)

## கவிஞர் இ.முருகையனின் நினைவுப் பேருரை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சாஹித்ய ரத்னா கவிஞர் கலாநிதி இ.முருகையனின் முதலாண்டு நினைவுப் பேருரை நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரிப் பிரதான மண்டபத்தில் அதிபர் இ.குணநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் தொடக்கவுரையை நீர்வை மணி கு.தியாகராஜக் குருக்களும் நிறைவுரையை கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசனும் வழங்குவர்.

"கவிதை எனும் கலை" என்ற தலைப்பில் ஈழத்தின் மூத்த கவிஞர் சோ.பத்மநாதன் நினைவுப் பேருரை ஆற்றுவார்.

இந்நிகழ்வில் கலந்துகொள்பவர்களுக்கு இலவசக் கையேடுகள் வழங்கப்படவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.(6-4)

## சொற்பொழிவு

(மருதங்கேணி)

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயச்சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடை பெற்றுவரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் எதிர்வரும் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணி பூசை முடிவுற்றதும் ''மகா பாரதம் காட்டும் வாழ்க்கை நெறி'' என்னும் விடயம் பற்றி குடத்தனை அமெரிக்க மிஷன் பாடசாலை அதிபர் ப.செல்வவிநாயகம் ஆன்மீக சொற்பொழிவாற்றவுள்ளார். (4-35)

## தேவாரப் பண்ணிசை பரீட்சை

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் நடாத்திவரும் தேவாரப் பண்ணிசைப் பயிற்சி வகுப்புகளில் பங்குபற்றும் மாணவர்களுக்கான பண்ணிசைப் பரீட்சை நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிமுதல் யாழ். காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள சிவத்தொண்டன் நிலைய நூலக மேல்மாடி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப் பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்கள் தவறாது சமுகமளித்து பரீட்சையில் பங்குபற்றுமாறு மன்ற அமைப்பாளர் சி.கிருஷ்ணமூர்த்தி அறிவித்துள்ளார். (6-4)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் வித்தியாலய அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக சங்கானைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் துரைஎங்கரசு கலந்து கொள்ளவுள்ளார்.

மேலும் நினைவுப் பேருரையை யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி கல்வியியலாளர் திருமதி சுபாதினி தயாபரன், ஆசியுரையை யாழ்.பல்கலைக்கழக ஓய்வுநிலை தகைசால் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் ஆகியோார் வழங்கவுள்ளனர். (4)

## சுவாமி விவேகானந்தரின் ஜெயந்தியும் நூல் அறிமுகமும்

(யாழ்ப்பாணம்)

சுவாமி விவேகானந்தர் ஜெயந்தியும் சென்னை ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தின் வெளியீடான மாதாந்த சமய சஞ்சிகை ஸ்ரீ இராமகிருஷ்ண விஜயம் அறிமுகமும் விற்பனையும் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு அச்சுவேலி இடைக்காடு மகா வித்தியாலயத்தில் வித்தியாலய அதிபர் ஏ.அருந்தவநேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சுவாமி விவேகானந்தரின் நல்வழிச் சிந்தனைகள் என்ற விடயம் பற்றி பருத்தித்துறை ஸ்ரீஇராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா கருத்துரை வழங்கவுள்ளார். (6-4)

## கருத்தரங்கு பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய நிலையம் மற்றும் யு.என்.டி.பி. நிறுவனம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் நடைபெறவிருந்த சிவில் சமூகங்களூடாக மனித உரிமையை மேம்படுத்தல் தொடர்பான கருத்தரங்கு பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இக் கருத்தரங்கு நாளை மறுதினம் நடைபெறவுள்ளதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளதாகவும் இக் கருத்தரங்கு நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் அறிவித்துள்ளார். (6)

## சிறுவர் நூல் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய் கிராம உப அலுவலகம் , ஆனைக்கோட்டை பொதுநூலக உள்ளூராட்சி வார சிறுவர் நூல் கண்காட்சி மற்றும் சிறுவர் கழகம் அமைத்தல் ஆகியவற்றின் ஆரம்ப நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு ஆனைக்கோட்டை பொதுநூலக மண்டபத்தில் மானிப்பாய் கிராம பொறுப்பதிகாரி கு.இரத்தினராசா தலைமையில் நடைபெறுகின்றது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யா/ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலய அதிபர் ந.சிவகடாட்சம் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக மானிப்பாய் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை செயலாளர் திருமதி புஸ்பமலர் சிவலிங்கம் கலந்துகொள்ளவுள்ளார். (ச-3)


## யாழ்.செய்திகள்


## கிளி.ஆசிரியர்களுக்கு ஆடி மாதச் சம்பளம்

(யாழ்ப்பாணம்)

இணைப்புப் பெற்று யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றும் கிளிநொச்சி வலயத்தைச் சார்ந்த ஆசிரியர்களுக்கான ஆடி மாதச் சம்பளக் கொடுப்பனவுப் பட்டியல் கையொப்பம் இடும் செயற்பாடு இன்றும் நாளையும் யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணிமனையில் காலை 10 மணிதொடக்கம் மாலை 4 மணி வரை நடைபெறும்.

சம்பளப்பட்டியலில் கையொப்பமிட வரும் பொழுது ஆடி மாதத்திற்குரிய லீவு (B-100) விபரத்தினை கொண்டு வருமாறு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா அறிவித்துள்ளார். (ச)





தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் அமரர் அ.அமிர்தலிங்கத்தின் 21ஆவது நினைவு நிகழ்வு நேற்று முன்தினம் தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் மங்கல விளக்கேற்றுவதையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா திருவுருவுப் படத்திற்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்துவதையும் படங்களில் காணலாம்.

# மட்டக்களப்பு கல்முனை வீதியில் இடம்பெற்ற விபத்தில் சாரதி பலி!

## ஐவர் படுகாயம்

மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற பாரிய விபத்துச் சம்பவத்தில் வாகன சாரதி ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதுடன் 3 பெண்கள் உட்பட ஐவர் படுகாயமடைந்து களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.மானவடு தெரிவித்தார்.

நேற்று அதிகாலை 4.30 மணியளவில் கொழும்பில் இருந்து கல்முனை நோக்கி வந்த வான் மின்கம்பத்துடன் மோதிய போதே இவ் விபத்து ஏற்பட்டதாக தெரியவருகிறது.

சம்பவத்தில் உயிரிழந்த சாரதி கல்முனையைச் சேர்ந்த 38 வயதுடைய சீனித்தம்பி கலால்தீன் எனத் தெரியவந்துள்ளது.

இது குறித்து பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (6)

# யாழ். கோட்டை புனர்நிர்மாணப் பணிகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு பணிப்பு

யாழ்ப்பாணக் கோட்டையின் புனர் நிர்மாணப்பணிகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு யாழ்ப்பாணத்திற்கு நேற்று முன்தினம் வருகை தந்த தேசிய மரபுரிமைகள் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தொல்பொருளியல் திணைக்களத்தை பணித்துள்ளார்.

இதன் புனர் நிர்மாணப்பணிக்காக 33 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் யாழ். குடாநாட்டுக்கு விஜயம் செய்திருந்த அவர் ,யாழ்.பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அமைச்சின் செயலாளர்கள்,தொல்பொருள் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள், மத குருமார்கள் ,படைத்தரப்பினர் உட்பட பல்வேறு தரப்பினருடனும் கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)

# மக்கள் நடத்திய தாக்குதலில் பொலிஸ் நிலையத்திற்கு பாரிய சேதம்

(கொழும்பு)

மட்டக்குளி பிரதேசத்தில் மக்கள் நடத்திய தாக்குதலினால் பொலிஸ் நிலையத்தின் சொத்துக்களுக்கு பெரும் சேதம் ஏற்பட்டுள்ளதாக அண்மைய மதிப்பீடுகளின் மூலம் தெரிய வந்துள்ளதாகவும் இதில் நான்கு இலட்சம் ரூபாவிற்கும் அதிகமானளவு சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸ் நிலையத்திற்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பிலான அறிக்கை கொழும்பு பிரதான நீதவானிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன்

இந்தத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய நபர்கள் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (6)

# மருந்து சீட்டின்றி மருந்து வழங்கிய மருந்தகத்திற்கு எதிராக வழக்குத்தாக்கல்

(கொழும்பு)

வைத்தியரின் மருந்துச் சீட்டின்றிப் பாடசாலை மாணவர்களுக்கு மருந்து விற்பனை செய்த கம்பஹா நகர மருந்து விற்பனை நிலையமொன்றுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதாகத் தேசிய ஔடத அதிகார சபை தெரிவித்துள்ளது.

உரிய வைத்தியரின் மருந்துச் சீட்டின்றி இந்த மருந்து விற்கப்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக தேசிய ஔடத அதிகார சபையின் தலைவர் டாக்டர் ஹேமந்த பெனரகம தெரிவித்தார்.

போதைப் பொருளுக்குப் பதிலாக வலி நிவாரண மருந்தைப் பயன்படுத்திய கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த 8 மாணவர்கள் கடந்த திங்கட்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன் அவர்களிடமிருந்து ஒரு தொகை மருந்துகளும் கண்டு பிடிக்கப் பட்டன.

இவர்களுக்கு மருந்தை விற்பனை செய்த மருந்து விற்பனை நிலையத்தை தேசிய ஔடத அதிகார சபை அதிகாரிகள் நேற்று முன்தினம் சோதனைக்கு உட்படுத்தியதுடன் குறித்த மருந்துப் பொருளையும் ராகம வைத்திய சாலையில் பரிசோதனை செய்ததாக அதிகார சபையின் தலைவர் கூறினார்.

உரிய மருந்துச் சீட்டின்றி எவருக்கும் எந்த மருந்தையும் விற்பனை செய்ய முடியாதென அவர் தெரிவித்தார்.

மாணவர்கள் பயன்படுத்திய மருந்து மன நோய்க்குப் பயன்படுத்தும் மருந்தெனவும் அரச வைத்தியசாலைகளில் இந்த வகை மருந்துகளே பயன்படுத்தப்படுவதாகவும் தேசிய ஔடத அதிகார சபை தெரிவித்துள்ளது. (6)

# மடு பிரதேசத்தின் பாதுகாப்பு நடவடிக்கை குறித்து பாதுகாப்பு செயலர் ஆராய்வு

(கொழும்பு)

பாதுகாப்புச் அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மடு பிரதேசத்திற்கு நேற்று முன்தினம் விஜயம் செய்து பொது மக்களை மீள் குடியேற்றுவது மற்றும் பிரதேசத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்துள்ளார்.

அங்கு சென்ற பாதுகாப்புச் செயலாளர் மடு திருத்தலத்தில் நடைபெற்ற விசேட ஆராதனையிலும் கலந்துகொண்டார்.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள மடு தேவாலயத்தின் வருடாந்த உற்சவத்தில் கலந்துகொள்ளும் பக்தர்களின் பாதுகாப்பு தொடர்பாக இராணுவத்தனருக்கு ஆலோசனைகளை வழங்கிய கோத்தபாய பக்தர்களுக்கான தங்குமிடம், குடிநீர் வசதிகள் உள்ளிட்ட பொது தேவைகளை பெற்றுக்கொடுப்பது குறித்து கவனம் செலுத்தியுள்ளார்.

இதன் பின்னர் வெள்ளாங்குளம் 61 வது படைப்பிரிவின் தலைமையகத்திற்கு சென்ற அவர் வவுனியா, மன்னார் பிரதேசத்தில் பணியாற்றும் முப்படையினர் மற்றும் பொலிஸார் மத்தியில் உரையாற்றியுள்ளார்.

இதில் இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரிய, கடற்படைத் தளபதி வைஸ் அத்மிரல் திசர சமரசிங்க, வன்னிப் பிராந்திய கட்டளைத் தளபதி கமல் குணரத்ன, இராணுவ நடவடிக்கை பணிப்பாளர் சவேந்திர சில்வா, பொலிஸ் மா அதிபர் மகிந்த பால சூரிய உள்ளிட்ட உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். (6)

# தலைமன்னார்,நீர்கொழும்பு பகுதிகளில் இரண்டு ஆண்களின் சடலங்கள் மீட்பு

தலைமன்னார் மற்றும் நீர்கொழும்பு பகுதிகளில் இனந்தெரியாத ஆண்கள் இருவரது சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. நாவற்குடா கடற்கரைப் பகுதியில் மீட்கப்பட்ட சடலம் பிரேத பரிசோதனைக்காக மன்னார் மருத்துவமனையின் பிரேத அறையிலும் நீர் கொழும்பு பகுதியில் மீட்கப்பட்ட சடலம் கொழும்பு மருத்துவமனையின் பிரேத அறையிலும் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து தெரியவருவதாவது,

தலைமன்னார் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நாவற்குடா கடற்கரைப்பகுதியில் கடந்த 12ம் திகதி பிற்பகல் 4.30 மணியளவில் தலைமன்னார் பொலிஸார் ஆண் ஒருவரின் சடலத்தை மீட்டுள்ளனர்.

இவ்வாறு மீட்கப்பட்டுள்ள ஆண் சடலத்தில் இடுப்பிற்குக் கீழ் பகுதி மாத்திரமே முழுமையாக உள்ளதாகவும் மேல் பகுதி சிதைவுற்ற நிலையில் காணப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளதுடன்

இந்தச் சடலம் தற்போது மன்னார் மருத்துவ மனையில் வைக்கப்பட்டுள்ள அதே வேளை அது தொடர்பான மேலதிக விசாரணைகளை தலைமன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை நீர்கொழும்பு பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட காமாச்சோடை சந்தைப்பகுதியில் வைத்துச் சடலமொன்று நீர்கொழும்பு பொலிஸாரால் மீட்கப்பட்டதாகவும்

அங்கு மீட்கப்பட்ட 50 வயது மதிக்கத்தக்க ஆணின் சடலம் தொடர்பிலும் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (6)

# டெங்கு நோயால் இருவர் உயிரிழப்பு

பதுளை பகுதியில் டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட வைத்தியர் ஒருவரும் ஹாலி எல சிங்கள தேசிய பாடசாலையில் தரம் ஐந்தில் கல்விகற்ற எம்.எம். பசிந்து வயது (10) என்ற மாணவனும் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட் டுள்ளது.

டெங்கு நோயால் பீடிக்கப்பட்ட குறிப்பிட்ட மாணவன் நேற்று முன்தினம் அதிகாலை பதுளை பொது வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார். இதே வேளை டெங்கு நோயால் உயிரிழந்த பெண் வைத்தியர் பதுளை மாகாண வைத் தியசாலையில் பணிபுரிந்தவர் ஆவார்.

மேலும் பதுளை வைத்தியசாலை தாதியொருவரும் கடுமையாகப் பாதிக்கப்பட்ட நிலையில் இவ் வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (6)


Hatton National Bank

Hatton National Bank plc (PQ82)

## அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி கல்வி அமைச்சுடன் இணைந்து நடாத்தும் அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தனிப்பாடல், பேச்சு, குறுநாடகப் போட்டிகள் -2010 யூலை மாதம் 17ஆம் திகதி (சனிக்கிழமை) காலை 8.30 மணி முதல் மாலை 4.00 மணி வரை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் என்பதை போட்டியாளர்களுக்கு அறியத்தருகிறோம்.

கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான போட்டிகள் கிளிநொச்சி இந்துக்கல்லூரியில் -2010 ஜூலை மாதம் 17ஆம் திகதி (சனிக்கிழமை)காலை 8.30 மணி முதல் மாலை 4.00 மணி வரை நடைபெறும் என்பதை போட்டியாளர்களுக்கு அறியத் தருகிறோம்.

(சி/646) ஹற்றன் நஷனல் வங்கி



## 31ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும

பூவாக 08 ⌖ 09 ⌖ 2004



சருகாக 15 ⌖ 06 ⌖ 2010

செல்வி சிவநேசன்- மதுசாலினி

செல்ல மொழி பேசி எம்மை
சிறகடிக்க வைத்த சித்திரமே!

பார்க்கும் இடமெல்லாம் – நீ
வீசித் சென்ற பாசவாள் எம்மை
குத்திக் குத்திக் குதறுதம்மா!

பெற்றவரும் உற்றவரும் இங்கு
பேதலிக்குதே உன் நினைவுகளால்
காவேரியாய் கண்ணீர் வடித்து நிற்க
மொட்டான உன் பருவம்
பூவாகி மணம் வீச முன்
சருகான பூந்தேரே
எங்கம்மா சென்றனையோ

*ஓம்சாந்தி... சாந்தி... சாந்தி...*

15.06.2010 எம்மை விட்டுச் சென்ற எமது அன்பு மகள் *சிவநேசன் மதுசாலினி* அவர்களின் ஆத்மசாந்தி பிரார்த்தனை 15.07.2010 வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் எமது செல்வியின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்


கொற்றாவத்தை, தச்சந்தோட்டம்.

சிறிய தகப்பன்
மகேந்திரன் -சிவநாதன்

(சி/647)

# இலங்கைக்கு எதிராக சர்வதேச ஊடகங்கள் குரல் கொடுப்பதில்லை

## எட்வேர்ட் மோர்ரைமர் குற்றச்சாட்டு



(கொழும்பு)

இலங்கையின் சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக சர்வதேச ஊடகங்கள் குரல் கொடுக்கத் தவறுகின்றன என்று இலங்கையின் சமாதானம், நீதி ஆகியவற்றுக்கான பிரசார அமைப்பின், தலைவர் ஐ.நா.செயலாளர் நாயகமாக கோபி அனான் இருந்தபோது அவரின் பிரதம ஊடக அதிகாரியாகக் கடமையாற்றியவருமான எட்வேர்ட் மோர்ரைமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் லண்டனில் இருந்து வெளியாகும் த கார்டியன் பத்திரிகையில் எழுதிய பத்தி ஒன்றிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அப் பத்தியில் முக்கியமாகத் தெரிவித்துள்ளவை வருமாறு,

இலங்கையின் உள்நாட்டு பத்திரிகையாளர்கள் அங்கு இடம்பெறுகின்ற மனித உரிமை மீறல்களை வெளிப்படுத்தும் போதெல்லாம் உயிராபத்தை எதிர்நோக்குகின்றார்கள்.

ஆனால் சர்வதேச பத்திரிகைகள் இலங்கை விடயத்தில் குருடர்களாக நடக்கின்றன. ஈராக், தென்னாபிரிக்கா, இஸ்ரேல் ஆகிய நாடுகளின் விவகாரங்களுக்கு வழங்கி வருகின்ற முக்கியத்துவத்தை இலங்கை விவகாரத்துக்கு இந்த சர்வதேச பத்திரிகைகள் கொடுக்கத் தவறுகின்றன என்று கூறினார். (6)

# தரம் 5 புலமைப்பரிசில் பயிற்சி பரீட்சை

(அல்வாய்)

இளைஞர்களுக்கான நாளைய அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷவின் அனுசரணையுடன் இவ்வாண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான பயிற்சி பரீட்சை, நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி வலய கல்விப் பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்ட பாடசாலைகள் தரம் 5 இல் கல்வி பயிலும் மாணவர்களை இவ் வகுப்பிற்கு பொறுப்பான ஆசிரியர்களுடன் அனுப்பிவைக்கும்படி வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா அறிவித்துள்ளார். (6-19)

# வட பகுதிக்கான ரயில் மூல எரிபொருள் விநியோகம் ஆரம்பம்

(கொழும்பு)

வவுனியாவில் எரிபொருள் விநியோக உப நிலையத்தையும், வன்னி மாவட்டத்தின் எட்டாவது எரிபொருள் நிரப்பு நிலையத்தையும் பெற்றோலியத் துறை அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த நேற்று முன்தினம் திறந்து வைத்ததுடன் வடபகுதிக்கான ரயில் மூலமான எரிபொருள் விநியோகமும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதுவரை காலமும் பௌசர்கள் மூலமே வவுனியாவுக்கு எரிபொருள் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

அதில் மாற்றம் கொண்டுவரும் வகையில் நேற்று முன் தினம் முதல் ரயில் மூலமான எரிபொருள் விநியோகம் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

அத்துடன் வன்னி மாவட்டத்தில் 13 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் திறந்து வைக்கும் திட்டத்தின் கீழ் எட்டாவது எரிபொருள் நிரப்பு நிலையத்தை அமைச்சர் கிளிநொச்சி நகரில் திறந்து வைத்தார்.

பௌசர்கள் மூலம் எரிபொருள் வட பகுதிக்கு அனுப்பப்படுவதால் போக்குவரத்துச் செலவுடனேயே வடபகுதி மக்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. ரயில்கள் மூலம் எரிபொருட்களை வடபகுதிக்குக் கொண்டு செல்வதன் ஊடாக செலவினம் குறைக்கப் படுவதுடன் அந்த செலவினத் தொகையை நிவாரணமாக வடபகுதி மக்களுக்கே பெற்றுக் கொடுக்கப்படும் எனவும் அமைச்சர் சுசில் தெரிவித்தார்.

1989 களில் வவுனியாவில் இயங்கி வந்த எரிபொருள் விநியோக நிலையம் கடந்த காலங்களில் கவனிப்பாரற்ற நிலையில் இருந்தது. வவுனியா குட்செட் வீதியில், ரயில் நிலையத்தை அண்டிய பகுதியிலமைந்துள்ள மேற்படி விநியோக உப நிலையம் மீண்டும் நேற்று முன்தினம் முதல் இயங்க ஆரம்பித்துள்ளது.

இதேவேளை கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் மீண்டும் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் இயங்கத் தொடங்கியுள்ளன. இதனைத் தொடர்ந்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் புதிய எரிபொருள் நிலையங்களை அமைத்து வருகிறது. (6)

# ஐ.நா. மனித உரிமை பேரவைக்கு எதிரில் இலங்கையர்கள் போராட்டம்

(கொழும்பு)

சுவிற்சர்லாந்தின் ஜெனீவாவில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை எதிரில் இலங்கையர்கள் எதிர்ப்பு போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.


ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூனினால் நியமிக்கப்பட்டுள்ள நிபுணர்கள் குழுவினை கலைக்குறுமாறு வலியுறுத்தி இந்த போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

இதன் போது இலங்கை யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் ஆலோசனை வழங்கும் நோக்கில் உருவாக்கப்பட்ட மூவர் அடங்கிய நிபுணர்கள் குழுவினை கலைக்குமாறு இலங்கையர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

ஜெனீவாவில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவைக்கு எதிரில் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டுள்ளதுடன் நியூயோர்க், இத்தாலி, பிரிட்டன், ஜெர்மனி உள்ளிட்ட பல நாடுகளில் இந்த எதிர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விமல் வீரவன்ச தலைமையிலான ஜே.என்.பி.கட்சியினால் இந்த போராட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப் படுகிறது. (6)

# மாகாண மட்ட மெய்வல்லுநர் போட்டிகளில் முதலிடம் பெற்று சாதனை படைத்தோர்



ஞா.மதுசன்




சு.சகானா



ஜெ.ஜனந்தன்



க.கஜானி



மு.கிருஷ்ணா



ந.நிஷாந்



செ.கீர்த்திகா

(யாழ்ப்பாணம்)

மாகாண மட்ட மெய்வல்லுநர் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி 9 தங்கப் பதக்கங்களை பெற்றுள்ளது.

இதில் 15 வயதுப் பிரிவு தட்டெறிதல் போட்டியில் ஆண்கள் பிரிவில் ஞா.மதுசனும் பெண்கள் பிரிவில் சு.சகானாவும் 17 வயதுப் பிரிவு உயரம் பாய்தலில் ஆண்கள் பிரிவில் ஜெ. ஜனந்தனும் 19 வயதுப் பிரிவு குண்டு எறிதலில் பெண்கள் பிரிவில் க.கஜானியும் உயரம் பாய்தலில் ஆண்கள் பிரிவில் மு.கிருஸ்ணாவும் 21 வயதுப் பிரிவு முப்பாய்ச்சலில் ஆண்கள் பிரிவில் ந. நிஷாந்தும் பெண்கள் பிரிவில் முப்பாய்ச்சல், உயரம் பாய்தல், தட்டு எறிதல் ஆகிய போட்டியில் செ. கீர்த்திகாவும் முதலாமிடத்தைப் பெற்று தங்கப் பதக்கங்களை வென்றுள்ளனர். (6-4)

# டெங்கு ஒழிப்பு நடவடிக்கையை கடுமையாக அமுல்படுத்துமாறு அறிவிப்பு

(கொழும்பு)

டெங்கு அபாயத்தை ஏற்படுத்தும் குப்பை கூழங்கள் மற்றும் திண்மக் கழிவுகளை அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்காதிருக்கும் உள்ளூராட்சி சபைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நடவடிக்கையை கடுமையாக அமுல் செய்யுமாறு அதிகாரிகளுக்கு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார்.

நுளம்புகள் பெருகுவதை கட்டுப்படுத்தும் பிரதான பொறுப்பை உள்ளூராட்சி சபைகள் கொண்டுள்ளன. நுளம்புகள் பெருகுவதை தடுப்பதற்கு அனைவரும் இணைந்து செயற்படவேண்டும். தவறும் மக்களுக்கெதிராகவும் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

டெங்கு நோயால் 141 பேர் இறந்துள்ளனர்.

20 ஆயிரத்திற்கும் கூடுதலானோர் இந்நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (6-4)

# ஜனாதிபதியுடனான சந்திப்பில் கலந்துகொள்ள மங்கள மறுப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் தலைவர் மங்கள சமரவீர ஜனாதிபதியுடனான சந்திப்பில் கலந்துகொள்ள முடியாதென மறுப்புத் தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பு திருத்தங்கள் தொடர்பாக ஜனாதிபதிக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையிலான சந்திப்பில் கலந்து கொள்ளுமாறு ரணில் விக்கிரமசிங்க விடுத்த அழைப்பை மங்கள சமரவீர நிராகரித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தமக்கு அழைப்பு விடுத்த போதிலும், தாம் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் அல்லாத காரணத்தினால் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை என மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டிய மங்கள சமரவீர அரசியலமைப்பு மாற்றங்கள் தொடர்பான தமது நிலைப்பாட்டை இது வரையில் வெளிப்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (6)

## தொற்றாத நோய்கள் தொடர்பிலான

# தேசிய கொள்கையொன்றை நடைமுறைப்படுத்த திட்டம்

(கொழும்பு)

தொற்றாத நோய்கள் தொடர்பாக தேசிய கொள்கையொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு புத்திஜீவிகள் குழு ஒன்று நியமிக்கப்படவுள்ளது. இதில் 20 பேர் அங்கத்துவம் வகிப்பர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இனிவரும் தசாப்தகாலங்களில் தொற்றாத நோய்கள் அதிகம் பரவும் சாத்தியம் இருப்பதால் இத்தீர்மானத்தை எடுத்திருப்பதாக அமைச்சர் மைத்திரிபால ஸ்ரீ சேன தெரிவித்துள்ளார்.

தொற்றாத நோய்கள் காரணமாக இலங்கையில் 300-400 பேர் இறப்பதாக தெரிய வந்துள்ளது.

குடிசனத்தொகையில் 1/4 பங்கினர் நீரிழிவு நோய்க்கு உட்பட்டுள்ளனர் எனவும் இந்த அபாயம் இனிவரும் தசாப்தங்களில் 50 சதவீதமாக உயரும் சாத்தியம் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மாரடைப்பு, புற்றுநோய், பல்நோய், உயர் குருதி அழுத்தம் என்பன தொற்றாத நோய்களுக்குள் அடங்குகின்றன. (6-4)



# கணனிக்கு புதியவரா மவுஸ் ஏன்? எதற்காக?

கணனி இயக்கத்திற்கு நாம் அதிகம் நம்பியிருப்பது மவுஸ் சாதனத்தை தான். கணனிக்கான நம் தொடர்பை பெரும்பாலான வேளைகளில் அமைப்பது மவுஸ் தான் .சிறிய அம்புக்குறி போன்ற கேர்சரை மொனிற்றர் திரையில் உள்ள பைலில் கொண்டு சென்று நமக்குத் தேவையான செயல்பாடுகளை மேற்கொள்ள இது உதவுகிறது.

இதற்கு மவுஸ் பட்டன்களை நாம் செயல்படுத்துகிறோம்.இவற்றில் இடது பட்டன் அதிகம் பயன்படுத்தப்படுகிறது. இதனை அழுத்திக் கிளிக் செய்வதனையே ஆங்கிலத்தில் Left clicking எனக் கூறுகின்றனர்.ஏதாவது ஒரு பைல் அல்லது இயக்கத்தை தொடங்க வேண்டும் என்றால் மவுஸின்அம்புக்குறி முனையை பைல் பெயர் அல்லது செயல்படுத்தும் இடத்தில் கேசரைக் கொண்டு சென்று இந்த இடது பட்டனை இரு முறை கிளிக்செய்தால் உடனே பைல் இயக்கத்திற்கு வந்து விடும்.

இதேபோல ஒரு விண்டோவினை மூட, சிறியதாக்க இந்த மவுஸின் முனையை அதற்கான இடத்தில் கொண்டுசென்று அழுத்தினால் போதும். ஒருமுறை கிளிக்செய்து அப்படியே பட்டனை விடாமல் மவுசை இழுத்தால் நாம் தேர்ந்து எடுத்த பைல் அல்லது டெக்ஸ்ட் அப்படியே இழுபடும் அதனை நாம் விரும்பும் இடத்திற்கு கொண்டு சென்று பட்டனை அழுத்துவதிலிருந்து எடுத்து விட்டால் அந்தப் பைல் அல்லது டெக்ஸ்ட் விட்ட இடத்தில் அமர்ந்து விடும்.

டெக்ஸ்ட் உள்ள டொகும்மெண்ட்டில் மவுஸின் கேசரைக் கொண்டு சென்று எந்த இடத்தில் விடுகிறோமோ அந்த இடத்தில் நீங்கள் ரைப்செய்யத் தொடங்கலாம்.வலது புறத்தில் உள்ள பட்டன் பொதுவாக சிறிய மெனு ஒன்றை கொண்டுவர உதவுகிறது. குறிப்பாக தேர்ந்து எடுக்கப்பட்ட டெக்ஸ்ட் மற்றும் படங்களில் மாற்றங்களை செய்திட அவற்றைத் தேர்ந்தெடுத்த பின் அதில் மவுஸ்கேசரை வைத்து வலது பட்டனை அழுத்தினால் அதற்கேற்ற மெனுகிடைக்கும். அதில் மாற்றங்களை மேற்கொள்வதற்கான பிரிவுகள் கிடைக்கும். அதில் எந்தப் பிரிவை செயல்படுத்த வேண்டுமோ அதில் கேசரை வைத்து இடது கிளிக்செய்தால் போதும்.

இத்தகைய மெனுக்களை நாம் செயற்படுத்த சில பொதுவான கட்டளைகள் கிடைக்கும் அவை :-

Open : டபிள் கிளிக் செய்து செயல்படுத்தும் பணியினை இந்த பிரிவில் கிளிக் செய்வதன் மூலம் மேற்கொள்ளலாம்; தேர்ந் தெடுக்கப்பட்ட டெக்ஸ்ட் அல்லது படத்தை நீக்குவதற்கு

copy : இதில் கிளிக் செய்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட விடயங்கள் கொப்பி ஆகும். பின் அதனை எங்கு வேண்டுமானாலும் ஒட்டிக் கொள்ளலாம்.

Creat short cut: குறிப்பிட்ட புரோகிராம் அல்லது பையிலுக்கான குறுக்கு வழி ஒன்றை அமைத்திட இது உதவும்.

இதனை உருவாக்கிவிட்டால் அப்போது கிடைக்கும் ஐகனில் கிளிக் செய்து அதற்கான புரோகிராமை இயக்கலாம்;பைலை இயக்கத்திற்குக்கொண்டு வரலாம்.

Delete : நிரந்தரமாக நீக்கிட

Rename : பைல் அல்லது புரோகிராம்ற்கு புதிய பெயர் தர

Properties:பைல்அல்லது புரோகிராம் குறித்த அதன் தன்மைகளை அறிய இது உதவுகிறது. மவுஸின் நடுவே சிறிய உருளை ஒன்று இருப்பதை பார்ப்பீர்கள். டெக்ஸ்ட்டில் நாம் மேலும் கீழும் செல்ல இது உதவும்.என்டர் அழுத்தி நாம் கீழே செல்லுவோம் அல்லது அரோக்கீகளை அழுத்தி மேலேசெல்வோம்.அந்தவேலையைஎளிதாக மேற்கொள்ள இந்த வீல் உதவுகிறது.

# ஸ்பைவெயர் - அட்வெயர் தடுப்பது எப்படி?

கணனியில் பயமுறுத்தும் விடயங்களைப் பட்டியலில் அதிகம் கவலைக் குள்ளாகுவது ஸ்பைவெயர். அட்வெயர் மால்வெயர் எனக் குறிப்பிடப்படும் தொகுப்புகளே. இவை இன்டர்நெட் வழியாக , கணனி உள்ளே வருவது நிச்சயமாகிவிட்ட ஒரு உண்மையாகும்.

.ஆனால், இவை உள்ளே உள்ளனவா என்று தெரியாமலேயே நாம் இவை குறித்து அச்சம் கொண்டிருப்பது தான், கூடுதல் கவலையையும் வேதனையையும் அளிக்கிறது.

எந்த விஷயமானாலும் இன்டர்நெட் வழிதான் என்று ஆகிவிட்ட நிலையில், இது போன்ற ஆபத்துக்களிலிருந்து கூடுமான வரை பாதுகாப்பதற்குரிய வழிகளை நாம் கடைப்பிடிக்க வேண்டியது கட்டாயமாகிறது. அவை குறித்து இங்கு சுருக்கமாகக் காணலாம்.

**ஸ்பைவெயர் தடுப்பு**

நீங்கள் ஏற்கனவே இதனைச் செய்திராவிட்டால், உடனே மேற்கொள்ள வேண்டிய செயல்பாடு இதுவாகும். உடனடியாக ஸ்பைவெயர் தடுப்பு புரோகிராம் (Spy ware blocker) ஒன்றை நிறுவுங்கள்.

இங்கு குறிப்பிடப்படுவது அண்டி வைரஸ் புரோகிராம் அல்ல ஸ்பைவெயர் என்பது வைரஸ் அல்ல.பல அண்டி வைரஸ் புரோகிராம்கள், ஸ்பைவெயர் புரோகிராம்களைத் தடுப்பதில்லை. எனவேதான் அண்டி வைரஸ் புரோகிராம்கள் இன்ஸ்டோல் செய்யப்பட்டிருந்தாலும், ஸ்பைவேர்களைத் தடுக்கும் புரோகிராம்களையும் நாம் இன்ஸ்டோல் செய்திடவேண்டும்.

செக்யூரிட்டி சூட் (Security Suite) என்றுசொல்லப்படுகிற தொகுப்புக்களில், அண்டி வைரஸ் புரோகிராம், பைவெயர் புரோகிராம் மற்றும் பயர்வோல் சேர்ந்தே கிடைக்கின்றன. ஆனால் இந்தவகை தொகுப்பு புரோகிராமினால், உங்கள் கணனி இயக்கம் மெதுவாகிறது என்றால் தனித்தனியே ஒவ்வொரு தடுப்பிற்கும் தனிப் புரோகிராமினை நிறுவலாம்.

**பயர்வோல்**

மைக்ரோசொப்ட் தன் ஒப்பரேட்டிங் சிஸ்டத்திலேயேபயர்வோல் தடுப்பு ஒன்றினைத் தருவது ஒரு நல்ல முயற்சியாகும். ஆனால் கூடுதல் வசதிகள் கொண்ட, சிறப்பாகச் செயல்படும் பயர்வோல்கள் சில உள்ளன. அவற்றைப் பயன்படுத்தலாம்.ஒரு பயர்வோல், உங்கள் கணனிக்குள் உங்கள் அனுமதி இன்றி,அல்லது உங்களுக்குத் தெரியாமலேயே நுழையும் எதனையும், அது ஸ்பைவெயர், வைரஸ்,மால்வெயர்,ஹேக்கர் போன்ற எதுவாக இருந்தாலும் அவற்றைத் தடுக்கிறது.

பயர்வோல் செட்டிங்ஸ் சிலவேளைகளில் குழப்புவது போல் இருக்கும். எனவே தெளிவடைந்த பின்னரே, அதனை அமைத்துப் பயன்படுத்தவேண்டும்.பயர்வோல் அமைத்த பின்னர், அவை சரியாக உள்ளனவா என்று அறிய நீங்கள் Hackerwatch. org/Malwarehelp.org என்ற இரண்டு தளங்களின் உதவியை நாடலாம்.

**அப்டேட் ,அப்டேட்**

உங்களுடைய செக்யூரிட்டி சொப்ட்வெயர் அடிக்கடி அப்டேட் செய்யப்பட்டால் தான்,திடீர் திடீரென உருவாக்கப்பட்டு வரும் கெடுதல் அளிக்கும் புரோகிராம்களைத் தடுக்கலாம். விண்டோஸ் அப்டேட்ஸ், செக்யூரிட்டி அப்டேட்ஸ், பேட்சஸ், டெபினிஷன்ஸ், உங்களுடைய பயர்வோல், அண்டி வைரஸ் புரோகிராம், ஸ்பைவெயர் புரோகிராம் ஆகிய அனைத்தும் அப்டேட் செய்யப்பட்டதாகவே இருக்க வேண்டும்.

**பாதுகாப்பான இன்டர்நெட் பயணம்?**

இன்டர்நெட் பிரவுஸ் செய்வது, இப்போதெல்லாம் ஊர்ந்து, பறந்து, பாய்ந்து செல்லும் ஜீவராசிகள் வாழும் காட்டின் நடுவே நடந்து செல்வது போல ஆகிவிட்டது. எந்த நேரத்தில் எந்தவைரஸ் அல்லது மால்வெயர் வந்து நம்மைத் தாக்கும் என்று நமக்குத் தெரியாது. சில வழிமுறைகளைக் கடைப்பிடித்தால், நாம் இவற்றைத் தடுக்கலாம்.

இணையத்தளங்களில் எந்த லிங்க்கிலும் கிளிக் செய்திட வேண்டாம். 25 நாளில் 25 கிலோ எடைகுறைய, இங்கே கிளிக் செய் திடுக என்று உங்களைத் தூண்டும் வாசகம் இருக்கும்.அதிலிருந்து ஓடிவிடுங்கள். பிரபல மான சினிமா நடிகை குறித்த சுவாரஸ் யமான தகவல் குறித்து அறிவிப்பு இருக்கும். அலட்சியப் படுத்துங்கள். பொப் அப்விண்டோ எழுந்து வருகிறதா? அதில் இது போன்ற செய்தி உள்ளது. உடனே அதில் உள்ள எக்ஸ் அடையாளத்தில் கிளிக் செய்து அதனை மூட முயற்சிக்காதீர்கள். அதில் கிளிக் செய்தால் கூட அது ஒக்டோ பஸ் போல உங்களை இழுத்துக் கொண்டு நாசப்படுத்தும்.

அதுதானே அப்போதைக்கு அக்டிவ் விண்டோ. எனவே ஆல்ட் + எப் 4 அழுத்துங்கள்.

அது உடனே மூடப்படும். இதே போலத் தான் இமெயில் செய்திகள் கொண்டு வரும் லிங்க்களும் ஏதனையும் தொட வேண்டாம். (தொடரும்)




# ஜிமெயிலில் சில இமெயில்களுக்குத் தடை

நம் மின்னஞ்சல் முகவரிக்குத் தேவையற்ற நபர்கள் பலரிடம் இருந்து தொடர்ந்து அஞ்சல் செய்திகள் வந்துகொண்டே இருக்கும். நிச்சயமாக அவை பயனற்றவை என்று தெரிந்தும், வேறு வழியின்றி அவற்றை நம் மெயில் பொக்ஸி லிருந்தும்,ட்ரேஷ் பொக்ஸிலிருந்தும் நீக்கிக் கொண்டிருப்போம்.இதற்குப் பதிலாகக் குறிப்பிட்ட முகவரியிலிருந்து வரும் மெயில்களை, வடிகட்டி அவற்றை இன்பாக்ஸுக்கு அனுப்பாமல் இருக்கும் வசதியினை ஜிமெயில் தருகிறது.

**அதனை எப்படி செட் செய்வது எனப் பார்க்கலாம்**

ஜிமெயிலில் இத்தகைய இமெயில்களின் முகவரிகளுக்கென மற்ற தளங்கள் தருவது போல பிளாக் லிஸ்ட் வசதி இல்லை. இருப்பினும் அவற்றை எப்படி தடைசெய் வது என இங்கு காண்போம்.

நீங்கள் இத்தகைய மெயில்களுக் கென ஒரு பில்டர் தயாரிக்க வேண்டும். இதற்கு உங்கள் எக்கவுண்ட் மூலம் ஜிமெ யிலுக்குச் செல்லவும்.நீங்கள் எந்த இமெயில் முகவரிகளிடமிருந்து, மின்னஞ் சல்களைப் பெற விரும்பவில்லையோ, அவற்றின் முன் ஒரு சியி டிக் அடையாளத்தை ஏற்படுத்தவும். அடுத்து திரையின் மேலாக உள்ள More Actions என்ற பகுதியில் கிளிக் செய்திடவும். இங்கு Filter Messages like these என்ற இடத்தில் பின்னர் கிளிக் செய்திடவும். உடன் Create filter என்ற விண்டோ காட்டப்படும். நீங்கள் தடை செய்திட விரும்பும் மின்னஞ்சல் காட்டப்படும். நீங்கள் தடை செய்திட விரும்பும் மின்னஞ்சல் முகவரிகள் அனைத்தும் From பீல்டில் இருப்பதனைப் பார்க்கலாம். அந்த மின்னஞ்சல் முகவரிகள் சரியாக உள்ளனவா என்று பார்க்கவும்.

நீங்கள் விரும்பினால், ஓர் இணையத் தளத்திலிருந்து வரும்அனைத்து மெயில்களையும் தடை செய்திடலாம். அதற்கு @ என்ற அடையாளம் மட்டும் அமைத்து, அதன் பின்னர் தளத்தின் பெயரை அமைக்கவும். இத்துடன் மெயில் செய்தியில் சில சொற்கள் உள்ள மெயில்களையும் தடை செய்திடலாம். இதனை எல்லாம் முடித்தவுடன், அடுத்துNext Step என்ற பட்டனை அழுத்தவும். அடுத்து என்ன செயலை நீங்கள் மேற்கொள்ள விரும்புகிறீர்களோ, அந்த பொக்ஸ் முன் டிக் அடையாளத்தினை அமைக்கவும். எடுத்துக்காட்டாக, விரும்பாத இமெயில் வந்தால், உடனே அழிக்க வேண்டும் என எண்ணினால் , Delete it என்பதில் டிக் அடையாளம் அமைக்கவும். இந்த முகவரிகளில் இருந்தும் வரும் அனை த்து மெயில்களும் உடன் ட்ரேஷ் பெட்டிக்குச் செல்லும்.

நீங்கள் தேர்ந்தெடுக்க Skip the Inbox, Archive it, Mark as read, Star it , Apply a labes, Forward it, Send Canned response, and Never send to spam என்ற பல ஒப்ஷன்கள் உள்ளன. சில வேளைகளில், சிலரிடமிருந்து வரும் இமெ யில் களைப் பார்த்துவிட்ட பின்னர், அழிக்க எண்ணலாம்.அத்தகைய இமெயில்கள் ட்ரேஷ் பெட்டியில் 30 நாட்கள் தங்கும். இவற்றை எல்லாம் முடித்தவுடன் Create Filter Button என்ற பட்டனை அழுத்தவும். உடனே பில்டர் செயல்படத் தொடங்கும். எவற்றை எல்லாம் தடுத்து வைத்திருக்கி றீர்கள் என்பது Settings Filters என்ற இடத்தில் பட்டியலாகக் காட்டப்படும். உங்க ளுடைய விருப்பம் மாறும்போது, இந்த இமெயில் முகவரிகளில் மாற்றங்களை ஏற்படுத்தலாம்.

# சீன, ரஷ்ய நாடுகளின் வீட்டோ அதிகாரத்தை பிரயோகித்து பான்கீமூனை வீட்டுக்கனுப்புவோம்

## ஜாதிக ஹெல உறுமய கொக்கரிப்பு



இந்தியா, சீனா உட்பட பதினைந்து நாடுகளின் ஆதரவைத் திரட்டி ஐ.நா. செயலாளர் பான் கீ-மூனின் நிபுணர் குழுவை வாபஸ் பெறச் செய்வதுடன் மீண்டும் அவருக்கு அப் பதவி கிடைக்காத வண்ணமும் சர்வதேச ரீதியிலான அரசியல் வெற்றிக்கான இராஜதந்திர நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

இலங்கை யுத்தத்தில் 76 ஆயிரம் பேர் கொல்லப்பட்டதற்காக நிபுணர் குழு அமைக்கும் மூன், ஈராக்கிலும் ஆப்கானிஸ்தானிலும் 11 இலட்சத்திற்கும் மேலானோர் கொல்லப்பட்டதைக் கண்டுகொள்ளாதிருப்பது ஏன் என்றும் கேள்வி கேட்கப்பட்டது.

கொழும்பில் தேசிய நூலக ஆவண வாக்கல் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே ஹெல உறுமயவின் செயலாளரும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க இதனைத் தெரிவித்தார். அங்கு அமைச்சர் மேலும் உரையாற்றுகையில்,

ஐ.நா. செயலாளர் இலங்கை வந்த போது, ஜனாதிபதியுடன் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையில் எந்தவொரு இடத்திலும் நிபுணர் குழு அமைப்பது தொடர்பில் குறிப்பிடவில்லை.

இதனை எதிர்க்கட்சிகள் புரிந்து கொள்ள வேண்டும். இறுதிக் கட்ட யுத்தத்தின் போதான நடவடிக்கைகள் தொடர்பாக நல்லிணக்க குழுவை ஜனாதிபதி அமைத்துள்ளார்.

எனவே ஐ.நா. சட்டங்களை மீறி மூன் நிபுணர் குழுவை அமைந்துள்ளார். இது எமது படையினரது பிரச்சினை மட்டுமல்ல. நாட்டு மக்கள் அனைவரதும் பிரச்சினையாகும். எனவே தான் அனைத்து மக்களும் ஓரணியில் எதிர்ப்பை வெளியிடுகின்றனர்.

எமது படையினரை சர்வதேச யுத்த நீதி மன்றத்தில் நிறுத்துவதற்கு இடமளிக்கமாட்டோம்.

இதற்கெதிராக எமது சர்வதேச போராட்டம் தொடர்பாக ஜனாதிபதி, பாதுகாப்பு செயலாளர், வெளிநாட்டமைச்சர் ஆகியோருக்கு அறிவித்துள்ளோம்.

இதன் பிரகாரம் யுத்தத்தின் போது இடம் பெற்ற இழப்புகள், சேதங்கள் அனைத்து தரப்பினரதும் தரவுகளையும் வீடியோ நாடாக்கள் மற்றும் புகைப்படங்களையும் பாதுகாப்பு செயலாளரிடம் கோரியுள்ளோம்.

இத்தரவுகள் கிடைத்தவுடன் ஜனாதிபதியின் ஆலோசனைக்கும் உத்தரவுக்கும் அமைய அமைச்சரவை அந்தஸ்து கொண்ட அமைச்சர் தலைமையிலான குழுக்கள் அமைக்கப்பட்டு இந்தியா, சீனா, ரஷ்யா, பிரேஸில், பொலிவியா, எகிப்து, கியூபா, கென்யா, உக்ரேன், சவுதி, இந்தோனேசியா, ஈரான், ஜப்பான், ஆர்ஜென்டீனா, தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளுக்கும் அனுப்பி வைக்கப்படும்.

அத்தோடு அணி உறுப்புரிமை 110 நாடுகளின் ஆதரவுகளைப் பெறவும் முயற்சிகளை முன்னெடுப்போம் எனவும் நிபுணர் குழுவை வாபஸ் பெறச் செய்வோம் என்றும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

இங்கு உரையாற்றிய ஹெல உறுமயவின் சட்ட ஆலோசகரும் மேல் மாகாண சபை அமைச்சருமான உதய கம்மன்பில் தெரிவிக்கையில்,

சீன, ரஷ்ய நாடுகளின் வீட்டோ அதிகாரத்தை பிரயோகித்து பான் கீ மூனை விட்டுக்கு அனுப்பி வைப்போம். மீண்டுமொரு தடவை ஐ.நா. செயலாளர் பதவியில் அமரும் அவரது கனவு ஒரு போதும் நனவாகாது என்றும் தெரிவித்தார். (6-4)

## நாடு முழுவதும் 2 ஆயிரம் கிராமசேவையாளர் வெற்றிடங்கள்

(கொழும்பு)

நாடு முழுவதும் உள்ள பிரதேச செயலகங்களில் 2 ஆயிரம் கிராம சேவையாளர்களுக்கான பதவி வெற்றிடங்கள் இருப்பதாக உள்நாட்டு அலுவலகங்கள் பொது நிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது.

போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களைக் கொண்டு கிராமசேவையாளர்களுக்கான நியமனங்கள் வழங்கப்பட உள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை புத்தளம் மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள் பதினாறில் முப்பத்தைந்துக்கு மேற்பட்டவர்களுக்கான பதவி வெற்றிடங்கள் நிலவுவதாக கூறப்படுகிறது. (6)

# யாழ்ப்பாண கோட்ட மட்ட சைவநெறிப் போட்டி முடிவுகள்

(தொடர்ச்சி)

**சகலகலா வல்லி மாலை**

*தரம் 3*

இருவர் முதலாமிடம் இ.தாரணி (சென் ஜோண் பொஸ்கோ வித்தி.), ம.நிலுசாந்தினி (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), சி.சியானுகா (கொட்டடி நமசிவாய வித்தி.)

*தரம் 4*

அ.ஆரபி(சென்ஜோண் பொஸ்கோ வித்தி.), ம.நிசாந்தினி ( சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), க.சஞ்சீவன் (யாழ்.மத்திய கல்லூரி)

*தரம் 5*

ச.துளசிகா (சென்ஜோண் பொஸ்கோ வித்தி.), சி.சபிலன் (சென்பற்றிக்ஸ்கல்லூரி), க.தாட்சாயினி (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி).

*தரம் 6*

ர.யதுசா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), கே. மதுஷன் (சென்ஜோண்ஸ் கல்லூரி), த.மகாலட்சுமி (கொட்டடி நமசிவாய வித்தி.)

*தரம் 7*

வே.சாயிகா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), ந.நிரோஜன் (கொழும்புத்துறை இந்து மகாவித்தி), இருவர் மூன்றாமிடம் த.ரகுராம் ( சென்பற்றிக்ஸ் கல்லூரி), ஜி. சோபனா ( கொட்டடி நமசிவாய வித்தி

*தரம் 8*

ம. திரிஷிகா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), உ.ஆரபி (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), ந.லோகசீலன் ( சென்பற்றிக்ஸ் கல்லூரி).

*தரம் 9*

ந.வேதாஷினி (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), சி.சிவதாசன் (சென்ஜோண்ஸ் கல்லூரி), ந.தர்சிகா (கொழும்புத்துறை இந்து மகா வித்தி.)

*தரம் 10*

ர. கீர்த்தனா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) கே.பிரியங்கி (திருக்குடும்ப கன்னியர்மடம்), இருவர் மூன்றாமிடம் வே. விஜயலக்சினி (கொழும்புத்துறை இ.ம. வித்தி, க.காயத்திரி (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி).

*தரம் 11*

அ.தரண்யா (வைத்தீஸ்வராக் கல்லூரி), சி.ஆரணி (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), ம.நீலுகா (கொழும்புத்துறை இ.ம.வித்தி), உ.ரிஷிகேசினி (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை).

**மாலை கட்டுதல்**

*தரம் 6*

ஞா.மதுஷா (வேம்படி மகளிர் உயர் தரப்பாடசாலை) ,வை. லிங்கவிநாயகி (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), ர.நிலக்சி (கொட்டடி நமசிவாய வித்தி.)

*தரம் 7*

ர.டிலக்ஷனா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை),ஜெ.நகுலா (திருக்குடும்ப கன்னியர் மடம்), இ.கௌசல்யா ( சன்மார்க்க மகா வித்தி.)

*தரம் 8*

ஞா.சுபாஸ்திகா (வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலை), த.கஜமுகன் (சென் பற்றிக்ஸ் கல்லூரி), சு.கிருசனா (வைத்தீஸ்வராக் கல் லூரி)

*தரம் 9*

ஞா.கஜேந்தினி (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), வி.பவித்திரா (திருக்குடும்ப கன்னியர்மடம்), இருவர் மூன்றாமிடம் சி.விதுரா (நாவாந்துறை றோ.க. வித்தி), வி.சிவசங்கீதா (வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலை).

*தரம் 10*

த.சுதர்சனா (கொழும்புத்துறை இ.ம. வித்தி), கு.கஜிந்தன் (யாழ்.மத்திய கல்லூரி), செ.காஞ்சனா (நாவாந்துறை றோ.க.வித்தி)

*தரம் 11*

பு.அபிர்ணா (நாவாந்துறை றோ.க.வித்தி), த.துளசிகா ( சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), இருவர் மூன்றாமிடம் மு.சாளினி (வைத்தீஸ்வராக் கல்லூரி), சி.கயானி ( வண்.நாவலர் ம.வித்தி

**தோரணம் பின்னுதல்**

*தரம் 6*

க.கனிஸ்ரா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), ஜீ.சரணியா (திருக்குடும்ப கன்னியர் மடம்), இ.டிலோசிகா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி)

*தரம் 7*

ஸ்ரீ.வினுஷியா (திருக்குடும்பகன்னியர் மடம்), ச.கௌதமன் ( சென்பற்றிக்ஸ் கல்லூரி), ம.காயத்திரி (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை)

*தரம் 8*

யோ. கிருஷாந் (சென்பற்றிக்ஸ் கல்லூரி), ம.சுகன்யா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), வி.விதுஷனா (திருக்குடும்ப கன்னியர் மடம்)

*தரம் 9*

கி.நேருஜா (திருக்குடும்ப கன்னியர் மடம்), செ.விஷ்ணுகா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), சி.துவாரகன் (சென்பற்றிக்ஸ் கல்லூரி)

*தரம் 10*

வீ. கஸ்தூரிக்கா (திருக்குடும்ப கன்னியர் மடம்), சி.கிரிசாந் (யாழ்.மத்திய கல்லூரி), ரா. நர்மதா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி)

*தரம் 11*

இ.சானுஜன் (கொழும்புத்துறை இந்து மகா வித்தி), ப.நிரோஜன் (சென்பற்றிக்ஸ் கல்லூரி), தே.மயூரி (கொழும்புத்துறை துரையப்பா வித்தி.

**வினாடி வினாப் போட்டி**

தரம் 11 (சென் ஜோண்ஸ் கல்லூரி), தரம் 12 ( சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), தரம் 13 (யாழ்.மத்திய கல்லூரி) . (6-4)

# அரசியலமைப்பு திருத்தங்கள் குறித்து சகல கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை

## ஐ.தே.க தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தும் அதேவேளை, பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஏனைய அரசியல் கட்சிகளுடனும் ஐ.தே.க.வின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளார் என்று அக் கட்சியின் பொதுச் செயலாளரும், எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

சிறுபான்மை இனப் பிரதிநிதித்துவம் குறையாத வகையிலான தேர்தல் முறை மாற்றத்துக்கே ஐ.தே.க. ஆதரவளிக்கும் என்றும் அவர் கூறினார். கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், நிறைவேற்று அதிகார முறைமையுடனான பிரதமர் பதவி, அரசியலமைப்பு திருத்தங்கள் மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் முறை மாற்றங்கள் தொடர்பாக ஐ.தே.கட்சி தொடர்ந்தும் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கும். இப் பேச்சுக்களின் போது 17ஆவது திருத்தச் சட்டம், சுயாதீன ஆணைக் குழுக்கள் அமைப்பது தொடர்பாக கவனம் செலுத்தப்படுவதோடு எமது கட்சி சார்பில் அதனை வலியுறுத்துவோம் என்றார்.

அதேவேளை இவ் விடயங்கள் தொடர்பாக ஐ.தே.முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளுடனும் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளுடனும் எதிர்வரும் நாட்களில் தமது தலைவர் ரணில் விக்கிரமசிங்க பேச்சுவார்த்தைகளை நடத்தத் தீர்மானித்துள்ளார்.

இப் பேச்சுவார்த்தைகளை நேர்மையாகவும் வெளிப்படைத் தன்மையாகவுமே நாம் நடத்துகிறோம். அதேவேளை உள்ளூராட்சி தேர்தல் முறை மாற்றங்கள் தொடர்பாக அரச தரப்பினரை சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளோம்.

இதன்போது சிறுபான்மை பிரதிநிதித்துவம் தொடர்பில் அதிக கவனத்தை செலுத்துவோம். தொகுதிவாரி மற்றும் விகிதாசார தேர்தல் முறை கலந்த ஒரு திட்டத்தை தயாரிக்கவும் அதன்மூலம் சிறுபான்மை இனத்தவருக்கு அநீதி ஏற்படாத விதத்தில் நியாயம் பெற்றுக்கொடுக்கவும் ஐ.தே.கட்சி முன்னிற்கும்.

விகிதாசார முறை கைவிடப்பட்டு தொகுதி வாரி முறை அறிமுகப்படுத்தப்பட்டால் சிறுபான்மை இனப்பிரதிநிதித்துவம் குறை யும். இதன் போது அதனைஅதிகரிப்பதற்கு என்ன செய்யவேண்டும் என்பது தொடர்பிலும் அரச தரப்பினருடன் கலந்தாலோசிக்கவுள்ளோம்.

ஜனாபதிபதிக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளின் போது வடபகுதி மக்களின் மீள் குடியேற்றம், மனித உரிமைப் பிரச்சினைகள் தொடர்பாகவே கவனம் செலுத்தப்பட்டுள்ளது.எனவே திருத்தங்கள் தொடர்பில் நாம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினருடனும் பேச்சுவார்த்தைகளை நடத்துவோம். (6-4)

# கொழும்பு தமிழ்ச் சங்கம் நடாத்தும்

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) பரீட்சை

தரம்-13 | முன்னோடிப் பரீட்சை | ஆனி 2010

### உயிரியல் II -A நேரம் : 1 மணி

(03) (A) 1. DNA மீளச் சேர்க்கை தொழில்நுட்பம் என்றால் என்ன?

..............................................................................................

2. DNA மீளச் சேர்க்கை தொழில்நுட்பத்தில் மேற்கொள்ளப்படும் படிமுறைகளை ஒழுங்கு முறையில் தருக?

..............................................................................................

3. இத் தொழில்நுட்பத்தில் Plasmid ன் பங்களிப்பு யாது?

..............................................................................................

4. மட்டுப்படுத்தப்பட்ட அக நியூக்கிளியேசு நொதியம் என்பது யாது?

5. இது எவ்வங்கியிலிருந்து பெறப்படும்? நொதியத்துக்கு ஒரு உதாரணம் தருக?

..............................................................................................

(B) 1. மனித Insulin இத்தொழில்நுட்பம் மூலம் தயாரிக்கப்படும். ஆனால் ஈமோகுளோபின் தயாரிக்கப்பட முடியாததற்கு காரணம் என்ன?

..............................................................................................

..............................................................................................

2. பாரம்பரிய குறைபாடுகளை நிவர்த்தி செய்ய Amino Centesis (அமினியன் பாய்பொருள் பகுப்பு) என்ற சோதனை எவ்வகையில் உதவுகிறது?

3. பாரம்பரிய குறைபாடுகளை நிவர்த்தி செய்ய மேலும் ஒரு பரிசோதனையான கோரியோன் சடைமுளை பகுப்பு சோதனை அமினியன் பகுப்பு சோதனை களுக்கு இடைப்பட்ட வேறுபாடு ஒன்று தருக?

4. பிறப்புரிமையியல் முறையில் நோய்களுக்கான நிவாரணம் மேற்கொள்ளப் படும் (Gene therapy) ஒரு நோய்க்கு உதாரணம் தருக?

5. முளைவகைப் பெருக்கத்துக்குட்பட்ட DNA சேமிப்புக்கும் (cDNALibrary) பரம்பரையலகு வங்கிக்கும் (gene bank) இடையிலுள்ள வேறுபாடுகள் இரண்டு தருக?

(C) 1. நிறைவில் ஆட்சி, சம ஆட்சி என்ற பதங்களை வரையறுக்குக.
நிறைவில் ஆட்சி

சம ஆட்சி

2. இவற்றிற்கிடையிலான வேறுபாடு என்ன?

3. மனித குடித்தொகையில் அவதானிக்கப்படும் சம ஆட்சிக்குரிய பாரம்பரிய தோற்றப்பாடு ஒன்று தருக?

..............................................................................................

4. இதனால் பெறப்படும் அனுகூலம் யாது?

..............................................................................................

5. குடித்தொகை பரம்பரை அலகு என்ற பதத்தை வரையறுக்குக?

..............................................................................................

..............................................................................................

(D) 1. DNA இரட்டிப்பு என்ற செயற்பாடு ஒரு அரைமாறா இரட்டிப்பு செயற்பாடு என வர்ணிக்கப்படுகிறது. இங்கு அரை மாறா இரட்டிப்பு என்பதால் யாது விளக்குகிறீர்?

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

2. DNA இரட்டிப்பில் பங்கு கொள்ளும் நொதியங்கள் இரண்டு தருக?

..............................................................................................

3. Darvin ன் கூர்ப்புக் கொள்கையில் உள்ள குறைபாடுகள் எவை?

..............................................................................................

4. இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்து முன்வைக்கப்பட்ட கொள்கை யாது?

..............................................................................................

5. இக் கொள்கையை எடுத்துக் கூறுக?

..............................................................................................

..............................................................................................

(04) (A) 1. பின்வரும் பதங்களை விளக்குக.
(a) சந்ததிப் பரிவிருத்தி

..............................................................................................

..............................................................................................

(b) பிரிவிலி

..............................................................................................


..............................................................................................

(c) ஈரில்லம்

..............................................................................................

..............................................................................................

1. கீழே தரப்பட்ட தாவரத்தின் வாழ்க்கை வட்டத்தில் A-G வரையுள்ள பகுதிகளை பெயரிடுக.



# தரம் -05 புலமைப்பரிசில் பரீட்சை -2010

ஆசிரியர்:-எஸ்.எ.சந்திரபவன்

## மாதிரி பரீட்சை –II
## வினாத்தாள் –II

நேரம்- 1 மணி 15 நிமிடம்

★ கீழுள்ள பாடலை நன்றாக வாசித்து, அது தொடர்பான வினாக்களுக்கு விடை தருக.

> ஆட்டுக் குட்டி எந்தன் குட்டி
> அருமையான செல்லக்குட்டி
> ஓட்டம் ஓடி வந்திடுவாய்
> உனக்கு முத்தம் தந்திடுவேன்.

01. இப்பாடலை வாசித்து அது தொடர்பான கீழ்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையினைப் புள்ளிக் கோட்டினில் எழுதுக.

1) ஆட்டின் இளையது யாது?

2) பாடலில் உள்ள தன்மைச் சொல் ஒன்று எழுதுக.

3) ஆட்டுக் குட்டி என்பதனைப் பிரித்தெழுதுக.

4) அருமை என்பதன் எதிர்ச் சொல் யாது?

5) ஓட்டம் என்பதனைப் பன்மைச் சொல்லாக எழுதுக.

6) உனக்கு என்பது தன்மையா? முன்னிலையா? படர்க்கையா?

7) வந்திடுவாய் என்பது என்ன காலம்?

8) உனக்கு முத்தம் தந்திடுவேன் எனும் வாக்கியத்தில் மறைந்துள்ள எழுவாய் எது?

(8புள்ளிகள்)

02. கீழ்வரும் சொற்களின் ஒத்த சொற்களை எழுதுக.

1) புனல் : ......................................
2) அனல் : ......................................
3) சாகரம் : ......................................
4) மாருதம் : ......................................

(4புள்ளிகள்)

★ சரியான விடையின் கீழ் கோடிடுக.

03. 1) பெயராகவும் வினையாகவும் வரக்கூடிய சொல் எது?
i) பனி ii) படி iii) பசி

2) தென்னை - தோப்பு என்பது போல, கொய்யா -
i) காடு
ii) தோட்டம்
iii) தோப்பு

3) கடுவன் - பெட்டை என்பது போல, கலை என்பதற்கு
i) நாம்பன்
ii) பிணை
iii) போத்து

4) பாட்டு என்பதைக் குறிக்கும் ஓர் எழுத்துச் சொல் எது?
i) கா ii) சா iii) பா

5) கீழே சரியாக எழுதப்பட்டுள்ள சொல் எது?
i) பாவைக்காய் ii) பாகற்காய் iii) பாவக்காய்

6) ஓர் மரத்தினதும் ஓர் பறவையினதும் பெயர்கள் இணைந்த சொல் எது?
i) கிளிநொச்சி
ii) சொச்சிக்கடை
iii) தாமரைக்கேணி

7) கீழ்வருவனவற்றுள் அஃறிணை சொல்லொன்று எது?
i) பிச்சைக்காரன்
ii) குரங்கு
iii) வேட்டைக்காரன்

8) கீழ்வருவனவற்றுள் மண்ணுடன் தொடர்புடைய சொல் ஒன்று எது?
i) புழுதி
i) குறுணி
i) சுண்ணாம்பு

(8புள்ளிகள்)

04. இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லை அடைப்பினுள் இருந்து தெரிவு செய்து இடைவெளியில் எழுதுக.

பாக்குவெட்டி , நுளம்பு, காளான், தர்மச்சக்கரம், வெட்டுக்கிளி

1) (.........................................) பச்சையம் இல்லாத ஓர் தாவரமாகும்.

2) மலேரியா போன்ற நோய்களின் நோய்க்காவி (.........................................) ஆகும்.

3) (.........................................) தாவரங்களுக்கு தீங்கு விளைவிக்கும் ஓர் பிராணியாகும்.

4) நெம்புகோல் வகைக்கு (.........................................) ஓர் உதாரணமாகும்.

5) தேசிய இலச்சினையில் (.........................................) காணப்படுகின்றது.

(5புள்ளிகள்)

05. கீழே அட்டவணையிலே தரப்பட்டுள்ள நிறைகளை நிறுப்பதற்கு பயன்படுத்தக்கூடிய பொருத்தமான படிக்கற்களின் எண்ணிக்கைகளை எழுதுக.

| | நிறை | 2kg | 1kg | 500g | 200g | 100g | 50g |
|---|---|---|---|---|---|---|---|
| | உ.ம் 3kg 850g | 1 | 1 | 1 | 1 | 1 | 1 |
| 1. | 4kg 650g | .......... | .......... | .......... | .......... | .......... | .......... |
| 2. | 5kg 750g | .......... | .......... | .......... | .......... | .......... | .......... |
| 3. | 7kg 900g | .......... | .......... | .......... | .......... | .......... | .......... |

*(2 x 3 = 06 புள்ளிகள்)*

06. 1) கீழ்வரும் நிறைகளைக் கழித்து எழுதுக.

i) 4kg 700g - 2kg 350g = (......................)

ii) 6kg 750g - 3kg 900g = (......................)

2) கீழ்வரும் நீளங்களை கூட்டி எழுதுக.

i) 4m 650mm + 6m 800mm = (......................)

ii) 9m 350mm + 4m 700m = (......................)

3) கீழ்வரும் அளவுகளைப் பெருக்கி எழுதுக.

i) 5*l* 200*ml* x 4 = (......................)

ii) 7*l* 50*ml* x 5 = (......................)

4) கீழ்வரும் அளவுகளை வகுத்து எழுதுக.

i) 36 600*ml* ÷ 6 = (......................)

ii) 49 350*ml* ÷ 7 = (......................)

*(2 x 4 = 8 புள்ளிகள்)*

07. கீழ்வரும் எண் கோலம் ஒவ்வொன்றும் அமைந்துள்ள கோல அமைப்பை அறிந்து, அக்கோலத்தில் இடைவெளியில் வரவேண்டிய எண்ணை எழுதுக.

1) 9 → 15 → .......... → 27
2) 04 → .......... → 18 → 25
3) 1/4 → 1/2 → .......... → 1
4) 0.5 → 1.0 → .......... → 2.0

*(04 புள்ளிகள்)*

08. கீழே நேரங்கள் சொல்லப்பட்டுள்ள முறையினை அறிந்து, அவற்றுக்குரிய நேரத்தினை இலக்கத்தினால் எழுதுக.

1) ஆறு கழிந்து ஐம்பது நிமிடங்கள் (......................)

2) பத்துக் கழிந்து நாற்பத்தைந்து நிமிடங்கள் (......................)

*(04 புள்ளிகள்)*

09. சரியான விடைகளைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

1) மூன்று மாம்பழங்களின் விலை 15 ரூபா ஆகும். எனவே, 5 மாம்பழங்களின் விலையைக் காண்க.

(............................)

2) 15 முட்டைகளின் விலை 150 ரூபா ஆகும். எனவே ஒரு முட்டையின் விலையைக் காண்க.

(............................)

3) தேங்காய் ஒன்றின் விலை 35 ரூபா எனின், 500 ரூபாவிற்கு எத்தனை தேங்காய்கள் வாங்கலாம்?

(............................)

4) குமரன் பிடுங்கிய 4325 தேங்காய்களையும் சிவனேசன் பிடுங்கிய 2050 தேங்காய்களையும் சேர்த்தால்

மொத்த தேங்காய்கள் எத்தனை?

(............................)

(8 புள்ளிகள்)

10. கீழ்வரும் வினாக்களின் சரியான விடையின் கீழ் கோடிடுக

1) நீரில் வளரும் தாவரங்களில் ஒன்று எது?
   i) விடத்தல்
   ii) ஆம்பல்
   iii) கோரை

2) நீர்ச்சக்கரத்தை சுழல வைப்பதற்கு உதவும் நீர் எது?
   i) அருவிநீர்
   ii) கடல்நீர்
   iii) ஆற்றுநீர்

3) தாவரங்கள் செழித்து வளரக்கூடிய மண்வகை எது?
   i) மணல் மண்
   ii) களிமண்
   iii) வண்டல்மண்

4) நீர் ஒட்டிக் கொள்ளாத இயல்புடைய இலை எது?
   i) பலா இலை
   ii) தாமரையிலை
   iii) வெற்றிலை

5) வெடித்துப் பரவும் இயல்பு கொண்ட வித்து வகை எது?
   i) ஆமணக்கு
   ii) பூசணி
   iii) நாயுருவி

6) நிலத்தின் கீழ்த் தண்டு மூலம் இனம்பெருகும் தாவரம் எது?
   i) வல்லாரை
   ii) இஞ்சி
   iii) வற்றாளை

7) உணவைக் கடித்து உண்ணும் வாயுறுப்பைக் கொண்ட பிராணி எது?
   i) தேனி
   ii) வண்ணத்துப்பூச்சி
   iii) எறும்பு

8) கீழ்வருவனவற்றில் வித்துமூலம் இனம்பெருகாத தாவரம் எது?
   i) தென்னை
   ii) வாழை
   iii) கமுகு


9) மனிதன் உட்சுவாசிக்கும் வளி எது?
   i) காபனீரொட்சைட்டு
   ii) நைதரசன்
   iii) ஒட்சிசன்


10) பின்வருவனவற்றில் பூச்சிகளைத் தின்னும் பிராணி எது?
   i) தவளை
   ii) மண்புழு
   iii) தேனி

(10 புள்ளிகள்)

11. கீழே காணப்படும் பொதுவான உபகரணங்களின் சரியான தமிழ் பெயர்களை எழுதுங்கள்

i)  (..................................)

ii)  (..................................)

iii)  (..................................)

iv)  (..................................)

(4 புள்ளிகள்)

12. பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.

i) Air Pilot :..............................  ii) Cook :............................

iii) Carpenter :............................  iv) Farmer :............................


(4 புள்ளிகள்)

13. கீழ்வரும் தமிழ்ச் சொற்களுக்குரிய ஆங்கிலச் சொற்களை எழுதுக.

i) விற்பனையாளர் :..............................
ii) தையற்காரர் :..............................
iii) தபாற்காரர் :..............................
iv) ஓட்டுநர் :..............................

(4புள்ளிகள்)

14. எளிய பரிசோதனை ஒன்றை தரம் 5 மாணவர்கள் செய்தார்கள் அது பின்வருமாறு-



1) இப்பரிசோதனை எதனைக் கண்டறிவதற்காகச் செய்யப்பட்டது?

..................................................................................

..................................................................................

2) இப்பரிசோதனையில் உமது அவதானம் ஒன்று எழுதுக.

..................................................................................

.................................................................................. .(8 புள்ளிகள்)

15. கீழுள்ள கூட்டில் உள்ள சொற்களை வைத்து பொருத்தமான முறையில் இடைவெளிகளை நிரப்புக.

நீர்மட்டம் / கவசங்களை / மேலணியை

(i) கட்டடம் கட்டும் தொழிலாளி கையில் .................................................வைத்திருந்தான்.


(ii) சமையல் செய்யும் போது .................................................. அணிய வேண்டும்.

(iii) விளையாடும் போது பாதுகாப்புக் ...................................................அணிதல் வேண்டும்.

(3 புள்ளிகள்)

16. கீழ்வரும் தாவரங்களின் பெயர்களை கூட்டிலுள்ள பெயர்களிலிருந்து தெரிவு செய்து எழுதுக.

நொச்சி / திப்பிலி / நன்னாரி / மிளகு

1.  (..............................)

2.  (..............................)

3.  (..............................)

4.  (..............................)

(4 புள்ளிகள்)

17. எனது பொழுதுபோக்கு முத்திரை சேகரித்தல் ஆகும். நான் பலவகையான முத்திரைகளையும் சேகரிக்கும் ஆர்வம் கொண்டவன்.......

தொடர்ந்து பொருத்தமான எழுவாய், பயனிலை சீராக அமைந்த 6 வாக்கியங்கள் எழுதுக.

i)..................................................................................

iv)................................................................................ .(12 புள்ளிகள்)

A ...................................... B ......................................
C ...................................... D ......................................
E ...................................... F ......................................
G ......................................


2. இவ் வாழ்க்கை வட்டத்தை எடுத்துக்காட்டும் தாவரத்தைப் பெயரிடுக

3. இவ் தாவரம் எக்கணத்தைச் சேர்ந்தது?

4. இக் கணத்துக்குரிய இரண்டு சிறப்பியல்புகளை எழுதுக?

5. இத் தாவரத்தின் வாழ்க்கை வட்டத்தில் காணப்படும் நீர் வாழ்க்கைக்குரிய தரை வாழ்வுக்குரிய இசைவாக்கங்கள் இரண்டு தருக?

(B) 1. கீழுள்ள வரைபடம் மானிடப் பெண்ணின் சூல்வித்தகத்தின் அமைப்பை எடுத்துக்காட்டுகின்றது. இதில் M,N,O,P,Q ஆகிய பகுதிகளைப் பெயரிடுக.




M...................................... N......................................
O ...................................... P......................................
Q......................................

2. R இல் காணப்படுவது எது?

..........................................................................


3.அம்புக்குறி மூலம் M,N இல் குருதி செல்லும் திசையை எடுத்துக்காட்டுக

4. ஒட்சியேற்றப்பட்ட குருதியைக் கொண்டு செல்லும் கட்டமைப்பு எது?

5. மனித சூல்வித்தகத்தில் தாய் -சேய் இடையில் பதார்தங்களின் பரிமாற்றத்தை அதிகரிப்பதற்கு சூல்வித்தகத்தில் காணப்படும் இசைவாக்கங்கள் மூன்று தருக?

6. மனிதனின் முதிர்மூலவுரு ஈமோகுளோபின் நிறையுடலி ஈமோகுளோபினை விட ஒட்சிசனுக்கு நாட்டம் கூடியது. இதற்கான காரணம் யாது?

(C) 1. படத்தில் காட்டப்பட்ட கட்டமைப்புகள் மனிதனின் வன்கூட்டின் இரு கூறுகளை எடுத்துக்காட்டுகிறது. இவற்றை அடையாளம் காண்க




x ..........................................................................
y ..........................................................................

2. உரு x இல் உள்ள விசேட இசைவாக்கங்கள் யாது?

..........................................................................
..........................................................................

3. உரு y இற்கும் x இற்கும் இடையிலுள்ள தொடர்பு யாது?

..........................................................................
..........................................................................

4. உரு y ஆனது உரு x உடன் எவ்வாறு தொடர்பு கொள்ளும்?

..........................................................................
..........................................................................

(D) 1. என்புருக்கி நோய் என்பது யாது?

2. சாதாரண சுகதேகி ஒருவரின் என்புக்கும் இந்நோய் உடையவரின் என்புக்கும் இடையான பிரதான வேறுபாடு யாது?

..........................................................................
..........................................................................

3. இக்குறைபாடு தோன்றுவதற்கான பிரதான காரணங்கள் எவை?

..........................................................................
..........................................................................

4. என்பிழையத்தின் உடற்றொழிவியல், உயிர் இரசாயன தொழில்கள் ஒவ்வொன்று தருக?

## கட்டுரை வினாக்கள்

**ஏதாயினும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

(01) வைரசுவின் சிறப்பியல்புகளை எடுத்துக் கூறுக.
பற்றீரிய விழுங்கி எவ்வாறு விருந்துவழங்கி பற்றீரியாவில் தொற்றுதலை ஏற்படுத்தி தாக்கத்தை விளைவிக்கின்றது என்பதை விளக்குக.

(02) 1. இனம் என்றால் என்ன? ஒரு புதிய இனம் ஏற்கனவே உள்ள ஒரு இனத்திலிருந்தே தோன்றுகின்றது. இது ஒரு தொடர்ச்சியான செயற்பாடாகும் இன உற்பத்தியில் அடங்கியுள்ள பல்வேறு படிமுறைகளை ஒழுங்காக எடுத்துக் கூறி ஒவ்வொரு படியிலும் நடைபெறும் செயற்பாடுகளை சுருக்கமாகக் கூறுக?

2. புவியில் குறித்த ஒரு இனம் அழிவடைவதை தடுப்பதற்கு மேற்கொள்ளும் முறைகளை சுருக்கமாக உதாரணத்துடன் விளக்குக?

(03) பின்வருவனபற்றி சிறுகுறிப்பு எழுதுக.
1) Thalasaemia
2) கொல்கியுடல்
3) வரித்தசை

(04) பிறப்புரிமையியலில் மாறல் என்றால் என்ன என்பதை விளக்கி இது கூர்ப்புக்கு எவ்வகையில் உதவும் என விளக்குக.

(05) ஒரு சீத்திடநிலை என்றால் என்ன?
ஒரு சீத்திடநிலையில் சிறுநீரகம் மேற்கொள்ளும் தொழிற்பாடுகளை குறிப்பிட்டு ஒவ்வொரு செயற்பாட்டையும் சுருக்கமாக விளக்குக.

(06) பூச்சிப்பீடைகளைக் கட்டுப்படுத்துவதற்கு உதவக்கூடிய பல்வேறு முறைகளை விளக்குக?

# தேர்தல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்த அரசாங்கமும் ஐக்கிய தேசியகட்சியும் இணக்கம்

(கொழும்பு)

தேர்தல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்த அரசாங்கமும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணக்கம் தெரிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் நாட்களில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் இந்த புதிய தேர்தல் முறைமை அறிமுகப் படுத்தப்படவுள்ளதாகவும் விருப்பத் தெரிவு மற்றும் தொகுதி வாரி அடிப்படையிலான தேர்தல் முறைமையாக இந்த தேர்தல் முறைமை அமையும் எனக் குறிப்பிடப்படுகிறது.

ஆளும் கட்சியின் பிரதம கொறடா தினேஷ் குணவர்த்தனவின் இல்லத்தில் ஆளும் மற்றும் ஐக்கிய தேசியகட்சி உறுப்பினர்களுக்கிடையில் நடைபெற்ற சந்திப்பின் போது இந்த விடயங்கள் வெளியாகியுள்ளன.

தேர்தல் முறை மாற்றம் தொடர்பில் அரசாங்கத்தின் யோசனைத்திட்டத்தை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ விளக்கியுள்ளதுடன் அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட யோசனைத்திட்டத்தில் அனேகமானவற்றை ஐக்கிய தேசியக்கட்சி பிரதிநிதிகள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

ஆளும் கட்சி ,எதிர்க்கட்சி மற்றும் சிறுபான்மைக்கட்சிகளினது பிரதிநிதிகளைக் கொண்ட குழு ஒன்று உள்ளூராட்சி மன்ற எல்லைகளை நிர்ணயிக்கும் நோக்கில் உருவாக்கப்படவுள்ளது.

தொகுதிவாரி அடிப்படையில் 70 வீதமான பிரதிநிதிகளும் விருப்பத்தெரிவு அடிப்படையில் 30 வீதமானவர்களும் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இச்சந்திப்பில் ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் ஜோசப்மைக்கல்பெரேரா,திஸ்ஸ அத்தநாயக்க, காமினிஜெயவிக்கிரம,ஜோன் அமரதுங்க,லக்ஸ்மன் கிரியல்ல மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அசன் அலி ஆகியோர் கலந்துகொண்டதாக தெரிவிக்கப்படுகிறது. (6)

# ஜானக பெரேரா படுகொலைச் சம்பவம் குறித்து சாட்சியமளிக்குமாறு நீதவான் ஒருவருக்கு உத்தரவு

(கொழும்பு)

மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா படுகொலைச் சம்பவம் குறித்து சாட்சியமளிக்குமாறு நீதவான் ஒருவருக்கு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

நீதவான் மற்றும் நான்கு குற்ற விசாரணைப் பிரிவு அதிகாரிகள் இவ்வாறு விசேட நீதிமன்றில் ஆஜராகி சாட்சியமளிக்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுவதுடன், எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 4 ஆம் திகதி இந்த விசாரணைகள் நடைபெறவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

முதல் தடவையாக நீதவான் ஒருவரையும் சாட்சியமளிக்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

வடமத்திய மாகாண உயர் நிதிமன்ற நீதவான் மேனக விஜேசுந்தரவினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அனுராதபுர பிரதம நீதவான் தர்ஷிக்கா விமலசிறியும் மற்றும் பொலிஸ் அத்தியட்சகர் பி.டி.எஸ்.ஆர்.நாகாமுல்ல உள்ளிட்ட குற்ற விசாரணைப் பிரிவு அதிகாரிகளும் ஒக்ரோபர் மாதம் நீதிமன்றில் ஆஜராகி சாட்சியமளிக்க உள்ளதுடன் குறித்த படுகொலை வழக்குத் தொடர்பான விசாரணைகளை இதற்கு முன்னர் நீதவான்களான ருசிர வெலிவத்த மற்றும் தர்ஷிக்க விமலசிறி ஆகியோர் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)

# திருகோணமலை துறைமுகத்தில் அமெரிக்காவின் போர்க்கப்பல்

(கொழும்பு)

அமெரிக்காவின் துருப்புக்காவி போர்க் கப்பல் ஒன்று நேற்று முன்தினம் திருமலை துறைமுகத்தை வந்தடைந்துள்ளதாக திருமலை தகவல்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் அவை மேலும் தெரிவிக்கையில்,

அமெரிக்காவின் யு.எஸ்.எஸ்.பேர்ல் ஹார்பர் எனப்படும் போர்க் கப்பல் நேற்று முன்தினம் திருமலை துறைமுகத்தை வந்தடைந்துள்ளது. திருமலை வந்தடைந்த இந்த கப்பலின் கடற்படை அதிகாரிகளை இலங்கை கடற்படையினர் வரவேற்றுள்ளனர்.

186 மீற்றர் நீளமான இந்த கப்பல் 11 251 தொன் எடைகொண்டது. தரையிறங்கு கலமாக பயன்படுத்தப்படும் பேர்ல் ஹர்பர் கப்பலில் 24 அதிகாரிகள் உட்பட 352 கடற் படையினர் பணியாற்றி வருகின்றனர்.

இது பல சிறிய தரையிறங்கு கலங்களை காவிச்செல்வதுடன் 500 ஈரூடக கொமோண்டோக்களை தரையிறங்கும் தகமையும் கொண்டது. (6)

# அரசியலமைப்பு திருத்தங்களின் போது முக்கிய விடயங்களுக்கு முன்னுரிமை

## அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் மேற்கொள்ளவுள்ள அரசியல மைப்பு திருத்தங்களின் போது முக்கியத்துவம் வரய்ந்த விடயங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று முன்னணியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

அரசியலமைப்பு திருத்தங்களை மேற்கொள்ளும் செயற்பாடுகளின் தற்போதைய நிலைமை குறித்து விபரிக்கையிலேயே அமைச்சர் இந்த விடயங்களை கூறினார்.

அவர் இது தொடர்பில் மேலும் கூறியதாவது,

நாட்டுக்கும் மக்களுக்கும் பொருத்தமான முறையிலான அரசியலமைப்பு திருத்தங்களுக்கு செல்வதற்கே அரசாங்கம் எதிர்பார்க்கின்றது. அதற்கான முயற்சியிலேயே நாங்கள் இறங்கியுள்ளோம்.

அதாவது தற்போது நடைமுறையில் இருக்கும் அரசியலமைப்பில் பல்வேறு திருத்தங்களும் மாற்றங்களும் தேவை என்பதனை அனைத்து தரப்பினரும் ஏற்றுக் கொள்கின்றனர்.

எனவே முக்கியத்துவம் வாய்ந்த அரசியலமைப்பு திருத்தங்களுக்கு முன்னிரிமை அளிக்கும் வகையிலேயே நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. முக்கியமாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையில் மாற்றங்களை கொண்டு வருதல் உள்ளூராட்சி மன்ற தேர்தல் முறைமையில் மாற்றங்களை கொண்டு வருதல் உள்ளூராட்சி மன்ற தேர்தல் முறைமையில் மாற்றங்களை ஏற்படுத்தல் மற்றும் 17 ஆவது திருத்தச் சட்டத்தில் திருத்தங்களை செய்தல் போன்ற விடயங்களுக்கே முதலில் அதிக முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது என்றார். (6-4)

# 15.07.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள் நிகழ்வுகள்

- 1240-அலெக்சாண்டர் நெவ்ஸ்கி தலைமையிலான ரஷ்யப் படைகள் சுவீடன் படைகளை நேவா இடத்தில் இடம்பெற்ற சமரில் தோற்கடித்தனர்.
- 1381-இங்கிலாந்தில் உழவர்களின் கிளர்ச்சிக்குத் தலைமை வகித்த ஜோன் போல் என்ற மதகுரு இரண்டாம் ரிச்சார்ட் மன்னனின் முன்னிலையில் தூக்கிலிடப்பட்டார்.
- 1741-அலெக்சி சிரிக்கொவ் தென்மேற்கு அலாஸ்காவைக் கண்ணுற்று தனது ஆட்கள் சிலரை படகில் அங்கு அனுப்பினார். இவர்களே முதன் முதலில் அலாஸ்காவில் தரையிறங்கிய முதலாவது ஐரோப்பியர் ஆவர்.
- 1815- நெப்போலியன் பொனபார்ட்பெலெரொபோன் என்ற கப்பலில் இருந்து அதன் கப்டனிடம் சரணடைந்தான்.
- 1840-ஆஸ்திரியா, பிரித்தானியா, புருசியா மற்றும் ரஷ்யா ஆகியன ஒட்டோமான் பேரரசுடன் லண்டனில் அமைதி ஒப்பந்தத்தை ஏற்படுத்தின.
- 1857-சிப்பாய்க் கலகம்: கான்பூரில் இரண்டாவது படுகொலைகள் இடம் பெற்றன.
- 1860-இலங்கையின் பிரதம நீதியரசராக சேர்எட்வேர்ட் ஷெப்பர்ட் கிறீசி நியமிக்கப்பட்டார்.
- 1870-புரூசியாவும் இரண்டாம் பிரெஞ்சுப் பேரரசும் தமக்கிடையே போரை ஆரம்பித்தன.
- 1870-அமெரிக்க உள்நாட்டுப் போர் : ஜோர்ஜியா அமெரிக்கக் கூட்டணியில் மீண்டும் இணைந்து.அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்பு கலைக்கப்பட்டது.
- 1888-ஜப்பானின் பண்டாய் மலை வெடித்ததில்500 பேர் கொல்லப்பட்டனர்
- 1916-வோஷிங்டன் சியாட்டில் நகரில் வில்லியம் போயிங் ஜோர்ஜ் வெஸ்டர் வெல்ட்போயிங் விமான நிறுவனத்தை ஆரம்பித்தனர்.
- 1927 - வியென்னாவில் 89 ஆர்ப்பாட்டக்காரர் பொலிசாரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.
- 1954 - இரண்டு வருட உருவாக்கத்தின் பின்னர் ஐக்கிய அமெரிக்காவின் போயிங் 707 விமானம் பறக்க விடப்பட்டது.
- 1955 - அணுவாயுதங்களுக்கு எதிராக 18 நோபல் விருதாளர்கள் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.
- 1974 - சைப்பிரஸ் நிக்கோசியாவில் கிரேக்க ஆதரவு தேசிய வாதிகள் அந்நாட்டு ஜனாதிபதி மக்காரியோசைப் பதவியில் இருந்து அகற்றி நிக்கோஸ் சாம்ப்சனை ஜனாதிபதியாக்கினர்.
- 1983 - பாரிசில் ஓரி விமானநிலையத்தில் ஆர்மீனியத் தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலில் 8 பேர் கொல்லப்பட்டு 55 பேர் காயமடைந்தனர்.
- 1991 - ஈழத்து எழுத்தாளர் நெல்லை க.பேரன் எறிகணை வீச்சில் குடும்பத்தோடு கொல்லப்பட்டனர்.
- 2002 - வோல் ஸ்ட்றீட் ஜேர்னல் ஊடகவியலாளர் டானியல் பேர்ளப் படுகொலை செய்த குற்றத்துக்காக பிரித்தானியாவில் பிறந்த அகமது ஷேக் என்பவனுக்கு பாகிஸ்தான் நீதிமன்றம் தூக்கு தண்டனை வழங்கித்தீர்ப்பளித்தது.
- 2003 - மொசில்லா நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது.

### பிறப்புகள்

- 1606 - ரெம்பிரான்ட் டச்சு ஓவியர் (இ.1669)
- 1876 - மறைமலை அடிகள் தனித்தமிழ் இயக்கத்தை ஆரம்பித்தவர் (இ.1950)
- 1903 - கே.காமராஜ் தமிழ்நாட்டின் முன்னாள் முதல்வர் (இ.1975)

### இறப்புகள்

- 1904 - அன்ரன் செக்கோவ் ரஷ்ய எழுத்தாளர் (பி.1860)
- 1991 - நெல்லை க.பேரன் ஈழத்து எழுத்தாளர் (பி.1946)
- 2002 - எம்.எச்.எம். ஷம்ஸ் இலங்கையின் ஊடகவியலாளர் (பி.1940)



2003 - ஈழத்தின் பிரபல நாதஸ்வரக்கலைஞர் என்.கே.பத்மநாதன் இறந்தார். (பி.1931)

# “வல்வையின் அபிவிருத்திக்கான செயற்குழு” ஒரு புதிய அத்தியாயத்தின் ஆரம்பம்

இன்றைய உலக தொழில்நுட்பத்தில் குறிப்பிடக்கூடியது தகவல் தொழில்நுட்பமாகும். அருகருகே இருந்தவர்களிடம் சைகைகளினால் பரிமாறப்பட்ட செய்தியே ஆரம்ப காலங்களில் “தகவல்” எனப்பட்டது. அவ்வாறு பரிமாறப்பட்ட செய்திகளின் ஒலி வடிவங்களே மனிதனின் ஆரம்பகால மொழிகளாக மாற்றமடைந்தன. ஆனால் இன்றோ விண்வெளியைக் கடந்து ஏனைய கிரகங்களில் செயற்படும் ஆராய்ச்சிக்கலங்களுடனும் விண்வெளி ஆய்வு கூடங்களுடனும் பூமியில் இருந்தவாறே சமகாலத்தில் தொடர்பு கொள்ளும் வகையில் தகவல் தொழில்நுட்பம் பெருவளர்ச்சி கண்டுள்ளது.

தினம் தினம் நவீன மாற்றங்களிற்கு உள்ளாகிவரும் இத்தகைய தொழில்நுட்பத்தால்



பரந்துவிரிந்த இவ்வுலகம் மனிதனின் “*உள்ளங்கை நெல்லிக்கனியாகிவிட்டது.*” இத்தகைய தகவல் தொழில்நுட்பயுகத்தில் வல்வெட்டித்துறையும் இன்றைய தினத்தில் தனது புதிய காலடியை எடுத்து வைக்கின்றது.

நாற்பதாண்டு காலம் தன்னையும் தனது மக்களையும் சிந்திக்காத வல்வைமண் உலக மாற்றத்திற்கு அமைய புதிய உலகுடன் இன்று முதல் தன்னையும் இணைத்துக்கொள்கின்றது. வல்வெட்டித்துறையினை நவீனமாற்றங்களிற்கு தயார்படுத்தும் இத்தகைய செயற்பாட்டின் முதலாவது அங்கமே இன்றைய IT CENTREஇன் அறிமுகமாகும்.

எதிர்கால வல்வெட்டித்துறையின் நலன் கருதியும் அதன் வளர்ச்சி நோக்கியும் ஆரம்பிக்கப்படும் இத் தகவல் தொழில்நுட்ப நிலையத்தினை VDAG எனப்படும் “வல்வையின் அபிவிருத்திக்கான செயற்குழு” வே முன்னெடுக்கின்றது. இன்றைய உலகத்தின் வளர்ச்சியையும் அதன் மாற்றத்தையும் நன்கு அவதானித்து அதற்கமைய எதிர்கால வல்வையை உருவாக்கும் பலதிட்டங்களின் முதலாவது செயற்திட்டமாகவே IT CENTRE இன் இன்றைய அறிமுகமும் ஆரம்பவிழாவும் அமைகின்றது.

அறுபதாண்டுகளிற்கு முன்னால் இலங்கையின் ஏனைய துறைமுகங்களைவிட நாட்டு மக்களின் அத்தியாவசியத் தேவையான உணவுப் பொருட்களின் பிரதான இறங்குதுறையாக வல்வெட்டித்துறையே விளங்கியது.



அக்காலத்தில் மிகவும் ஆரோக்கியமான சமுதாயமாக புகழ்பெற்றிருந்த எமது மண் சுதந்திரத்தின் பின்னான காலத்தில் ஏற்பட்ட சமூக அரசியல் சூழ்நிலையால் எதிர்மறையாக குற்றம்சாட்டப்பட்ட மண்ணாக மாறியது. இதன் காரணமாக தனித்துவமான சமூகக் கட்டமைப்பை இழந்து கல்வித்துறையிலும் பொருளாதார ரீதியிலும் மிகவும் பின்தங்கிய பிரதேசமாக மாற்றமடைந்தது.

இந்நிலையிலேயே இலங்கையின் இன்றைய அரசியல் சமூக நிலைமையினை நன்கு கருத்தில் கொண்டு எதிர்கால வல்வெட்டித்துறையின் நலன் கருதிய நவீன சிந்தனையில் உருவாக்கப்பட்டதே V.D.A.G எனப்படும். “வல்வையின் அபிவிருத்திக்கான செயற்குழு” ஆகும். இவ்வருட ஆரம்பம் முதல் செயற்படத்தொடங்கிய V.D.A.G இன் நோக்கம் முழுமையும் ஆரோக்கியமான சமுதாயமாக எதிர்கால வல்வெட்டித்துறையை உருவாக்குவதேயாகும்.

பாய்க்கப்பல்களின் இறங்குதுறையாக புகழ்பெற்றிருந்த வல்வெட்டித்துறையை இன்றைய உலகமயமாக்கலிற்கு அமைய நவீன தகவல் தொழில்நுட்ப மையமாக மாற்றி அதனூடாக புதியகைத்தொழில் நகரமாகவும் சிறந்த கடல் துறைமுகமாகவும் வல்வெட்டித் துறையினை உருவாக்கும் பெருங்கனவினை நிறைவேற்றும் முதன் முயற்சியாக ஆரம் பிக்கப்படுவதே V.D. A.G இன் IT CENTRE ஆகும்.

இந்தியநலனின் அடிப்படையில் உருவாகும் “சேது” சமுத்திர திட்டத்தின் பின்னால் எதிர்காலத்தில் சிறந்த கப்பல் மற்றும் மீன்பிடித்துறைமுகமாக மாற்றமடையக்கூடிய கடல் மற்றும் புவியியல் அமைவிடமாக வல்வெட்டித் துறையே காணப்படுகின்றது. 1951ஆம் ஆண்டில் “RE. OPENING OF A NORTH CEYLON PORT” என்னும் நூலின் மூலம் எமது

டன் நவீன மீன் பிடித்தல் முறைமையினை அறிமுகப்படுத்தி உள்ளூர் மீன்பிடித்தொழிலாளரின் வளர்ச்சிக்கு எப்பொழுதும் துணை நிற்கும். மேற்கூறிய துறைகளின் புதிய கற்கைநெறிகளின் வழிகாட்டல் தளமாகவும் IT centre விளங்கும். சமூக மாற்றங்களுடன் இணைந்து ஆரோக்கியமான சமுதாயத்தை வல்வையில் உருவாக்குவதே V.D.A.G முழுமையான செயற்பாட்டின் நோக்கமாகும்.

IT CENTRE உருவாக்கலில் ஆரம்ப கணணி உதவிகளை வழங்கிய GROUP OF 10 FRIENDS IN UK மற்றும் புலம்பெயர்ந்தும் வல்வையின் நலனையே முதன்மைப்படுத்தும் சிந்தனையாளர்களுடன் நிலையத்தினை உருவாக்குவதிலும் அதனின் இயங்குநிலைக்கு உயிர்கொடுக்கும் வல்வை வாழ் முன்னோடி இளைஞர்களும் V.D.A.G இன் இத்திட்டத்தில் பங்குதாரர் ஆகின்றனர்.

V.D.A.G வல்வெட்டித்துறையில் நடைபெறப்போகும். அபிவிருத்தி திட்டங்களை ஒழுங்குபடுத்தி (Structured), ஒருமுகப்படுத்தி, அவற்றை ஒரு இலகுவான கட்டமைப்பில் தெளிவான முறையில் வெளிப்படுத்துவதுடன், அதன் ஆரம்பம் தொடக்கம் முடிவுவரை எல்லோருக்கும் விளங்க தகுந்த வகையில் அறியத்தரும்.

தனியே தொழில் நுட்ப வளர்ச்சியுடன் மாத்திரம் இல்லாமல் வல்வெட்டித்துறையில் வாழும் மக்களின் கல்வி, கலாசாரம், பண்பாடு வளர்ச்சிகளுடன் பொருளாதார வளர்ச்சியையும் ஒருங்கிணைத்து ஒரு தனித்துவமான அணுகு முறையையே V.D.A.G மேற்கொள்ள உள்ளது.

இந்தவிதமான அணுகுமுறையால் வல்வெட்டித்துறையிலேயே எம்மவர்களுக்கான தொழில்வாய்ப்புகள் வரக்கூடிய சந்தர்ப்

பெற்று அதனை ஏனைய வல்வை மக்களிற்கும் அறிமுகப்படுத்தி தெரிந்தெடுக் கப்படும் திட்டங்களின் மூலம் எதிர்காலத்தில் ‘‘தீர்க்கமான’’ வல்வெட்டித்துறையை உருவாக்குவதே ‘VDAG’ இன் நோக்கமாகும்.

ஆரோக்கியமான சமுதாயமாக வாழ்ந்த வல்வெட்டித்துறை மக்களை மேலும் ஆரோக்கியமுள்ளதாக்கி எதிர்காலத்தில் சுயநிறைவுள்ள சமுதாயமாக உருவாக்கும் நோக்கத்துடன் முன்னெடுக்கப்படும் இச்செயல் முறைத் திட்டத்தில் உடனடித்திட்டங்கள், குறுங்காலத் திட்டங்கள், நீண்டகாலத்திட்டங்கள் எனமூன்று வகையான திட்டங்கள் தேவைப்படுகின்றன. எனினும் தற்போது வல்வெட்டித்துறையின் அவசர உதவித்தேவைகளே உடனுக்குடன் நிறைவேற்றப்படுகின்றன.

பன்முகப்படுத்தப்பட்ட தேவைகளினால் நிரம்பி வழியும் வல்வெட்டித்துறையின் வழங்குநர்களாக புலம்பெயர் வாழ் வல்வையர்களே விளங்குகின்றார்கள். இதனால் தேவைகளையும் வழங்குநர்களையும் நேரடியாக இணைப்பதன் மூலம் விரைவாக தேவைகளை நிறைவேற்றுவதுடன் நீண்டகால யுத்தத்தினால் துவண்டு போயிருக்கும் எம்மக்களிடம் பெருநம்பிக்கையை வளர்ப்பதும் ‘VDAG’ இன் நோக்கமாகின்றது.

‘VDAG’இல் தலைவர், செயலாளர், பொருளாளர் என்னும் எவ்வகையான தகுதிநிலைப் பதவிகளும் கிடையாது. ஏனெனில் இது ஒரு சமுதாயத்திற்கானது. அவ்வகையில் இது அச்சமூகத்தின் ஒவ்வொருவருக்கும் சம உரிமையுள்ளதாகின்றது. தேவைகள் தீர்ப்போர் என்னும் இதன் இரு நிரல்களிலும் வல்வெட்டித் துறையைச் சேர்ந்த யாரும் எப்பொழுதும் இணைந்துகொள்ளலாம். இவ் வகையில்

## ஆரோக்கியமான சமுதாயத்தை நோக்கி

## VDAG இன் IT CENTRE!......

முன்னையவர்களான வல்வைசேவா சங்கத்தினரால் வெளியிடப்பட்ட கனவினையும் இவ்விடத்தில் V.D.A.G முன்னெடுப்பதினை பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகின்றது.

வல்வெட்டித்துறையின் புகழ்பெற்ற கலாசாரத்தினை கட்டிக்காப்பதிலும் வல்வையின் பாரம்பரிய பண்பாட்டினை எதிர்கால வல்வையரிடம் கையளிப்பதிலும் V.D.A.G இன் IT CENTRE முனைப்போடுசெயற்படும். அதே வேளை இளம் சிறார்களின் கல்வியில் அதிக அக்கறை காட்டுவதுடன் எமது இளைஞர்களின் தொழிற்கல்வியிலும் அவர்களின் தொழில் வாய்ப்புக்களிற்கான முன்முயற்சிகளிலும் முழுமையான அர்ப்பணிப்புடன் IT CENTRE தனது வேலைத் திட்டங்களை முன்னெடுக்கும்.

உலகளாவிய வல்வையரின் வளங்களினை நேர்மையாகவும் சிந்தனைத் தெளிவுடனும் தாய் நில வல்வையில் ஒருங்கிணைப்பதன் மூலம் கிடைக்கும் நிதியினை விரயமற்ற முறையில் நகரின் அபிவிருத்திக்கு பயன்படுத்தமுடியுமென V.D.A.G நம்புகின்றது.

இம்முயற்சியில் ஊர் உணர்வாளர்களான உலகளாவிய மற்றும் உள்ளூர் செயல்வீரர்களின் இணைப்புக்களமாகவே IT CENTRE எப்பொழுதும் விளங்கும். இத்தகைய பகிரங்க இணைப்பின் மூலம் மக்களிடையேயான பெரு நம்பிக்கையை வளர்ப்பதுடன் வல்வெட்டித் துறையின் அபிவிருத்தியில் கூடிய கவனத்தைச் செலுத்தும். மேற்படி அபிவிருத்தியில் நகரின் கட்டுமானம் இயந்திரவியல் தொழில்நுட்பம், மோட்டார் வண்டிகள், மோட்டார்சைக்கிள், ஆட்டோ, மீன் பிடிப் படகுகளின் உள்ளிணைப்பு மற்றும் வெளியிணைப்பு இயந்திரங்கள் என பல்வேறு வகைப்படும். இவற்று

பத்தை V.D.A.G ஏற்படுத்த முனைகிறது.



Valvai Development Action Group இது வல்வெட்டித்துறை அபிவிருத்திக்கான செயற்குழு என தமிழ்ப்படுத்தப்படும். ஆனால் இது ஒரு குழுவை மாத்திரம் குறிப்பதல்ல. வல்வெட்டித் துறையின் தேவைகளையும் அபிவிருத்தி நோக்கிய செயற்பாடுகளையும் புலம்பெயர் மக்கள் முன்னெடுக்கும்போது அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு குழுக்களின் செயற்பாடகவே கருதப்படும். இதன்படி ஊருக்கான வல்வெட்டித் துறையில் பிறந்தவர் எல்லோரும் வல்வையர் என சொல்லிக்கொள்ளலாம். ஆனால் வல்வையின் அபிவிருத்திப் பணிகளில் இணைந்து செயல்படுவோர் மட்டுமே V.D.A.G என்னும் செயற்குழுவாக இனம் காணப்படுவர். வல்வெட்டித் துறையின் அபிவிருத்திக்கான பணிகளில் முன்பு இயங்கியவர்களை மட்டுமல்ல இனி மேல் இயங்குபவர்களையும் இப்பெயர் அடையாளப்படுத்தும்.

**வல்வையின் அபிவிருத்திக்கான செயற்குழு!.....**

வல்வெட்டித்துறையின் வரலாற்றில் புதிய பாய்ச்சலை ஏற்படுத்தி இருக்கும் ஒருபெயர் “VDAG” ஆகும். “Valvai Development Action Group”என்பதன் சுருக்கமே “VDAG”. வல்வெட்டித் துறையின் வரலாற்றில் இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின் அமைக்கப்பட்ட வல்வை சேவாசங்கம் முதல் இன்று வல்வையிலும் புலம்பெயர் நாடுகளிலும் இயங்கிக்கொண்டிருக்கும் வல்வெட்டித்துறை நலன் புரிச் சங்கங்கள் மற்றும் வல்வை ஒன்றியங்கள் போலவே வல்வெட்டித்துறையின் உடனடித்தேவைகளை நிறைவேற்றும் ஒரு சங்கமாகவன்றி எதிர்கால வல்வெட்டித்துறையின் நலன்கருதிய நவீனதிட்டமிடலையும் அதற்கான செயற்திறனையும் தாயக மற்றும் புலம்பெயர் துறைசார் வல்வை மக்களிடம்

தேவைகளைக் கொண்டுவரும் தாய் நில வல்வையின் தனிநபர்கள், குழுக்கள் அல்லது சங்கங்கள் மற்றும் பொது நல நிறுவனங்களோ எப்பொழுதும் தமது தேவைகளுடன் ‘VDAG’ இல் இணைந்து கொள்ளலாம். இதே போல் புலம் பெயர் வல்வையர்களில் தனி நபர்கள் அல்லது குழுக்கள் மற்றும் சங்கங்களும் மேற் கூறிய தேவைகளை எப்பொழுதும் நிறைவேற்ற முன்வரலாம். இவ்வாறு நிறைவேற்ற முன்வருவதன் மூலம் வல்வெட்டித்துறையின் அபிவிருத்திப் பணிகளில் அவர்கள் எல்லோரும் இயல்பாகவே

என்.சிவரட்ணம்
ஓய்வுபெற்ற வடபிராந்திய
உதவிப்பொது முகாமையாளர்,
இலங்கை வங்கி

இணைந்து விடுகின்றனர். இவ்வாறான இயல்புநிலையைப் பேணுவதன் மூலம் வல்வைக்கான புதிய புதிய வழங்குநர்களை உருவாக்குவதுடன் ஏற்கெனவே வழங்குநர்களாக செயற்படுவோரை மேலும் உற்சாகமூட்டுவதிலும் ‘VDAG’ இன் பங்களிப்பு மிகுதியாகின்றது.

‘VDAG’ இது யாருக்காகவும் யாராலும் புதிதாக உருவாக்கப்பட்டதல்ல. பல்லாண்டுகளாக தொடர்ந்துவரும் வல்வையரின் செயற்பாடுகளினை இன்றைய, எதிர்கால களநிலைமைகளிற்கு அமைய நவீனமயப்படுத்தி பெயர் தீட்டப்பட்ட குழந்தைதான் ‘VDAG’ ஆகும்; ‘VDAG’ இது வளரவளர வல்வையும் வளரும். வல்வெட்டித்துறையும் உயரும்.

# மஹோற்சவம்

(அல்வாய்)

வதிரி காளைய தோட்ட திருவருள் மிகு ஸ்ரீ முத்துக்குமாரசாமி திருக்கோவில் வருடாந்த மகா உற்சவம் எதிர்வரும் 17ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

வேட்டைத் திருவிழா 23ஆம் திகதி மாலை 4 மணிக்கு வதிரி அம்மன் கோவிலடியில் நடைபெறவுள்ளதுடன் சப்பறத்திருவிழா 24ஆம் திகதி மாலை 5மணிக்கும் , மறு நாள் காலை 10மணிக்கு தேர்த்திருவிழாவும், 26ஆம் திகதி காலை 9மணிக்கு தீர்த்தத் திருவிழாவும், அன்று மாலை 4.30மணிக்கு மூலஸ்தான பூசை நடைபெற்று மாலை 5.30 மணிக்கு கொடியிறக்கம் நடைபெறும்.

மறுநாள் மாலை 5.30 மணிக்கு பூங்கா வனத்திருவிழாவும் நடைபெறவுள்ளது.(6-19)



சமூக அபிவிருத்தி மன்றத்தின் அனுசரணையுடன் மன்ற அலுவலகத்தில் கொழும்பு தந்தை செல்வா நற்பணி மன்றத்தினால் நடத்தப்பட்ட கண்ணாடி வழங்கலுக்கான கண் பரிசோதனை முகாமில் கண் வைத்தியர் அங்கத்தவர் ஒருவருக்கு கண் பரிசோதனை செய்வதையும் அருகில் மன்ற உத்தியோகத் தர்களையும் படத்தில் காணலாம்.

# தொட்டியினுள் தவறி வீழ்ந்த குழந்தை மரணம்

(சாவகச்சேரி)

கெற்பெலி மேற்கைச் சேர்ந்த ஒன்றரை வயதுடைய சிவகரன் சுதர்சன் என்ற ஆண் குழந்தை தண்ணீர் நிரம்பிய தொட்டியினுள் தவறுதலாக விழுந்ததால் மரணமடைந்துள் ளார்.

இதுபற்றி விசாரணை நடாத்தி 26 ஆம் திகதிக்கு விசாரணை அறிக்கையை கையளிக் குமாறு கொடிகாம பிரதேச திடீர் மரண விசார ணை அதிகாரி செல்வி இ.தவமலருக்கு சாவ கச்சேரி நீதிமன்ற நீதிபதி எ.எம்.எம். றியாட் உத்தரவிட்டுள்ளார். (6-29)

# அதிபர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் உள்ள தரம் 11 வகுப்பை உடைய பாடசாலைகளை சேர்ந்த அதிபர்களுக்கான கணித, விஞ்ஞான துரித கற்றல் செயல்திட்டம் தொடர்பான கலந்துரை யாடல் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ் வலய முகாமைத்துவ மண்ட பத்தில் நடைபெறவுள்ளது.

இதில் மேற்குறித்த அதிபர்களை தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ் வலய கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறி வித்துள்ளார். (4)

# வடமராட்சி கிரிக்கெட் சுற்றுத் தொடரில் 3 ஆவது சிங்க றெஜிமெண்ட் அணி சம்பியன்

(கரவெட்டி)

521 ஆவது படைப்பிரிவினரால் இரா ணுவ அணிகள் மற்றும் யாழ்.விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடைபெற்று வந்த 10 ஓவர் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி யின் இறுதி ஆட்டம் கடந்த 9 ஆம் திகதி பிற்பகல் 3 மணியளவில் நெல்லியடி குஞ்சர் கடை மைதானத்தில் நடைபெற்றது.

இதில் கரவெட்டி ஞானம்ஸ் அணியை எதிர்த்து குஞ்சர் கடை 3 ஆவது சிங்க றெஜி மெண்ட் அணி மோதியது. இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய கரவெட்டி ஞானம்ஸ் அணி 15 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட் டுக்களை இழந்து 82 ஓட்டங்களை பெற் றது.

இதில் துஷ்யந்தன் 20, அரவிந்தன் 12 ஓட்டங்களைப் பெற்றனர்.3 ஆவது சிங்க றெஜிமெண்ட் அணி சார்பாக பந்துவீச்சில் தெரகார 4, பண்டாரா 2, விக்கெட்டுக்களை யும் இந்திர சேன, நிமால் தலா ஒரு விக் கெட்டையும் சாய்த்தனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய 3 ஆவது சிங்க றெஜிமெண்ட் அணி 11.3 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை மாத்திரமிழந்து வெற்றி இலக்கை 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியனானது.

இதில் தெரகரா 23 நிமால், 21 ஓட்டங் களைப் பெற்றனர்.

ஞானம்ஸ் அணி சார்பில் பந்து வீச்சின் அனுசாந் 2 விக்கெட்டுக்களை யும் குண தீபன், விஜயகுமார் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப் போட்டியின் ஆட்ட நாயகனாக குஞ்சர் கடை 3 ஆவது சிங்க றெஜிமெண்ட் அணி யின் தெரகரா தெரிவுசெய்யப்பட்டார்.

இவ்இறுதிபோட்டிக்கு யாழ்.மாவட்ட கட்ட ளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த கதுறுசிங்கா, 522 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் லால் தெரகரா, யாழ்.மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர், இரா ணுவ உயர் அதிகாரிகள் மற்றும் கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் ஆகியோர் கலந்து கொண்டு வெற்றிபெற்ற கழகங் களுக்கு வெற்றி கேடயங்களையும் பரிசில் களையும் வழங்கி கௌரவித்தனர். (5-24)

# நற்கருணை வழிபாடு

(யாழ்ப்பாணம்)

அல்லைப்பிட்டி புனித கார்மேல் அன் னை ஆலயத்திருவிழாவின் நிறைவுத் திருப்பலிகள் இன்று வியாழக்கிழமை நடை பெறவுள்ளது.

இன்று மாலை 5மணிக்கு நற்கருணை வழிபாடும் திருப்பலியும் மறுநாள் வெள்ளிக் கிழமை காலை 6.30 மணிக்கு திருவிழா திருப்பலியும் அன்னையின் திருச்சொரூ பவனியும் இடம்பெறவுள்ளது. (4)


# சென்னையிலிருந்து நாடு கடத்தப்பட்டவர் கட்டுநாயக்க விமானநிலையத்தில் கைது

இந்தியாவின் சென்னை விமான நிலை யத்தில் இருந்து கடந்த 11 ஆம் திகதி இலங் கைக்கு நாடு கடத்தப்பட்ட விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

மன்னார் சிலாவத்துறை பிரதேசத்தைச் சேர்ந்த ஷாந்தன் யோகன் என்பவரே இவ் வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வன்னியில் நடைபெற்ற இறுதிக்கட்ட போரின் போது சந்தேக நபர் இந்தியாவுக்கு தப்பிச் சென்றுள்ளதாகவும் அங்கு இந்தியப் பிரஜை ஒருவரை தாக்கி காயமேற்படுத்திய சம்பவம் தொடர்பாக கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார் எனவும் பொலி ஸார் தெரிவித்தனர்.

மேலும் இந்தியாவுக்கு பிரவேசிக்க முடியாதவர்களின் பட்டியலில் சேர்க்கப்பட் டுள்ள யோகன் அங்கிருந்து நாடு கடத்தப் பட்டார் எனவும் இந்த நிலையில் கடந்த 11 ஆம் திகதி சென்னை சென்ற போது இந்திய அதிகாரிகள் அவரை கைதுசெய்து இலங் கைக்கு திருப்பியனுப்பியுள்ளனர் எனவும் நாடு கடத்தப்பட்ட நிலையில் சந்தேக நபர் ஏன் இந்தியாவுக்கு சென்றார் என்பது குறித்து பொலிசார் விசாரணை நடத்தி வருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (6)




DFCC வங்கியின் குத்தகை அடிப்படை செயற்பாட்டின் ஒரு நிகழ்வாக வாடிக்கையாளர் ஒருவருக்கு புத்தம் புதிய அசோக் லேலண்ட் பஸ் வண்டியொன்றை கையளிக்கும் நிகழ்வில் வங்கியின் முகாமையாளர், பிரதி முகாமையாளார், கொடு கடன் உத்தியோகத்தர் உட்பட பஸ் வண்டியின் பாவனையாளர்களையும் படத்தில் காணலாம்.

# காலி கடலில் தத்தளித்த நிலையில் காப்பாற்றப்பட்ட யுவதிகள் குறித்து விசாரணை

(கொழும்பு)

காலி கடலில் தத்தளித்த நிலையில் கடற் படையினரால் காப்பாற்றப்பட்டு பொலிஸா ரிடம் ஒப்படைக்கப்பட்ட இரண்டு யுவதிகள் தொடர்பாக மேலதிக விசாரணை நடத்த அவர்கள் பயங்கரவாத விசாரணைப் பிரிவி னரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 10 ஆம் திகதி காலியில் இருந்து 150 கடல் மைல் தொலைவில் இந்த யுவதி கள் தத்தளித்துக் கொண்டிருப்பதாக மீனவர் கள் வழங்கிய தகவலை அடுத்து கடற் படையினர் அவர்களை மீட்டுள்ளனர்.

இவர்கள் காலி துறைமுக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாக கடற்படைப் பேச்சாளர் கப்டன் அத்துல செனரத் தெரிவித்துள்ளார்.

இந்த யுவதிகள் பேசும் எந்த மொழி என இதுவரை அடையாளம் காணப்படவில்லை எனவும் ஆழ்கடலில் சிறிய படகொன்றை பிடித்தவாறு தத்தளித்து கொண்டிருந்த போதே இவர்கள் மீட்கப்பட்டுள்ளனர் எனவும் அவர்கள் தெரிவித்தனர். (6)

# விசேட கல்வித் தேவையுடைய மாணவர்களுக்கான போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வலய பாடசாலை களைச் சேர்ந்த விசேட கல்வித் தேவையுடைய மாணவர்களுக் கான (இயலாமையுடைய வர்கள்) சித்திரம் மற்றும் ஆக்கத்திறன் போட் டிக்ள் எதிர்வரும் 21ஆம் திகதி புதன் கிழமை முற்பகல் 9 மணிக்கு வலயக் கல்வி அலுவலக முகாமைத் துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே பங்கு பற்றவுள்ள மாணவர்களை தேவையான உபகர ணங்களுடன் உரிய நேரத் திற்கு தவறாது அனுப்பி வைக்கு மாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (4-7)

ALLIANCE FRANCAISE DE JAFFNA
61, Kachcheri-Nallur Road, Jaffna
Phone: 021 2228093
E-mail: alliancejaffna@yahoo. com

**Learn French the French Way French Classes**

சர்வதேச மொழியான **French** மொழி வகுப்புக்கள் French Emabassy இன் அனுசரணையுடன் பிரெஞ்சு கலாசார மையத்தின் ஊடாக கற்பிக்கப்படுகின்றது.

பிரெஞ்சு தூதரகம் மூலம் அங்கீகரிக்கப்பட்ட **ALLIANCE FRANCAISE** யாழ்ப்பாணத்தில் உள்ள பிரெஞ்சு மொழி பயிலுவதற்கான ஒரே ஒரு கலாசார மையமாகும்.

வகுப்புக்கள் : சனி, ஞாயிறுகளில்

விரிவுரையாளர்கள்: பிரான்சியரும், பிரெஞ்சில் தகைமை பெற்றோரும்

*புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.*

மேலதிக விபரங்களை நேரில்/தொலைபேசியினூடாகப் பெறலாம்.

(1863)

# 42 கோடி இந்தியர்கள் வறுமையில் தவிப்பு

## ஐ.நா. ஆய்வில் தகவல்

இந்தியாவில் எட்டு மாநிலங்களில் 42 கோடியே 10 இலட்சம் பேர் வறுமையில் தவிப்பதாக ஐ.நா. சபையின் ஆய்வறிக்கை யில் குறிப்பிடப்பட்டுள்ளது.

166 நாடுகளில் பணியாற்றும் ஐ.நா. சபையின் வளர்ச்சித் திட்ட அதிகாரிகள், இந்தியா குறித்து ஆய்வு செய்து ஆய்வ றிக்கை ஒன்றை தயார் செய்துள்ளனர்.

அந்த அறிக்கையில், பீகார், சத்தீஸ்கர், ஜார்க்கண்ட், மத்தியப் பிரதேசம், ஒரிசா, மேற்கு வங்கம், உத்தரப்பிரதேசம், ராஜஸ் தான் மாநிலங்களில் 42.1 கோடி பேர் வறு மையில் வாழ்வதாகக் கூறப்பட்டுள்ளது.

ஆபிரிக்க கண்டத்தில் உள்ள 26 பின்தங்கிய நாடுகளில் வறுமையில் வாடு வோரின் எண்ணிக்கை 41 கோடியாகக் கணக்கிடப்பட்டுள்ளதுடன் இந்திய ஏழைக ளின் எண்ணிக்கை அதையும் தாண்டியுள் ளது.

அதாவது,இந்திய மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் வறுமையின் பிடி யில் சிக்கித் தவிப்பதாகவும், இந்தியப் பெண்களில் பாதிப் பேர் வறுமைக்கோட் டுக்கு கீழ் வாழ்வதாகவும் ஐ.நா. ஆய்வறிக் கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2020 இல் இந்தியா வல்லரசாகும் என்று மார்தட்டும் வேளையில் இந்த ஆய்வறிக்கை அதிர்ச்சியளிப்பதாக உள்ளது. (6)

# மும்பையில் குளோரின் வாயுக்கசிவால் 3பேர் பலி;60ற்கும் மேற்பட்டோர் பாதிப்பு

(மும்பை)



மும்பை துறைமுகத்துக்கு அருகே குளோ ரின் வாயு கசிந்ததால் ஏற்பட்ட விபத்தில் 3 பேர் உயிரிழந்ததாக தகவல்கள் தெரிவிக் கின்றன.

மும்பையில் சீவரி எனும் பகுதியில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த சிலிண்டர்களில் ஒன்றில் இருந்து குளோரின் வாயு நேற்று அதிகாலை கசிந்துள்ளது.

இதனால் நச்சு வாயு கலந்த காற்றை சுவாசித்ததால்,அப் பகுதியைச் சேர்ந்த 60 க்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டனர். அவர் கள் அனைவரும் உடனடியாக அருகிலுள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இவ்வாறு மருத்துவமனையில் அனுமதிக் கப்பட்டுள்ளவர்களில் 14 பேர் மாணவர்கள் என்றும், ஒரு மாணவர் உட்பட 6 பேரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளதாகவும் அதி காரிகள் தெரிவித்துள்ளனர்.

வாயுக்கசிவு குறித்த தகவல் கிடைத்ததும், தீயணைப்புப் படையினர் சம்பவ இடத்துக்கு விரைந்தனர்.அடுக்கி வைக்கப்பட்டிருந்த சிலிண்டர்களை சோதனையிட்டனர்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, அப்பகுதியில் இருந்து மக்கள் வெளியேற்றப் பட்டதுடன் இந்த வாயுக்கசிவு தொடர்பாக மும்பை பொலிஸார் தீவிர விசாரணை மேற் கொண்டு வருகின்றனர். (6)

# ஐ.நா.பாதுகாப்பு சபையில் சீர்திருத்தம் மேற்கொள்ள வேண்டியது அவசியம்

## இந்தியா வலியுறுத்து

(நியூயோர்க்)

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் சீர்திருத்தம் மேற்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம் என்று இந்தியா வலியுறுத்தியுள்ளது.

பாதுகாப்புச் சபையை விரிவுபடுத்தும் அதே சமயம் நிரந்தர உறுப்பினர்கள் மற்றும் நிரந்தரம் அல்லாத உறுப்பினர்களின் எண் ணிக்கையையும் அதிகரிக்க வேண்டும் என் றும் இந்தியா சுட்டிக் காட்டியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபைக்கான இந்தியத் தூதர் ஹர்பீரித் சிங் பூரி இக்கருத்தை வலியு றுத்தியுள்ளார். இந்தியாவின் இக்கருத்தை பல நாடுகளும் வரவேற்றுள்ளன.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் நிரந்தர உறுப்பினர் அந்தஸ்து அளிக்க வேண்டும் என இந்தியா , ஜப்பான் , ஜெர் மனி , பிரேஸில் ஆகிய ஜி-4 நாடுகள் வலி யுறுத்தி வருகின்றன.

இந்த ஆண்டு நடைபெற உள்ள கூட் டத்தில் உறுப்பு நாடுகள் தங்களது கருத்து களை அளிக்குமாறு ஐக்கிய நாடுகள் பாது காப்புக் சபையின் தலைவர் ஜாஹிர் தனின் குறிப்பிட்டுள்ளார்.

உறுப்பினர்கள் அளிக்கும் பரிந்துரை களை கலந்துரையாடல் மூலம் தீர்மானிக் கலாம் என்றும் தெரிவித்துள்ளதுடன் , ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடு களின் செயல் குழு கடந்த 15 ஆண்டுகளாக எவ்வித முன்னேற்றமும் இன்றி செயல்பட்ட தால் கடந்த ஆண்டிலேயே கலைக்கப்பட்டது.

பாதுகாப்பு மற்றும் அமைதி தொடர்பான முடிவுகள் எடுப்பதில் புதிதாக அதிக உறுப் பினர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டால் முடிவு எடுப்பது சிரமம் என்பதாலேயே நிரந்தர உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிக ரிக்க வேண்டாம் என்று ஒரு தரப்பினர் வலியு றுத்துகின்றனர்.

அதிக உறுப்பினர்களானால் ஒருமித்த கருத்தை எட்ட முடியாமல் போய் விடுகிறது என்றும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

பாதுகாப்புச் சபையில் அதிக எண்ணிக் கையில் நிரந்த உறுப்பினர்கள் இடம்பெற்றால் பாதுகாப்பு சபை உடையாது. அது மிகுந்த வலிமையுடன் செயல்படும் என்று நிரந்தர உறுப்பினர் அந்தஸ்து கோரும் நாடுகளைச் சேர்ந்தவர்கள் வலியுறுத்துகின்றனர்.

பாகிஸ்தான் தலைமையில் இத்தாலி உள்ளிட்ட 40 நாடுகள் இந்தியா , ஜப்பான் , ஜெர்மனி , பிரேஸில் உள்ளிட்ட ஜி-4 நாடு களின் கோரிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக் கின்றன. (6)




# 22 வயதில் பேராசிரியராக நியமனம் பெற்று சாதனை


(மும்பை)

பீகாரை சேர்ந்த ததாகத் துளசி (வயது 22) என்ற இளம் மேதை, பாம்பே இந்தியத் தொழில்நுட்பக் கழகத்தின் (ஐ.ஐ.டி) உதவி பேராசிரியராக நியமிக்கப்பட்டுள்ளார். மிகக் குறைந்த வயதில் ஒருவர் ஐ.ஐ.டியில் பேராசி ரியராக நியமிக்கப்படுவது இதுவே முதல் முறையாகும்.

தன் 9 வயதில் இறுதிப் படிப்பை முடித்த இவர் 10 வயதில் பி.எஸ்.சி.பட்டம் பெற்றார். 12 வயதில் எம்.எஸ்.சி பட்டம் பெற்றார்.பின் தன் 21 வயதில், " க்வான்டம் கம்யூட்டிங்" என்ற தலைப்பில் ஆய்வு செய்து, இந்திய அறிவியல் கழகத்திடமிருந்து முனைவர் பட்டம் பெற்றார்.

கனடாவிலுள்ள வாட்டர்லூ பல்கலைக் கழகம் அபரிமிதமான சம்பளத்தில், இவரை தன் நிறுவனத்தில் பேராசிரியராக நியமிக்க விரும்பியது.

ஆனால் ததாகத் மறுத்துவிட்டார்.



2003 இல் உலகப் புகழ்பெற்ற " டைம்' நாளிதழ், சாதனை புரிந்த இளையவயதினர் ஏழு பேரில் இவரை ஒருவராகக் குறிப்பிட்டு பெருமை அளித்தது. போபாலிலு ள்ள இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி (ஐ.ஐ. எஸ். ஆர்), நிறுவனம் ஒரு நல்ல வேலை வாய்ப்பை இவருக்கு அளிக்க முன்வந்தது. தற்போது, மும்பாய் ஐ.ஐ.டியின் இயக்கு நர் பேராசிரியர் தேவங் விககார், ததாகத் ஐ.ஐ.டியில் உதவிப் பேராசிரியராக நியமனம் செய்யப்பட்டுள்ளதாக, அவருக்கு நியமனக் கடிதம் அனுப்பியுள்ளார். ஐ.ஐ.டியில் இயற் பியல் துறையில் அடுத்த வாரம் உதவி பேராசிரியர் பணியில் இணையவுள்ளார்.(6)

# என் மீதான நடவடிக்கை பற்றிக் கவலையில்லை

## நடிகை அசின் பரபரப்புப் பேட்டி

என் மீது வேண்டும் என்றே சர்ச்சையை கிளப்புகிறவர்களைப் பற்றி எனக்கு கவலை இல்லை என்று அசின் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைத் தமிழர்கள் இனப்படு கொலை காரணமாக, தென்னிந்தியத் திரைப் பட கூட்டமைப்பு, நடிகர் ,நடிகைகள் யாரும் இலங்கைக்கு செல்ல அனுமதியில்லை என தடை விதித்திருந்தது.

இந்நிலையில் நடிகை அசின் 'ரெடி' என்ற இந்தியப் படப்பிடிப்புக்காக இலங்கை வந்துள்ளார். இதனால், தமிழ்த்திரையுலகில் பெரும் சர்ச்சை நிலவிவருகிறது.

தென்னிந்தியத் திரைப்பட கூட்டமைப்பு விதித்திருந்த தடையை . மீறி, இலங்கை சென்ற அசின் மீது நடவடிக்கை எடுக்கப் படுவது உறுதி என்று நடிகர் சங்கப் பொதுச் செயலாளர் ராதாரவி கூறியுள்ளார். இதற்கு பதில் கூறும் வகையில், அசின் அளித் துள்ள பேட்டியில்,


நான் இலங்கை சென்றது அந்த நாட்டின் அரசாங்கத்திற்கு ஆதரவு தெரிவிப்பதற்காக அல்ல. என்வேலைக்காக தான் நான் இலங் கை சென்றேன். 'ரெடி' படத்தில் நடிப்பதற்கு ஏற்கனவே நான் சம்மதித்த படம். அந்தப் படத்தின் படப்பிடிப்பை இலங்கையில் நடத் தியது என் கையில் இல்லை. அது தயாரிப் பாளரும் இயக்குநர் முடிவு செய்த விடயமா கும்.

இலங்கை சென்றபின், அங்குள்ள தமிழர்கள் படும் துயரங்களைக் கேட்டறிந்து அவர்களுக்கு உதவி செய்ய முடிவு செய் தேன். தமிழர்கள் அதிகம் வாழும் பகுதியும் விடுதலைப்புலிகள் அதிகம் இருந்த இடமு மான யாழ்ப்பாணத்திற்கு தைரியமாக சென் றேன்.

கடந்த 32 வருடங்களாக அந்தப் பகுதி க்கு எந்த ஒரு முக்கிய பிரமுக்ரும் செல்ல வில்லை. ஆனால், ஒரு பெண்ணாக இருந் தும் நான் துணிச்சலாக சென்றுள்ளேன்.

யாழ்ப்பாணத்தில் உள்ள மருத்துவ மனையில் நோயினால் பாதிக்கப்பட்ட தமிழர் களைப் பார்த்து கண்கலங்கினேன். அவர் களுக்கு உதவுவதற்காக ஒரு அறக்கட்டளை தொடங்கி இருக்கிறேன்.

அதன்மூலம் இலவச கண்சிகிச்சை நடத்தி , 300க்கும் மேற்பட்ட தமிழர்களுக்கு என் சொந்த செலவில் கண் சத்திர சிக்சை நடத்தி னேன்.இந்தியாவில் இருந்து கண் மருத்து வத்தில் புகழ்பெற்ற 5 மருத்துவர்களை என் சொந்த செலவில் வரவழைத்து இந்தக் கண் சிகிச்சை முகாமை நடத்தினேன்.



ஒரு நோயாளிக்கான லென்சின் விலை 5 ஆயிரம் ரூபாய். நான் 10ஆயிரம் பேருக்கு இலவச கண் அறுவைச் சிகிச்சை நடத்த திட்டமிட்டிருக்கி றேன் இப்படி இலங்கைத் தமிழர் களுக்கு உதவி செய்வது தவறா? என் மீது எதற்காக நடவடிக்கை எடுக்கப் போகி றீர்கள்? நான் இலங்கைத் தமிழர்களுக்கு உதவியதற்கா கவா? இலங்கையில் நடந்த போரில் பெற் றோரை இழந்த ஒருவயது முதல் 16 வயது வரை உள்ள 150 பெண்களை தத்தெடுத்து இருக்கிறேன்.

இது தவறா? என் மீது வேண்டும் என்றே சர்ச்சையை கிளப்பி விடுகிறார்கள். தமிழ் நாட்டில் இருந்து கொண்டே தொடர்ந்து பேசுவதை விட அறிக்கை விடு வதை விட இலங்கைக்கு வந்து இங்குள்ள தமிழர்க ளுக்கு உதவலாமே.

யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழர்கள் அக்கா தமிழ்நாட்டில் இருந்து யாரும் எங்களைப் பார்க்க வராதது ஏன்? என்று கேட்கிறார்கள்.

மேலும் அவர்கள் விஜய் அண்ணா வையும் சூர்யா அண்ணாவையும் வரச் சொல் லுங்கள் அக்கா என்றும் கேட்கிறார்கள். ஒரு சிலர் என்மீது வேண்டும் என்றே சர்ச்சையை கிளப்பி விடுகிறார்கள். அது பற்றி எனக்கு கவலை இல்லை எனக்கு சரி என்று தோன்றி யதைத் தான் நான் செய்கிறேன் என்று நடிகை அசின் கூறினார். (6)



தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரம் அருகே , உள்ள சிந்தலக் கரையில், உலக நன்மைக்காக 42 அடி உயர வெட்காளியம்மனுக்கு 108 லீற்றர் பாலாபிஷேகம் நடந்தது. ஏராளமான பக்தர்கள் தரிசனம் செய்தனர்.

இவ்வுலகில் கடமைப் பாதையே – மறு உலகில் சொர்க்கத்தின் பாதை. – இஸ்ரேல்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# யாழ்.மாவட்டத்தின் புதிய அரச அதிபருக்கு ஓர் அன்பு மடல்

யாழ்ப்பாண மாவட்டத்தின் அரச அதிபராகப் பதவியேற்றிருக்கும் தங்களுக்கு வாழ்த்துக்களுடன் கூடிய வணக்கங்கள்,

யாழ்ப்பாண மாவட்டத்தின் முதலாவது பெண் அரச அதிபர் என்ற பெருமையைத் தாங்கள் ஏற்றுக்கொள்வது இறைவன் தங்களுக்குத் தந்த சிறப்பு எனலாம்.

யாழ் மாவட்டத்தைப் பொறுத்தவரை மாவட்டச் செயலகத்தின் பணிகள் முதன்மையானவையாக உள்ளன.

யாழ். அரச அதிபராக கே.கணேஷ் அவர்கள் கடமையாற்றிய காலத்தில் அவரின் அணுகுமுறைகள் யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்துத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்களின் பணிகளை செயற்றிறன் மிக்கதாக்கின.

யாழ்ப்பாண செயலகம் புதுமைப்படுத்தப்பட்டது.

யாழ்.மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் மக்கள் பணிக்கு முதன்மையளித்தன.

இவ்வாறு கே.கணேஷ் அவர்களின் காலத்தில் யாழ் மாவட்டத்தில் ஏற்பட்ட நிர்வாகச் சீராக்கம் தங்களின் காலத்திலும் ஏற்பட வேண்டும்; தொடர வேண்டுமென விரும்புகின்றோம்.

இதற்குப் பொதுமக்கள், பொது அமைப்புக்களுடனான நல்லுறவு மிகமிக அவசியமானதாகும்.

“மக்களைத் தேடிச் செல்லுங்கள். அவர்கள் மீது அன்பு செலுத்துங்கள். அவர்களோடு சேர்ந்து திட்டமிடுங்கள். அவர்களுக்காக பணியாற்றுங்கள்...” என ஜேம்ஸ் யென் கூறிய வார்த்தைகளை இவ்விடத்தில் ஞாபகப்படுத்திக் கொள்ள விரும்புகின்றோம்.

துன்பத்தால் துவண்டுபோயுள்ள மக்கள் மீது அன்புசெலுத்துங்கள். அரச சேவையை பெற்றுக் கொள்வதற்காக ஏழை மக்கள் அலைவதற்கு ஒருபோதும் இடம் கொடாதீர்கள்.

உங்களால் முடிந்தவரை ஏழை மக்களின் கல்வி, பொருளாதார, சமூக முன்னேற்றத்திற்காக உதவுங்கள். நிச்சயம் இறைவன் உங்களை ஆசீர்வதிப்பான்.

இக்கட்டான போர்ச்சூழலில் அர்ப்பணிப்போடு அரச அதிபராக கடமையாற்றிய கே.கணேஷ் அவர்களின் சேவையை மக்கள் நன்றிப் பெருக்கோடு நினைந்து கொள்கின்றனர்.

ஒருசிலர் அவர்மீது குறை கூறலாம். காந்தியை சுட்டுக் கொல்வதற்கு ஒரு கோட்சே இருப்பானாயின், அர்ப்பணிப்போடு அரச சேவையாற்றிய அரச அதிபர் கே.கணேஷ் அவர்கள் மீது குறைகாண்பதற்கு கோட்சேக்கள் இல்லாமல் போய்விட மாட்டார்கள்.

எனவே குறை கூறுபவர்கள் பற்றி நமக்கு கவலை வேண்டாம். இந்த உலகம் நல்லதும் கெட்டதும் கலந்தது. கெடுதி இழைப்போர் அதற்கான தண்டனையை நிச்சயம் பெறுவர். அதனை அவன் பார்த்துக் கொள்வான். நீங்கள் உங்கள் தூய பணியைத் தொடருங்கள். உங்கள் பணியால் ஏழை மக்களின் முகங்களில் சிரிப்பு எழட்டும்.

எத்தனையோ விதவைப் பெண்கள் அவர்களை தேடிச் செல்லுங்கள். உங்கள் கரங்களை அவர்களின் தோள்களில் வைத்து அஞ்சாதே நான் உனக்கு தாயாக, சகோதரியாக இருப்பேன் என்று ஆறுதல் கூறுங்கள். அழுதழுது முகம் காய்ந்துபோன அந்த அபலைப் பெண்களின் முகங்களில் சிரிப்பு ரேகைகள் படரட்டும்.

அரசு அல்ல; அந்த ஆண்டவனே வந்தாலும் இனப் பற்றோடு, எங்கள் மக்களுக்கான சேவையைத் தொடருங்கள்.

உங்கள் முன்னும் பின்னும் மேய்ப்பன் மெய்ப் பாதுகாவலனாக வருவான். இது உறுதி. ஆமென்.

# வவுனியா மெனிக் பாம் நிலப்பரப்பை ஆக்கிரமிப்பதில் பலர் முனைப்பு

(கொழும்பு)

இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள மக்கள் தற்போது மீளக் குடியேற்றப்பட்டு வரும் நிலையில் மக்கள் தங்க வைக்கப்பட்டிருந்த அரச நிலமான மெனிக் பாம் நிலப்பரப்பை ஆக்கிரமிப்பதில் பலர் முனைப்புக் காட்டி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டு வருகின்ற நிலையில் பல முகாம்கள் மூடப்பட்டு வெறிச்சோடி காணப்படுகின்றன. இவ்வாறு காணப்படும் நிலப்பிரதேசங்களைக் கைப்பற்றுவதில் அமைச்சர்களின் புதல்வர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் நண்பர்களும் ஓய்வுபெற்ற முன்னாள் இராணுவ அதிகாரிகளும் முனைப்புக்காட்டிவருவதாக செய்தி ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இடம் பெயர்க்கப்பட்ட மக்கள் தங்க வைப்பதற்கான முகாம் அமைப்பதற்காக 2 ஆயிரம் ஏக்கர் அரச நிலமே வழங்கப்பட்டது.

அத்துடன் காடுகள் அழிக்கப்பட்டு நீர், மின்சாரம், போக்குவரத்துக்கான பாதை வசதிகள் என்பன ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டமையினால் இந்த பகுதியை கைப்பற்றுவதில் அவர்கள் முனைப்புக்காட்டுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான நிலையில் இந்த நிலத்தில் தமக்கும் பங்குண்டென ஒருவர் உரிமை கொண்டாடிவருகின்றார். அரசியல்வாதி ஒருவரின் புதல்வர் ஒருவர் குறித்த நிலப்பரப்பில் 60 ஏக்கர் நிலத்தினை இரண்டு நபர்களிடம் பணம் கொடுத்து பெற்றுக் கொண்டதாகவும் இதனை சட்டத்தரணியின் உறுதியுடன் பெற்றுக்கொண்டதாகவும் தெரிவிப்பதுடன் அந்த நிலத்தை தனக்கு பெற்றுத்தருமாறும் குறித்த நிலப்பகுதிக்கு பொறுப்பாக செயல்படும் அரச அதிகாரி ஒருவருக்கு அழுத்தம் கொடுத்துவருகிறார்.

ஆனால் இந்த நிலம் யாருக்கும் விற்கப்படவில்லை எனவும் இது அரசாங்கத்துக்கு சொந்தமானது எனவும் அமைச்சரின் மகன் போலியாக தயாரித்த ஆவணத்தையே காண்பித்து வருவதாகவும் கூறப்படுகிறது.

இந்த நிலையில் இந்தச் சம்பவம் குறித்த அதிகாரியை விட உயர்பதவிகளில் வகிப்பவரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டாலும் பொறுப்பான அந்த அதிகாரி தொடர்ந்தும் அழுத்தங்களுக்கு உள்ளாக்கப்பட்டு வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றது.

இதேவேளை ஜனாதிபதியின் புதல்வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷவின் நண்பர் ஒருவர் வவுனியா பொது வைத்திய சாலையில் வைத்தியராக கடமையாற்றி வருகின்றார்.

இவர் தான் நாமல் ராஜபக்ஷவின் நண்பன் எனக் கூறிக் கொண்டு குறித்த மெனிக் பாம் முகாமில் தனக்கென 250 ஏக்கர் நிலத்தைக் கொடுக்கும் படியும் இந்த நிலத்தில் கால் நடை மற்றும் மாந்தோட்டம் என்பவற்றை அமைக்கவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். (ச–5)

# திறந்த பாடசாலை பிரதேச நிலையத்தை ஆரம்பித்தல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட பிரதேசமான சாந்தை கிராமத்தில் உள்ள விநாயகர் கல்வி வளர்ச்சிக் கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள திறந்த பாடசாலை பிரதேச நிலையம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு வலிகாமம் கல்வி வலய கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் திறந்து வைக்கவுள்ளார். (4–6)

# இலவசக் கருத்தரங்கும் ஒரு நாள்வேலைத்திட்டமும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை அச்சகத்தார் சம்மேளனத்தில் நிறைவேற்றுக் குழுவினரின் ஏற்பாட்டில் வீரகேசரி நாளிதழ் இணைந்து வழங்கும் இலவசக் கருத்தரங்கு மற்றும் ஒரு நாள் வேலைத் திட்டம் என்பன நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை நல்லூர் இளம் கலைஞர் மன்ற கலா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் கொழும்பில் உள்ள முன்னணி அச்சகத்துறையினரின் கருத்துப் பரிமாறும் நிகழ்வும் இடம்பெறவுள்ளதால் யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல அச்சகத்தினரையும் தவறாது சமூகமளிக்குமாறு ஏற்பாட் டாளர்கள் அறிவித்துள்ளனர். (6–4)

# தமிழக மீனவரின் சடலமே மீட்பு?

(கொழும்பு)

மன்னார் மாவட்டத்தின் தலைமன்னார் நடுக்குடா பகுதியில் மீட்கப்பட்ட ஆணின் சடலம் இலங்கை கடற்படையின் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழக மீனவர் ஒருவருடையதாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

மஞ்சள் நிறக் காற்சட்டை அணிந்த நிலையில் இது காணப்பட்டது.

இச்சடலம் தொடர்பான விசாரணைகளை மன்னார் நீதவான் நீதிமன்ற நீதிவான் கே.ஜீவராணி மேற்கொண்டார். மேலதிக விசாரணைகளுக்காக சடலத்தை அனுராதபுரம் போதனாவைத்தியசாலைக்கு அனுப்பி வைக்குமாறு அவர் உத்தரவிட்டுள்ளார். (ச–5)

# கட்டடத் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பிரதேச சபை கச்சாய் பொது நூலக சிறுவர் பகுதிக்கான கட்டடத் திறப்பு விழா இன்று வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (4)

# பொருளியல் பாட கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

க.பொ.த.உயர் தரத்தில் பொருளியல் பாடத்தில் தோற்றவுள்ள மாணவர்களுக் கான கருத்தரங்கு சீமா நிறுவனத்தினால் இன்றும் நாளையும் காலை 8மணி முதல் 1 மணி வரை யாழ். இந்துக்கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

இக்கருத்தரங்கை கொழும்பு பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ரவீந்திரகுமாரன் ,கலாநிதி கணேசமூர்த்தி ஆகியோர் நடத்தவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (6–7)

# இல்லாத ஆற்றலை அளித்தவர் பாபா

ஒரு நாள் கைலாச பிள்ளையார் கோவிலடியில் மைந்துள்ள பாபாவின் சமாதிக்கு சென்றிருந்தேன். அவ்வேளை பொன்னம்பலம் ஆசிரியர் அவர்கள் என்னுடன் கதைத்து விட்டு பாபாவைப் பற்றி பேசுவீர்களா என வினவினார் எல்லாம் பாபாவின் விருப்பம் என்றேன். உடனே அவர் ஒரு நாளினை குறித்து அன்று வாருங்கள் என்றார். நானும் குறித்த நாளில் பயபக்தியாக சமித்தியடைந்த போது ஆசிரியர் அவர்களும் மேலும் மூவர் மாத்திரமே இருந்தனர். எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. நெஞ்சே கனத்தது. கண்ணீர் இமையை இடித்தது. பாபாவை வணங்கி என்னை ஆதவாகப்படுத்தி அவர்களின் சத்சங்கத்தில் அமர்ந்து பின்னர் வீடேகினேன். ஆசிரியர் சொன்ன விடயத்தை நான் பிழையாக விளங்கிக் கொண்டேன் என்பதை பின்னர் உணர்ந்து கொண்டேன். ஆனால் இம் ஏமாற்றத்தை யாரிடம் சொல்வது சுவாமியிடமே சொல்லிவந்தேன். தெய்வ நிந்தனையின் பயனோ என்றும் ஏங்கினேன்.

சிலநாட்கள் கழிந்து திருநெல்வேலியிலுள்ள சாயி மாதாவின் சமித்திக்கு சென்றிருந்தேன். அன்று சீரடி பாபாவின் திருப்பூசை. ஆலயத்துள் நான் சென்று அமரும் வேளை பாபாவின் முழு நேர அடியவர் ஈஸ்வரலிங்கம் ஐயா அவர்கள் என் முதுகினில் மெல்லக் கைவைத்து வெளியில் அழைத்தார். சீரடி சுவாமி குறித்து பேச வேண்டும் என்றார்.



நானும் மனதில் இருந்த அவாவில் ஆம் என்றேன். ஆம் என்ற பின் தான் என்னை உணர்ந்தேன் இப்பெரும் அடியார்கள் மத்தியில் அதுவும் இறைவன் சந்நிதானத்தில் பழிப்பு இல்லாத உரையாக எவ்வாறு பேசுவேன் என்ற ஏக்கம் சுவாமி எல்லாம் உன்னைப் பொறுத்தது என்று அமர்ந்து கொண்டேன். நேரம் வந்ததும் பேச அழைக்கப்பட்டேன் சாயிராம் என்ற அபயம் என்ன பேசினேன் என்பது உண்மையாக எனக்குத் தெரியாது சுவாமியின் மேல் பட்ட ஆர்வமே பேச வைத்தது மட்டும் எனக்குத் தெரியும்.

ஈற்றில் ஈஸ்வரலிங்கம் ஐயா தனது உரையில் மிகவும் நன்றாக அமைந்தது பேச்சு என்றார் அப்போது உணர்ந்து கொண்டேன். சுவாமியின் ஆளுகைக்கு உட்பட்டேன் என்பதை தன்னை நம்பியவர் ஏமாறக் கூடாது என்ற திண்ணம் படைத்தவர் இல்லாத ஆற்றலை அளித்தவர் பாபா இப் பேற்றை அடைந்தவன் யாதவன்.

**ஜெய்சாயிராம் யாதவன்**

# சீனாவில் தொடர்ந்து அடைமழை; நிலச்சரிவில் சிக்கி 17 பேர் பலி



(பீஜிங்)

சீனாவில் பெய்து வரும் அடை மழையால் அங்கு மலைப்பகுதியில் கடந்த செவ்வாய்க் கிழமை சில இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் 17 பேர் உயிரிழந்தனர் 44 பேரைக் காணவில்லை.

சீனாவில் செவ்வாய்க்கிழமை பலத்த மழை பெய்தது. இதில் யூனான் மாகாணத்தின் மலைப்பிரதேசத்தில் நிலச்சரிவு ஏற்பட்டது. மண்சரிந்து மலையடிவாரத்தில் இருந்த வீடுகளில் விழுந்ததில் இதில் 4 பேர் உயிரிழந்தனர்.

அதேபோலசிஜுவான் மாகா ணத்தில் உள்ள மலையிலும் நிலச்சரிவு ஏற்பட்டது. மண் சரிந்து மலையடிவார நகரங்களான யந்தாய் சிமாவுக்குள் விழுந்தது. இதில் 13 பேர் உயிரிழந்தனர். 53 பேர் காயமடைந்தனர். இந்த நிலச்சரிவுகளில் சிக்கிய 44 பேரின் நிலைமை என்னவென்று தெரியவில்லை. அவர்களை மீட்கும் பணியில் மீட்புக் குழுவினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை சீனாவில் பெய்து வரும் கடும் மழையில் கடந்த ஒரு மாதத்தில் மட்டும் வெள்ளத்தில் சிக்கி 567 பேர் பலியாகியுள்ளனர். 257 பேரைக் காணவில்லை. அவர்களின் நிலைமை என்னவென்று தெரியவில்லை. தொடர்ந்து மழை பெய்வதால் அங்கு பல அணைக்கட்டுகளின் நீர் அளவு அபாய மட்டத்தை தொடும் நிலை உள்ளது. ஆறுகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது.

சில ஆறுகளின் கரைகள் பலமிழந்து காணப்படுவதால் உடைப்பு ஏற்படும் அபாயம் உள்ளது. இதுபோன்ற ஆறுகளின் கரையையொட்டிய கிராமங்களில் வாழும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

தாஷா ஆற்றின் கரையில் 200 மீற்றர் அளவுக்கு உடைப்பு ஏற்பட்டுள்ளது. அதை சரி செய்யும் பணியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். உடைப்பில் மணல் மூட்டைகளை வைத்து அடுக்குகின்றனர். எனினும் தண்ணீரை அடைப்பதில் சிரமமாக உள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். (6-4)

# பிரான்ஸில் பர்தா அணிவதற்குத் தடை

பொது இடங்களில் பெண்கள் பர்தா அணிவதை தடை செய்யும் சட்டத்துக்குத பிரான்ஸ் நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.

இந்தத் தடைக்கு ஆதரவாக 335 உறுப்பினர்களும் , எதிர்த்து ஒருவரும் வாக்களித்தனர்.

இதையடுத்து , இந்த மசோதா எதிர்வரும் செப்டெம்பரில் மேலவையில் வாக்கெடுப்புக்குச் செல்லும். இந்தச் சட்டம் அமுலுக்கு வந்தால் , பர்தா அணியும் பெண்கள் சுமார் 190 டொலர்கள் அபராதம் விதிக்கப்படுவார்கள் எனத் தெரிகிறது.

மேலும் பர்தா அணிய நிர்ப்பந்திக்கும் குடும்ப ஆண் உறுப்பினர்களுக்கு ஓர் ஆண்டு சிறைத்தண்டனை உள்ளிட்ட தண்டனைகள் கிடைக்கக் கூடும் என தெரிவிக்கப்படுகிறது.

பிரான்ஸ் ஒரு மதச்சார்பற்ற நாடாக இருக்கும் நிலையில் இந்த பர்தா தடை மக்களின் சிந்தனை உரிமை , கருத்துரிமை மற்றும் மத உரிமைகளை மீறுவதாக இருக்கும் என்று மனித உரிமை ஆர்வலர்கள் சிலர் கருத்து தெரிவித்துள்ளனர். (6)

# வைரம் பதித்த ஐபோன் விலையோ ரூ9.10 இலட்சம்



(லண்டன்)

இங்கிலாந்தில் வடிமைப்பாளர் ஒருவர் 6.5 கரட் தரம் வாய்ந்த உயர்ந்த வைரக் கற்கள் பதித்த அப்பிள் ஐபோன் 4 ரக மாதிரி போனை அறிமுகப்படுத்தி உள்ளார். இதன் விலை இந்திய மதிப்பில் ரூ.9.10 இலட்சம் ஆகும்.

லிபர்பூர் நகரை சேர்ந்த ஸ்டூவர்ட் ஹக்ஸ் என்பவர் பல்வேறு சிறப்பு அம்சங்களுடன் கூடிய பொருட்களை உருவாக்கி வருகிறார். இந்நிலையில் , பிளாட்டினம், அரிய வகை இரத்தினக் கற்கள், விலையுயர்ந்த வைரக் கற்கள், அப்பிள் முத்திரை ஆகியவற்றை இந்த ஐபோனில் பதித்துள்ளதுடன் மிகவும் கலை நயத்துடன் செய்யப்பட்ட ஐபோன் மின்னுகிறது. (6)

# உகண்டா குண்டு வெடிப்பு சம்பவம் குறித்து விசாரிக்க அமெரிக்கா முடிவு

(வோஷிங்டன்)

உகண்டாவில் நடந்த இரட்டை வெடி குண்டு சம்பவத்தை விசாரிப்பதற்காக எப்.பி.ஐ. அதிகாரிகளை அதிபர் ஒபாமா அனுப்பி வைத்துள்ளார். ஆபிரிக்க நாடான உகண்டாவின் கம்பாலா நகரில் கடந்த 11 ஆம் திகதி இரண்டு குண்டுகள் வெடித்தன.

உலகக் கோப்பை கால்பந்து போட்டியை ஏராளமான ரசிகர்கள் பார்த்துக் கொண்டிருந்த போது இக் குண்டுகள் வெடித்ததால் 74 பேர் உடல் சிதறி பலியாயினர்.


இந்த குண்டுவெடிப்பு சம்பவத்துக்கு அல்-ஷபாப் என்ற அமைப்பு பொறுப் பேற்றுள்ளதுடன் குண்டுவெடிப்பில் ஒரு அமெரிக்கர் பலியாகியுள்ளார்.

ஐந்து பேர் படுகாயமடைந் தனர். இதனால் இந்த சம்பவத்துக்கு அமெ ரிக்க அதிபர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது ஒரு கோழைத்தனமான செயல் என அவர் தெரிவித்துள்ளதுடன் இந்த குண்டு வெடிப்பு சம்பவங்கள் குறித்து உகண்டா அரசுக்கு உதவுவதற்காக எப்.பி.ஐ. அதிகாரிகள் மூன்று பேரை கம்பாலாவுக்கு அதிபர் ஒபாமா அனுப்பியுள்ளார். (6)




# உலகின் முதல் ஆளில்லா போர் விமானம்; போர் நடவடிக்கைகளில் புதிய புரட்சி



கண்டம் விட்டு கண்டம் சென்று எதிரி இலக்குகளை மிகச் சரியாகத் தாக்கும் எதிரி நாட்டு போர் விமானங்களை வழியில் மறித்துத் தாக்கும் திறன் கொண்ட உலகின் முதல் ஆளில்லா போர் விமானத்தை பிரிட்டன் தயாரித்துள்ளது.

தரானிஸ் என்று பெயரிடப்பட்டுள்ள இந்த விமானத்தின் சோதனை விமானத்தை இங்கிலாந்து பாதுகாப்புத்துறை நேற்று வெளியுலகுக்கு முதன் முறையாகக் காட்டியது.

எதிரி நாட்டு ராடர்களில் சிக்காத தொழில்நுட்பம் கொண்ட இந்த விமானத்தை இயக்க விமானிகள் தேவையில்லை.

தரையில் இருந்தவாறு வானொலி தொடர்பு மூலம் விமானத்தின் ஒவ்வொரு அசைவையும் கட்டுப்படுத்தலாம். ஏவுகணைகளை வீசலாம். குண்டுகளை வீசித்தாக்கலாம்.

விமானத்தில் உள்ள கம ராக்கள் உதவியோடு தரைக் கட்டுப்பாட்டு அறையின் திரையில் விமானத்தின் பாதையை தீர்மானிக்கலாம். மாற்றலாம். விமானம் எதிர் கொள்ளும் ஆபத்துக்களை உடனுக்குடன் அறியலாம். தாக்க வரும் விமானத்தை எதிர்த்து ஏவு கணை செலுத்தலாம்.

விமானியின் துணை இல்லாமலேயே மிக நீண்ட தூரம் கண்டம் விட்டு கண்டம் கூட செல்லும் திறன் வாய்ந்த இந்த விமானம் போர் நடவடிக்கைகளில் புதிய புரட்சியை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது வரை ஆளில்லா உளவு விமானங்கள் தான் போர் முனைகளில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த விமானங்களில் சமீப காலமாக ஏவுகணைகளையும் பொருத்தி அவ்வப் போது ஆப்கானிஸ்தான் - பாகிஸ் தான் எல்லையில் குண்டு வீச்சையும் நடத்தி வருகிறது அமெரிக்கா.

ஆப்கானிஸ்தான் இராணுவத் தளங்களில் இருந்து கிளம்பும் இந்த விமானங்களை அமெரிக்காவில் இருந்தபடி பாதுகாப்புத்துறையினர் கட்டுப்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் முழுக்க முழுக்க ஆளில்லாமல் இயங்கும் தரானிஸ் போர் விமானத்தை இங்கிலாந்து தயாரித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (6)


# மாயமான ஈரான் அணு விஞ்ஞானி அமெரிக்காவில் கண்டுபிடிப்பு

(டெக்ரான்)

ஈரான் நாட்டின் அணு விஞ்ஞானியான ஷாரம் அமிரி கடந்த ஆண்டு ஹஜ் புனித யாத்திரைக்கு சென்று இருந்தார். பின்னர் அவர் திரும்பவில்லை. எங்கு இருக்கிறார் என தெரியாத நிலை இருந்தது.

இந்த நிலையில் இவர் அமெரிக்காவின் வோஷிங்டன் நகரில் உள்ள பாகிஸ்தான் தூதரகத்தில் இருப்பது தெரியவந்துள்ளது.

மதீனாவில் இருந்த தன்னை அமெரிக்கா உளவாளிகள் கடத்திச் சென்றதாக இவர் தெரிவித்துள்ளார். ஆனால் அமெரிக்கா இதை மறுத்துள்ளதாக தெரிகிறது. (6)



சீனாவில் உள்ள தேசிய மைதானத்தில் பொருட்கள் மறுசுழற்சி விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பழைய கார்கள் மற்றும் உதிரி பொருட்கள் கொண்டு வடிவமைக்கப்பட்ட டிரான்ஸ்போமர் பட ரோபோ பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்துள்ளது.

# இலங்கை அழிந்துவிடும் அபாயம் சர்வதேச விஞ்ஞானிகள் எச்சரிக்கை

இலங்கை கடல் பெருக்கால் அழிந்து போகின்றமைக்கான பேராபத்து உண்டு என்று சர்வதேச விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளார்கள்.

அமெரிக்காவில் கொலராடோ பல்கலைக்கழகம், அந் நாட்டுத் தேசிய சுற்றுச் சூழல் ஆய்வு மையம் ஆகியன இந்து சமுத்திரம் தொடர்பான நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி ஆய்வு நடத்தின.

இந்து சமுத்திரத்தின் நீர்மட்டம் சீரற்ற முறையில் அடிக்கடி உயர்ந்து செல்கின்றமையை அவை அந்த ஆய்வில் மிகவும் கவனத்தில் கொண்டிருந்தன.

இவ்வாறு இந்து சமுத்திரத்தின் நீர்மட்டம் சீரற்ற முறையில் அடிக்கடி உயர்ந்து செல்கின்றமையால் ஒரு கட்டத்தில் இச் சமுத்திரம் பெருக்கெடுக்கக் கூடும் என்றும் இதனால் இலங்கை, பங்களாதேஷ், இந்தோனேசியா ஆகிய நாடுகள் நீருக்குள் மூழ்கி விடுகின்ற பேராபத்து உள்ளது என்றும் அந்த ஆய்வை மேற்கொண்டுள்ள விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

குறிப்பாக இந்த நாடுகளின் கரையோரப் பகுதிக்குள் நீரினுள் மூழ்கிவிடலாம் என்றும் இதனால் பாரிய மனிதப் பேரழிவுகளும், இடம் பெயர்வுகளும் இடம் பெறலாம் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சர்வதேச கால நிலை மாற்றமே இந்த அபாய நிலைக்கு காரணம் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். (ச-5)

# அரசியல் தஞ்சம் கோருவோர் உண்மையிலேயே அகதிகள்தான்

## அவுஸ்திரேலிய நிபுணர் திட்டவட்டம்

(கொழும்பு)

வெளிநாடுகளுக்கு அரசியல் தஞ்சம் தேடிவரும் ஈழத்தமிழர்களில் அனேகமானவர்கள் உண்மையிலேயே அகதிகள் தான் என்று அவுஸ்திரேலிய தேசிய பல்கலைக்கழகத்தின் பேராசிரியரும் பயங்கரவாத விவகாரங்கள் தொடர்பான சர்வதேச நிபுணர்களில் ஒருவருமான கிளைவ் வில்லியம் தெரிவித்தார்.

அவுஸ்திரேலியாவுக்கு 2008ஆம் ஆண்டு முதல் இன்று வரையான காலப் பகுதியில் சுமார் 1000 ஈழத்தமிழர் வரை அரசியல் தஞ்சம் கோரி சென்றிருக்கிறார்கள்.

ஆனால் இவர்களில் அரைவாசிக்கும் அதிகமானவர்கள் விடுதலைப் புலிகளாக அல்லது. புலிகளின் ஆதரவாளர்களாகத்தான் இருக்க வேண்டும் என்ற பிரசாரம் முடுக்கி விடப்பட்டிருக்கிறது.

இந் நிலையிலேயே இந்த ஈழத்தமிழர்களுக்கு பயங்கரவாத முத்திரை குத்திவிட முடியாதென்று தெரிவித்துள்ளார்.

இவர்களால் புலிகளின் கட்டுப்பாட்டில் மிக நீண்ட காலங்கள் வாழ்ந்திருக்கிறார்கள் என் பதற்காக இவர்களுக்கு புலி உறுப்பினர்களோ என்றோ புலி ஆதரவாளர்களோ என்றோ முத்திரை குத்துகின்றமை நியாயமல்ல என்று வற்புறுத்தியுள்ளார். (ச-5)

# நாட்டின்மீது அன்பு கொள்ளும்...

பயங்கரவாதத்தினால் அழிக்கப்பட்ட வடபகுதியின் புகையிரதப் பாதையை அமைப்பதற்கு வெளிநாடுகளிடம் கடன் பெறப்படுகின்றது இக்கடனைச் செலுத்தப்போவது யார்? இலங்கை மக்கள்தான். எனவே பேதங்களை மறந்து அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும என ஜனாதபதிமகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

அமைச்சரவையின் கூட்டம் கிளிநொச்சியில் நேற்று நடைபெற்றபின் பொது மக்களைச் சந்தித்தபோது அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

கடந்த ஆண்டு விடுதலைப் புலிகள் அமைப்பை இராணுவ ரீதியாக வென்றதாக அரசு தெரிவித்த பின் கிளிநொச்சியில் இந்த அமைச்சரவைக் கூட்டம் இடம் பெற்றது.

வட இலங்கையில் நிரந்தர இராணுவ முகாம்கள் இருக்கும் என இந்தக் கூட்டத்தில் அரசு உறுதி செய்தது.

இலங்கை அரசாங்கம் இடம் பெயர்ந்த வடக்கு பகுதி மக்களை மீள் குடியேற்றும் நடவடிக்கைகளை நிகரற்ற வேகத்தில் செய்துள்ளது.

அரச அதிகாரிகள் உள்ளூர்மக்களின் வாழ்வாதாரங்களை கட்டியெழுப்பும் நடவடிக்கையில் ஈடுபடவேண்டும் என்றார்.

எமக்கு நாட்டுமக்கள் எல்லாருமே ஒன்றுதான். அனைத்து மக்களுக்கும் எல்லா வசதிகளும் ஒரேமாதிரியாக கிடைக்கவேண்டும். அதுவே சமத்துவம். அதுவே சம உரிமை. ஒரேநாடு, ஒரேமக்கள், ஒரே நீதி அதுவே எமது வழி. நாட்டில் எல்லோரும் சுயகௌரவத்துடன் வாழவேண்டும்.

அதனை நாம் நிறைவேற்றப்போகிறோம். இனவாதம், பிரிவினைவாதம், அகங்கார வாதம் இனி வேண்டாம். இந்தச்சிறுபான்மை என யாரும் இல்லை நாட்டின் மீது அன்பு கொள்ளும் அனைவரும் இலங்கையர்களே ஆவார்.

அபிவிருத்திப்பாதையில் இலங்கை முக்கிய கேந்திர நிலையமாக உருவாகும். எப்போதும் ஜனநாயகம் பாதுகாப்பாக இருக்க வேண்டும் ஜனநாயக ரீதியில் செயற்பட தற்போது மக்களுக்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது என்றார்.

அரசியல் வாதிகள் மக்கள் தப்பான வழிகளில் கொண்டு செல்லவேண்டாம் என கேட்டுக்கொண்டுள்ள ஜனாதிபதி; இனரீதியான, மதரீதியான, மொழிரீதியான, மாகாணரீதியான குறுகியஅரசியல் நோக்கம் இனி வேண்டாம் என்றும் இதன்போது தெரிவித்தார்.

இதேவேளை கிளிநொச்சியில் தமது அமைச்சரவைக் கூட்டத்தை நடத்தியுள்ள தன் மூலம் நாடுமுழுவதும் தமது அதிகாரம் செல்லுபடியாகிறது என்பதையும் பிரிவினை வாத நாட்கள் ஒழிந்துவிட்டன என்பதையும் அரசாங்கம் வலியுறுத்தியுள்ளது என்று ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் வட பகுதி தற்போது இயல்பு நிலைக்கு திரும்பத் தொடங்கியுள்ளது என்று அதிகாரிகள் கூறினாலும் அங்கு நிரந்தர இராணுவ முகாம்கள் இருக்கும் என்கிற செய்தி அவர்களை கவலையடையச்செய்கிறது என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

பெரும்பாலும்சிங்கள மக்களைக் கொண்ட இராணுவத்தின் முகாம்கள்வட பகுதியில் நிரந்தரமாக அமையும்போது அவர்களுக்கான புதிய வீடுகளும் அமைக்கப்படும் என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இக் கூட்டத்தின் நிறைவில் தையல் இயந்திரங்கள் உழவு இயந்திரங்கள், சைக்கிள்கள் என்பவற்றை ஜனாதிபதி நேற்று வழங்கினார். அதன்பின் கிளிநொச்சிப் பகுதியை சுற்றி பார்த்த பின் அவர் அங்கிருந்து புறப்பட்டார். (ச-5)


## விற்பனைக்கு

இல. 96 காதி அபூபக்கர் வீதியில் அமைந்துள்ள 2 கடைகளும் வீடும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு கொள்ளவும்
இல.33 கண்ணபுரம்
யாழ்ப்பாணம்.
மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்

T.P:0773317904, 0776559683

(1843)



## அறிவித்தல்

எமது சங்கத்தில் பதிவினை மேற்கொண்டு மணல் ஏற்றும் சேவையில் ஈடுபடும் அனைத்து உழவு இயந்திரங் களினதும் உழவு இயந்திர இழுவைப் பெட்டிகளினதும் நடப்பு வருடத்திற்குரியவரி அனுமதிப் பத்திரம், காப்புறுதிப் பத்திரம் என்பவற்றின் போட்டோ பிரதிகளையும் தங்களது உழவு இயந்திர சாரதியின் சாரதி அனுமதிப்பத்திர போட்டோப் பிரதியினையும் எதிர்வரும் (17.07.2010) சனிக்கிழ மைக்கு முன்பதாக ஒப்படைத்து நடைமுறைச் சிக்கல் களைத் தவிர்த்துக் கொள்ளவும்.

நன்றி

செயலாளர்
வடமராட்சி கிழக்கு உழவு இயந்திர
உரிமையாளர் சங்கம், குடத்தனை.

(1867)


மகேஸ்வரி நிதியத்தில் மணல் பெறுவதற்காக பணம் செலுத்துவோர் தமக்குரியமணல்கிடைக்கும்திகதிகளை அவர்கள்பணம்செலுத்தியபற் றுச்சீட்டு இலக்கத்தின் அடிப்படையில் (ட.இல) தெரிந்து கொள்ள முடியும்.

| 15 th July 2010 | | 16 th July 2010 | | 17 th July 2010 | | 19 th July 2010 | | 20th July2010 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 597 | 3692 | 597 | 3358 | 972 | 3400 | 2960 | 4014 | 333 | 3695 |
| 631 | 3750 | 631 | 3383 | 1033 | 3408 | 2426 | 3681 | 1065 | 3726 |
| 973 | 3755 | 1002 | 3386 | 1792 | 3486 | 2332 | 3823 | 1156 | 3767 |
| 1244 | 3782 | 1405 | 3396 | 1826 | 3522 | 2751 | 957 | 1808 | 3788 |
| 1730 | 3792 | 1792 | 3408 | 2041 | 3597 | 2777 | 2938 | 1842 | 3805 |
| 1786 | 3823 | 1826 | 3486 | 2110 | 3600 | 2695 | 2938 | 1852 | 3823 |
| 1792 | 3839 | 2043 | 3522 | 2153 | 3645 | 2570 | 3054 | 2093 | 3854 |
| 2044 | 3900 | 2110 | 3598 | 2194 | 3664 | 2403 | 4443 | 2332 | 3882 |
| 2095 | 3901 | 2123 | 3642 | 2357 | 3668 | 2774 | 5131 | 2396 | 3890 |
| 2150 | 3944 | 2153 | 3665 | 2382 | 3671 | 2727 | 4095 | 2545 | 3946 |
| 2153 | 3980 | 2194 | 3668 | 2397 | 3698 | 3979 | 4377 | 2575 | 3957 |
| 2310 | 3986 | 2322 | 3669 | 2426 | 3728 | 2396 | 1792 | 2695 | 3977 |
| 2331 | 3988 | 2389 | 3693 | 2444 | 3774 | 2576 | 1808 | 2726 | 3986 |
| 2356 | 3998 | 2397 | 3693 | 2469 | 3786 | 2541 | 3350 | 2751 | 4014 |
| 2389 | 4016 | 2406 | 3721 | 2543 | 3823 | 2857 | 3728 | 2778 | 4019 |
| 2414 | 4098 | 2414 | 3750 | 2571 | 3837 | 2040 | 3323 | 2790 | 4095 |
| 2423 | 4140 | 2425 | 3774 | 2577 | 3863 | 2382 | 4026 | 2815 | 4159 |
| 2454 | 4155 | 2444 | 3779 | 2693 | 3886 | 3986 | 3883 | 2861 | 4194 |
| 2647 | 4159 | 2549 | 3784 | 2755 | 3901 | 3980 | 3372 | 2869 | 4223 |
| 2691 | 4163 | 2572 | 3823 | 2757 | 3944 | 3901 | 3668 | 2881 | 4224 |
| 2744 | 4195 | 2578 | 3838 | 2776 | 3955 | 2768 | 5033 | 2938 | 4310 |
| 2749 | 4224 | 2691 | 3862 | 2791 | 3979 | 2792 | 5038 | 2980 | 4313 |
| 2773 | 4312 | 2718 | 3901 | 2847 | 3980 | 2868 | 5037 | 2983 | 4344 |
| 2830 | 4345 | 2745 | 3944 | 2856 | 3986 | 2444 | 1361 | 3009 | 4377 |
| 2831 | 4398 | 2749 | 3979 | 2938 | 4009 | 4224 | 3601 | 3044 | 4404 |
| 2916 | 4531 | 2775 | 3980 | 2938 | 4017 | 4317 | 3804 | 3081 | 4443 |
| 2931 | 4575 | 2787 | 3986 | 2938 | 4095 | 3956 | 4018 | 3111 | 4611 |
| 2931 | 4617 | 2791 | 3989 | 2983 | 4159 | 7661 | 3152 | 3114 | 4697 |
| 3015 | 4697 | 2848 | 3999 | 2995 | 4202 | 3178 | 3283 | 3126 | 4792 |
| 3039 | 4728 | 2855 | 4016 | 3015 | 4224 | 3025 | 1852 | 3138 | 4806 |
| 3088 | 4788 | 2909 | 4098 | 3037 | 4313 | 3171 | 4159 | 3153 | 4831 |
| 3093 | 4805 | 2916 | 4140 | 3044 | 4317 | 4313 | 3291 | 3172 | 4857 |
| 3106 | 4851 | 2921 | 4159 | 3081 | 4445 | 3945 | 3694 | 3197 | 4862 |
| 3134 | 4856 | 2931 | 4163 | 3108 | 4575 | 3037 | 3694 | 3203 | 5030 |
| 3147 | 4862 | 2938 | 4195 | 3109 | 4697 | 3202 | 3193 | 3222 | 5038 |
| 3166 | 4866 | 2982 | 4202 | 3113 | 4728 | 3315 | 4697 | 3224 | 5131 |
| 3168 | 4866 | 3015 | 4224 | 3136 | 4789 | 3110 | 4833 | 3233 | 5137 |
| 3198 | 5033 | 3039 | 4313 | 3149 | 4803 | 3690 | 4803 | 3270 | 5466 |
| 3199 | 5037 | 3088 | 4531 | 3164 | 4833 | 2984 | 3113 | 3283 | |
| 3206 | 5038 | 3106 | 4575 | 3170 | 4858 | 3392 | 3830 | 3291 | |
| 3225 | 5069 | 3135 | 4617 | 3192 | 4862 | 3865 | 3044 | 3293 | |
| 3228 | 5323 | 3147 | 4697 | 3193 | 4954 | 3081 | 3016 | 3303 | |
| 3272 | 5629 | 3164 | 4728 | 3201 | 5033 | 3766 | 4789 | 3316 | |
| 3286 | 7591 | 3168 | 4788 | 3217 | 5037 | 3837 | 3370 | 3326 | |
| 3296 | 7599 | 3169 | 4803 | 3228 | 5038 | 3633 | 4858 | 3350 | |
| 3301 | 7704 | 3192 | 4833 | 3290 | 5269 | 3293 | | 3370 | |
| 3308 | | 3200 | 4862 | 3293 | 7661 | 3137 | | 3390 | |
| 3340 | | 3212 | 4864 | 3299 | | 3231 | | 3401 | |
| 3344 | | 3228 | 5033 | 3301 | | 3683 | | 3490 | |
| 3356 | | 3271 | 5037 | 3323 | | 3787 | | 3540 | |
| 3383 | | 3290 | 5038 | 3336 | | 3302 | | 3602 | |
| 3396 | | 3297 | 5269 | 3350 | | 3217 | | 3648 | |
| 3405 | | 3301 | 7661 | 3357 | | 4862 | | 3655 | |
| 3522 | | 3310 | | 3357 | | 3329 | | 3681 | |
| 3665 | | 3336 | | 3358 | | 4194 | | 3682 | |
| 3692 | | 3344 | | 3392 | | 4404 | | 3695 | |

(C-654)

குறித்த தினத்தன்று குறிப்பிட்ட பற்றுச்சீட்டுக்குரிய பயனாளிக்கு மணல் கிடைக்க தவறும் பட்சத்தில் உடனடியாக 021-2226837 என்னும் இலக்கத் திற்கு அலுவலக நாட்களில் மாலை 3.30 தொடக்கம் 5.00 மணிவரை முறையிடவும்.
– தம்பித்துரை றஜீவ் (செயற்றிட்ட இணைப்பாளர்)


## தவறிவிட்டது

நடராசா ரஜனிராஜ் என்பவரது செலிங்கோ காப்புறுதி தற்காலிக பற்றுச்சீட்டு புத்தகம் (இல.1194037) தாவடிக்கும் திருநெல்வேலி சந்திக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல.77/1,செம்மணி றோட், நாயன்மார்கட்டு,நல்லூர் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும்.
தொடர்பு தொ.பே.இல :-
0776103795

(1858)



## Vehicle for sale

MITSUBISHI LANCER - CAR
12 SRI XXXX
HONDA LANCER - MOTOR CYCLE
NP TH XXXX
Contact No. 0777179911
0777741787

(1860)



## ஐரோப்பிய பயணம்

உடனடியாக ஐரோப்பிய நாடுகளுக்கான விசா பெறுவதற்கான சகல ஆலோசனைகளுக்கும்
குமாரன் : 0729699270

UK இல் கல்வி கற்க சகல ஒழுங்குகளும் செய்து தரப்படும். லக்ஷ்மி : 0757388275

Yumandi Developers & Consultant(Pvt)Ltd
Rg.No. N.(PVS)49481

(1865)





செல்லா சினிமா(நாதன்ஸ்)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
காட்சி நேரம்:- 10.30,2.30,6.00,9.00

## வழிகாட்டல் கருத்தரங்கு

இளைஞர்களுக்கான நாளை அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷவின் தலைமையில் தரம் 5 மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு இன்று காலை 8.30 மணிக்கு யாழ். இந்து ஆரம்பப்பாடசாலையில் இடம்பெறும் என யாழ்ப்பாண வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (ச-5)

## ஐ.நா. செயலரின் மீள்...

அதிகாரத்தைப் பாவிக்க முடியும்.

பாதுகாப்புச் சபை ஐ.நா. செயலாளராக மீண்டும் பான் கீ மூன் வரக் கூடாது எனத் தீர்மானம் நிறைவேற்றவும் முடியும். இந் நிலையில் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் நாடுகளின் ஆதரவைப் பெற்று மூனின் மீள் நியமனத்தைத் தடுக்க அரசு செயலில் இறங்கியுள்ளது.

ஐ.நா. செயலாளர் நாயகங்களாக இருந்த இருவர் கடந்த காலங்களில் பாதுகாப்புச் சபை எடுத்த தீர்மானங்களால் மீண்டும் அப்பதவிகளுக்கு வர முடியாமல் போனமையை அரசு நன்றாகவே அறிந்து வைத்துள்ளது.

இந் நிலையில் பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் 15 நாடுகளுக்கு இலங்கை அரசின் உயர் மட்டத் தூதுக் குழுவினர் அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

குறிப்பாக வீட்டோ அதிகாரம் உள்ள நாடுகளில் ரஷ்யா, சீனா ஆகிய இரண்டும் இலங்கையை இவ் விடயத்தில் கைவிடாது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முழுமையாக நம்பிக் கொண்டிருக்கின்றார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ச-5)

## தர்சிகாவின்...

கொள்ளப்பட்ட விசாரணையின் போது வேலணை வைத்தியசாலையின் வான் சாரதி, தர்சிகாவின் சகோதரி ஆகியோர் வாக்குமூலம் அளித்துள்ளனர்.

அத்துடன் சந்தேக நபரை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டதுடன் இம் மரண விசாரணைக்காக வேலணை வைத்தியசாலையில் கடமையாற்றிய மூன்று பணியாளர்களை விசாரணைக்கு உட்படுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ச-5,7)

## முல்லை...

அவர் மீண்டும் அரசாங்க அதிபராக முல்லைத் தீவுக்கு நியமனம் பெற் றுள்ளார்.

இதற்கிடையில் இன்று முதல் கிளிநொச்சி மாவட்டத்தின் பதில் அரசாங்க அதிபராகவும் இமெல்டா சுகுமார் செயற்படவுள்ளார்.

தற்போதைய கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு செல்வதாலேயே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள் ளது.

இதேவேளை யாழ்.அரச அதிபராக இருந்த க.கணேஷ் ஓய்வு பெற்றுள்ள நிலையில் இமெல்டா சுகுமார் நேற்று முன்தினம் அரச அதிபராகப் பதவியேற்றமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## தூதரகத்தை...

தூதுவர் அலுவலகத்தை உடனடியாக மூட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டு இந்தக் கண்டன ஆர்ப் பாட்டம் நடத்தப்பட்டதாக மேற்படி செய்திகள் கூறுகின்றன.

இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர் பழ.நெடுமாறன், ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ. உட்பட பலர் கலந்து கொண்ட இந்த ஆர்ப்பாட்டத்தின் போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உருவப் பொம்மையும் எரிக்கப்பட்டுள்ளதாகத் தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனையடுத்து இலங்கைத் தூதரகத்தைச் சென்றடைந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் அதனை மூடுவதற்கு முற்பட்ட நிலையிலேயே பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர் என்று அந்தச் செய்திகள் மேலும் கூறின.(ச-5)

## பொலிஸ்...

வைத்தியர் பிரியந்தவின் உடலில் எந்தவித காயங்களும் காணப்படவில்லை என மருத்துவ அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இது இவ்வாறிருக்க டாக்டர் பிரியந்த அனுமதிக்கப்பட்டுள்ள அதிதீவிர சிகிச்சைப் பிரிவு அமைந்துள்ள பகுதியைச்சூழ பொலிஸாரும் இராணுவத்தினரும் குவிக்கப்பட்டுப் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது. (எ-1)


Barnabas இன் மலிவு விற்பனை

உடன் விரையுங்கள் உங்கள் தெரிவுக்கு

247, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (ஸ்ரீதர் தியேட்டர் அருகில்)

5 வருட உத்தரவாதம் Life Time Free Service

247, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (ஸ்ரீதர் தியேட்டர் அருகில்)

360/1, கத்தோலிக்க அச்சக கட்டிடத் தொகுதி, யாழ்ப்பாணம்.

சுதுமலைச் சந்தி, மானிப்பாய்.

- 29" Sony Flat TV, 21" Flat TV, 14" TV மிக மிக குறைந்த விலையில்
- தற்போது 21" TV 12,490 ரூபாய் மட்டும்...
- உதை பந்தாட்ட உலகக் கிண்ண விளையாட்டைக் கண்டு களிக்க 29" TV மிகக் குறைந்த விலையில் கொள்வனவு செய்யுங்கள்.
- தற்போது எம்மிடம் எலக்றிக் சமையல் பொருட்கள் மிகக் குறைந்த விலையில்
- எங்கும் பெற முடியாத உத்தரவாதமும், விற்பனைக்குப் பிந்திய அதிவேகமான சேவையும் எம்மிடம் மட்டுமே! உடனே அழையுங்கள் 077 7448668.
- மிக மிக இலகுவான கொள்வனவு முறைமைகள் தற்போது நடைமுறையில்.
- எந்த மொத்த வியாபாரிக்கும் வியக்க வைக்கும் விசேட சலுகைகள்...
- சாவகச்சேரி, கிளிநொச்சி போன்ற இடங்களில் மொத்த வியாபாரிகள்தேவை.

(C-651)



BRITISH COUNCIL - COLOMBO

IELTS

IELTS பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் அல்லது படித்துக் கொண்டிருக்கும் யாழ்ப்பாண மாணவர்களின் நன்மைகருதி British Council - Colombo IELTS Management, Workshop ஒன்றினை நடத்த ஏற்பாடு செய்துள்ளனர். நீங்கள் எங்கு IELTS பரீட்சைக்கு ஆயத்தம் செய்தாலும் இந்த Work Shop இல் பங்கு பற்றி நன்மை அடையலாம்.

Date :17.07.2010 Saturday

Time : 09.00 a.m

அனுமதி முற்றிலும் இலவசம்.

Venue : British College of English Lecture Hall

For Information Contact

BRITISH COLLEGE OF ENGLISH

IELTS Registration Centre for British Council

143, Adiyapatham Road, Thirunelvely.

T.P:0213216027 - 0778803887

(C-653)





கலைமகள் அழகு நிலா

பயிற்சி நிலையம்

ஏழு நாட்கள் பயிற்சிகள் இடம்பெற்று பயிற்சியின் நிறைவில் தரமான சான்றிதழ் வழங்கப்படும். இப் பயிற்சியின் மூலம் ஒரு அழகு நிலையம் நடாத்தும் திறமையைப் பெற்றுக் கொள்ளலாம். இப் பயிற்சி கற்றுக் கொள்வது இலகுவானதும் அதிக வருமானம் தரக் கூடிய தொழிலாகும். பெண்களுக்கு மிக அவசியமானது. வயதெல்லை கிடையாது. கீழ் வரும் பயிற்சிகள் அனைத்தும் செயன்முறையாகும்.

பயிற்சிகள்

- Facial (ஏழு வகை)
- Threading
- Pimple Treatment
- Waxing
- Hair Stratening (2 வகை)
- Hair Perming (2 வகை)
- Hot oil Massage
- Hair Cutting
- Hair dye
- Hair Colouring
- Pedeicure Manicure
- கறுப்புக் காய்கள் இயந்திரம் மூலம் அகற்றப்படும்
- Bleaching
- Bridal make up (6 வகை)

தொடர்புகள்: 077 3719071 021 4908151

பயிற்சிக் கட்டணம்:- 4000/=

பயிற்சி ஆரம்பம் :- 19/07/2010

பயிற்சி நேரம் :- 9 மணி - பி.ப.4 மணி வரை

கலைமகள் அழகுநிலா

390, பிரதான வீதி,பஸ்ரியன் சந்தி, யாழ்ப்பாணம்.

(c-650)



தேவை

வீட்டு வேலை செய்யக் கூடிய பெண் தேவை.(தங்கி நின்று வேலைசெய்யக்கூடியவர்) கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

0776138004,0212228534

(866)



Service & Repairing On Call Service Contact Us 0212229644

PCST PC SOLUTIONS TECHNOLOGIES (PVT) LTD

305, Kasthuriyar Road, Jaffna. Tel :- 021 222 1101

M.M.V Road,Nelliyadi Tel :- 021 2264999

Available Multi HighSpeed Dongle

SAVE MONEY!!! SAVE MONEY!!! SAVE MONEY!!! SAVE MONEY!!! SAVE MONEY!!!

Great & low Price Package

3 Year's Warranty



Intel Dual Core 2.7Ghz
Intel Chipset Mother Board
250GB Harddisk
Kington 1GB Ram
DVD Writer,Atx Casing
15' LCD Monitor
650VA UPS,Keyboard
Mouse, Speaker

ONLY Rs47500/=

Great Package Deal Low Price

3 Year's Warranty



Intel Dual Core 2.7Ghz
Intel Mother Board
320GB Harddisk
Kington 1GB Ram
DVD Writer,Atx Casing
19' LCD LG Monitor
650VA UPS,Keyboard
Mouse, Speaker

ONLY Rs53500/=

Ultimate Media & Gaming Package

3 Year's Warranty



Intel Core 2 Duo 2.93Ghz
Intel Mother Board
500GB Harddisk
Kington 2GB Ram
DVD Writer,Atx Casing
19' LCD Samsung Monitor
650VA UPS,Keyboard
Mouse, Speaker

ONLY Rs66500/=



Computer Problems? Have Virus? Or Computer Just Running Slow? Spyware Trouble?

Any Computer Repair Contact Us Pc Solutions

A+Service Departmet Open 6 Days A Week
Virus & Spyware Removavle Upgrades
Repairs Cleanining & Service
Maintenance , Networking



Unbelievable Prices

Web cameras
Dongles
Pendrives
Headphones
Ribbons
Woofers
TV Cards
Printers
LCD Monitors
Mother Boards
Memories
Harddisks
DVD Writers
Casings

Visit our Showrooms at Jaffna & Nelliady, Branch

3.5 Mbps High Speed Dialog Broadband Only Rs 690/= Per Month

Also Dialog Broadband Available

| Package | Month Rent |
|---|---|
| 2GB | Rs690/= |
| 4GB | Rs990/= |
| 7GB | Rs1490/= |
| 15GB | Rs2990/= |

Contact Us Pc Solutions


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.07.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.